சக்தி மலர்

ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

டால்ஸ்டாய் கதைகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 NOV 1942
MADRAS

'கவுண்ட் லியோ டால்ஸ்டாய் எழுதிய நூல்கள் அனைத்திலும் அவருடைய சிறு கதைகள்தான் பெருங் கவர்ச்சி உள்ளவை. இவைகளைப்போன்று கதை யுலகில் இதுவரை வேறு கதைகள் தோன்றியதும் இல்லை தோன்றப் போவதும் இல்லை!

—மகாராணி கார்மோனா

டால்ஸ்டாய் கதைகள்

முதற் பாகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 NOV 1942
MADRAS

டால்ஸ்டாய் கதைகள்

[முதற் பாகம்]

894.8113

மொழிபெயர்ப்பாளர்:

ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

ஸ்ரீ ரா. விசுவநாதன்

★

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை

பதிப்புரிமை] [விலை ரூ. 1

03113

முதற்பதிப்பு
விருஷ ஆடி மீ

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), ஜி.டி. சென்னை.

பதிப்புரை

மகாத்மா காந்தியாலேயே தமது குருவெனப் புகழப் பெற்ற ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாயின் கதைகள் அனைத்தும் பல்வேறு உயரிய நீதிகளைப் புகட்டுவன; கடவுள் தன்மையை மறவாது இருக்கத் தூண்டுகோல்கள்; தமிழராகிய அனைவரும் படித்துச் சுவைக்க வேண்டிய நீதிக் களஞ்சியம்.

டால்ஸ்டாயின் நூல்களனைத்தையும் தமிழில் வெளியிட முன்வந்த எமக்கு மேன்மேலும் தமிழ் மக்கள் ஆதரவளிப்பார்களாக.

★

சக்தி காரியாலயத்தார்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	மூளையிலே கிள்ளவேண்டும் (கு. ப. ரா.)	1
2.	இரண்டு கிழவர்கள் (கு. ப. ரா.)	32
3.	அன்புள்ள இடத்தில் கடவுள் (கு. ப. ரா.)	82
4.	தீமை மயக்கும் நன்மை நிலைக்கும் (ரா. வி.)	109
5.	குழந்தைகளும் பெரியோர்களும் (கு. ப. ரா)	114
6.	வருந்தித் திருந்தியவன் (ரா. விசுவநாதன்)	119
7.	உழைப்பும் சாவும் நோயும் (ரா. விசுவநாதன்)	124
8.	மூன்று வினாக்கள் (ரா. விசுவநாதன்)	129

SHAKTI PRESS LIMITED
KARAIKUDI.
OLD MUNICIPAL BLDGS CHENNAI

டால்ஸ்டாய் சிறு கதைகள்

1. முளையிலே கிள்ளவேண்டும்

ஒரே ஒரு கிராமத்தில் **இவான் ஷேர்பகாவ்** என்ற ஒரு குடியானவன் இருந்தான். நல்ல வயது, ஊரிலேயே பெயர்போன உழைப்பாளி, நன்றாகப் பாடுபடக்கூடிய மூன்று பையன்கள்—அவன் சௌக்கியமாக இருந்தான். மூத்த பையனுக்குக் கலியாணம் ஆகிவிட்டது, நடுப்பையனுக்குக் கலியாணம் ஆகவேண்டிய வயது, கடைசிப் பயல் அப்பொழுது தான் குதிரைகள் மேய்க்கும் பருவம், உழக்கூட ஆரம்பித்து விட்டான். குடியானவனுடைய மனைவி கெட்டிக்காரி, கட்டுச்செட்டுடன் குடும்பம் நடத்தத் தெரிந்தவள். நல்ல வேளையாக மருமகளும் வாயை மூடிக்கொண்டு 'ஊர்வேலை' செய்பவளாக வாய்த்திருந்தாள். எனவே இவான் குடும்பம் குதூகலமாக வாழ்வதற்கு ஒருவிதமான தடையும் இல்லை. ஒரே ஒரு வயிற்றுக்குத்தான் வெறும் சோறுபோட வேண்டியிருந்தது. இவானின் தகப்பன் தள்ளாடும்

கிழவன்—காசநோய்வாய்ப்பட்டு ஏழு வருஷங்களாகப் படுத்தபடுக்கை.

வேண்டியது ஒன்றிலும் இவானுக்குக் குறைவே இல்லை—மூன்று குதிரைகள், குட்டி, ஒரு பசுமாடு, கன்று, பதினைந்து ஆடுகள். பெண்டுகள் வீட்டிற்கு வேண்டிய துணி பூராவும் நூற்று நெய்துவிடுவார்கள். அத்துடன்கூட வயலிலும் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆண் பிள்ளைகள் 'வெள்ளாமை' செய்வார்கள். அடுத்த அறுவடைக்கும் பிறகுகூட மிஞ்சும்படியாகத் தானியம் கிடைத்தது; வரிகளும் மற்ற சில்லறைச் செலவுகளும் 'ஓட்ஸ்' பயிரை விற்பதில் கட்டிப் போய்விடும். இந்தப்படி இவானும் இவான் குடும்பமும் கவலையின்றிக் காலம் கழித்திருக்கலாம்; அடுத்த வீட்டு கார்தே மகன் நொண்டி காப்ரியலுடன் ஏற்பட்ட தகராறு ஒன்று குறுக்கே வந்து முளைத்தது.

கிழவன் கார்தே உயிரோடிருந்த வரையிலும், இவானின் தந்தை ஓடியாடிக் குடும்பம் நடத்தின வரையிலும், இரண்டு குடும்பங்களும் அன்னியோன்னியமாக இருந்தன. பெண்டுகளுக்குச் சல்லடையோ, தொட்டியோ வேண்டி யிருந்தாலும், ஆண்களுக்குச் சாக்கு ஏதாவது வேண்டி யிருந்தாலும், திடீரென்று வண்டிச்சக்கரம் முறிந்து சட்டென்று பழுது பார்க்க முடியாமற் போனாலும், அடுத்த வீட்டில் சமயத்திற்குக் கேட்டு வாங்கிக்கொள்ளுவார்கள் ஒருவருக்கொருவர். ஒருவர் களத்தில் மற்றவர் கன்று தவறி நுழைந்துவிட்டால் அதைச் சும்மா வெளியே வெருட்டி

விட்டு "இனிமேல் உள்ளே விட்டுவிடாதே—தானியம் கிடக்கு" என்று மட்டும் சொல்லுவார்கள். குதிர் களையோ கோட்டைகளையோ காவல் காப்பது, மறைத்து வைப்பது, .ஆளில்லாதபோது வைவது—என்பதொன்றுமே அந்தக் காலத்தில் கிடையாது.

தகப்பன் காலத்தில் அப்படி, பிள்ளைகள் தலையெடுத்ததும் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

எல்லாம் ஒரு சின்ன விஷயத்தில் ஆரம்பமாயிற்று.

இவனுடைய மருமகள் ஒரு கோழி வைத்திருந்தாள். அது கொஞ்சம் பருவத்திற்கு முன்பே முட்டையிட ஆரம்பித்தது. அவள் அந்த முட்டைகளை ஈஸ்டர் பண்டிகைக்காகச் சேமிக்க ஆரம்பித்தாள். தினம் வண்டிமேட்டிற்குப் போவாள்—வண்டியில் ஒரு முட்டை இருக்கும். ஒரு நாள், கோழி, குழந்தைகளின் கலாட்டாவுக்குப் பயந்தோ என்னவோ, வேலியைத் தாண்டிப் பக்கத்து வீட்டுப் பின்தாழ்வாரத்தில் போய் முட்டையிட்டுவிட்டது. கொல்லையில் அது கூவின சத்தம் அந்தப் பெண் காதில் விழுந்தது; 'சரி, இருக்கட்டும், இப்பொழுது நேரமில்லை. ஞாயிற்றுக்கிழமை நோன்பிற்கு வீடுவாசல் பெருக்கி மெழுகவேண்டும். அப்புறம் போய் எடுத்துக்கொண்டு வருகிறேன்' என்று இருந்துவிட்டாள். பிறகு சாயந்திரம் போய் வண்டியில் பார்த்தாள்; முட்டையைக் காணோம். 'முட்டையை எடுத்து வைத்தீர்களா?' என்று மாமியாரையும் மைத்துனனையும் கேட்

டாள். 'இல்லையே!' என்றுவிட்டார்கள் அவர்கள். கடைசிப் பயல் தாராஸ், "உன் கோழி அடுத்த வீட்டுக் கொல்லைத்தாழ்வாரத்திலல்லவா முட்டையிட்டது! அப்புறம்தான் இங்கே பறந்துவந்தது" என்றான்.

பேர்வழி பெட்டையிடம் போய்ப் பார்த்தாள். அதுபாட்டிற்கு மற்றப் பறவைகளுடன் ஏற்பட்ட இடத்தில் 'அடைந்து', கண்ணைமூடித் தூங்கத் தயாராகிக்கொண்டிருந்தது. 'எங்கே போய் முட்டையிட்டாய்?' என்று அதைக் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

பிறகு அடுத்த வீட்டிற்குப் போனாள். காப்ரியலின் தாயார் அவளைப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள்.

"என்னடி பெண்ணே, என்ன விசேஷம்?"

"ஒன்றுமில்லை பாட்டி, எங்கள் வீட்டுப் பெட்டை காலையில் உங்கள் வீட்டுப் பக்கம் பறந்து வந்துவிட்டது. இங்கே முட்டை வைத்திருக்கிறதோ?"

"நாங்கள் ஒன்றும் காணவில்லையே! எங்கள் வீட்டுப் பெட்டைகளே முன்பே முட்டையிட ஆரம்பித்துவிட்டன. அதைத்தான் நாங்கள் எடுத்துச் சேர்த்து வைக்கிறோம். எங்களுக்கு எதுக்கம்மா உங்கள் வீட்டு முட்டை?"

வயதுமுறுக்கில் அந்தப் பெண் கோபத்தின் பேரில், பேச வேண்டியதற்கு மேல் கொஞ்சம் பேசிவிட்டாள். அண்டை வீட்டுக்காரி அதை வட்டியுடன்

திருப்பினுள்—இருவரும் திட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இவானின் மனைவி, கிணற்றிற்கு நீர் எடுக்கப் போயிருந்தவள் அவ்வழியாக வர நேர்ந்தது; அவளும் அதில் கலந்துகொண்டாள். காப்ரியலின் மனைவி உள்ளேயிருந்து ஓடிவந்தாள். நடந்தது, நடக்காதது—எல்லாவற்றையும் அடுக்கிக் குற்றஞ்சாட்ட ஆரம்பித்தாள். உடனே ஓர் அமளி—ஒரே சமயத்தில் எல்லோரும் சேர்ந்தாற்போல உரக்க, தடவைக்கு இரண்டு வார்த்தையாகப்பேச முயன்றுர்கள்—வாயில் வந்த வார்த்தைகளும் அவ்வளவு 'வாய்க்கு விளங்கின'வைகளும் அல்ல.

'நீ இது!' 'நீ அது!' 'நீ திருடி!' 'நீ பட்டி!', 'உன் யோக்கியதை தெரியாதோ?', 'மாமனுரைச் சோறு போடாமல் சாகவடிக்கிறவள் தானே!', 'நீ கழிசடை!'—இந்த மாதிரி!

'வாங்கிக்கொண்டு போன சல்லடையைப் பிய்த்துக் கொண்டுவந்து கொடுத்தாய், கடன்காரி! எங்கள் சும்மாட்டில் குடம் எடுத்து வருகிறுய், கொடு அதை இங்கே!'

உடனே சும்மாட்டைப் பிடித்திழுத்தார்கள்; நீர் கீழே கொட்டிப்போயிற்று. ஒருவருக் கொருவர் ஆடைகளைப் பிடித்திழுத்து சண்டைபோட ஆரம்பித்தார்கள். வயலிலிருந்து திரும்பிவந்த காப்ரியல் தன் மனைவியின் பக்கம் சேர்ந்துகொண்டான். அவ்வளவுதான். இவானும் அவன் மகனும் உள்ளேயிருந்து பாய்ந்து வந்தார்கள். இவான் நல்ல தடியனுத

லால் உடனே கூட்டத்தை வெருட்டியடித்து காப்ரிய லின் தாடியில் பிடி மயிரையும் பிய்த்து எடுத்துவிட்டான். ஊரார் கூடி விலக்கிவிட்டார்கள் கடைசியாக.

இந்தமாதிரி அது ஆரம்பித்தது.

காப்ரியல் தாடி மயிரைக் காகிதத்தில் பொட்டலம் கட்டி எடுத்துக்கொண்டு ஜில்லா கோர்ட்டுக்குப் போய் பிராது கொடுத்தான். "இந்த அம்மை வடுக்காரப் பயல் பிய்க்கவா நான் தாடி வளர்த்தேன்!" என்றான். இவனுக்குத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுத்து சைபீரியா தீவாந்தரத்திற்கு அனுப்பி வைப்பதாக காப்ரியலின் மனைவி ஊரெல்லாம் பிரதாபம் சொல்லிக் கொண்டாள். இப்படியாகக் கட்சி வலுத்தது.

திண்ணையில் இருமிக்கொண்டு கிடந்த கிழவன் முதலிலிருந்தே அவர்களுக்குப் புத்தி சொல்லிச் சமாதானமாகப் போகும்படி மன்றாடினான்; ஆனால் அவர்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

"நான் சொல்லுகிறதைக் கேளுங்கள், குழந்தைகளே, அற்ப விஷயத்திற்காக இந்த மாதிரி சண்டையிட்டுக்கொண்டு திரிவது சுத்த முட்டாள்தனம். ஒரு முட்டைக்காக! எங்கேயாவது உண்டா? அந்தக் குழந்தைகளேதான் எடுத்திருக்கட்டுமே — என்ன முழுகிப்போய்விட்டது? இன்றைக்கெல்லா மிருந்தால் ஒரு முட்டையின் விலை என்ன? கடவுள் கிருபையால் முட்டைகளுக் கென்ன குறைவு இங்கே? அவள்தான் கடுமையாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் என்ன

மோசம்? அவளுக்கு நீ நல்லதைச் சொல்லிக்காட்டித் திருத்தேன்! சண்டை போட்டால்—இதெல்லாம் தான் வரும். எல்லாரும் அப்படித்தானடா! ஒத்துப் போங்கள், சண்டை. வேண்டாம்! வைரத்திற்கு இடங்கொடுத்து வளர்த்தால் அது நமக்குத்தான் கெடுதல்."

ஆனல் இளவட்டங்கள் கிழடின் பேச்சைக் கேட்கவில்லை. கிழவன் புத்தி தடுமாறி உளறுகிறுன் என்று நினைத்தார்கள். "அந்தப் பயலுக்கு நான் ஒருநாளும் பணியமாட்டேன்!" என்றுன் இவான்.

"நான் எங்கே அவன் தாடியைப் பிய்த்தேன்? அவனுகவல்லவா வேண்டுமென்று பிய்த்துக்கொண்டிருக்கிறுன். அவன் மகன் அல்லவா என் சட்டைப் பித்தான்களையெல்லாம் பிடுங்கிக் கிழித்துவிட்டான், பார்!" என்றுன் அவன்.

இவானும் கோர்ட்டுக்குப் போனுன். ஜில்லாக் கோர்ட்டில் விசாரணை நடந்தது. விவகாரம் நடந்து கொண்டிருக்கும்பொழுதே காப்ரியல் வீட்டு வண்டியின் அச்சு மறைந்துவிட்டது, எங்கோ! இவானின் மகன்தான் அதை எடுத்திருப்பான் என்று காப்ரியல் வீட்டுப் பெண்டுகள் குற்றம் சாட்டினுர்கள்.

"நேற்றிரவு எங்கள் ஜன்னலைத் தாண்டி அவன் வண்டியண்டை போவதை நாங்கள் பார்த்தோமே! கள்ளுக்கடையில் அவன் அதைக் கடைக்காரனிடம் கொடுத்ததைத் தானே பார்த்ததாக ஒருவர் சொல்லுகிறுர்."

இந்தமாதிரி விவகாரமும் வளர்ந்தது. ஊரிலோ சண்டையோ, அல்லது கைக்கலப்போ இல்லாத நாளே கிடையாது. பெரியோர்களைப் பார்த்துக் குழந்தைகள்கூட ஒன்றையொன்று திட்டிக்கொண்டன. ஆற்றங்கரையில் துணிதுவைக்கப் போகும்போது பெண்டுகள் சேர்ந்தால் போதும்—கையின் துவைக்கும் வேலையைக் காட்டிலும் நாக்கின் திட்டும் வேலை தான் மும்முரமாக இருக்கும்—ஒவ்வொரு திட்டும் லேசாக இருக்காது.

முதலில் வெறும் வசவுமட்டுந்தான் இருந்தது. ஆனால் நாளாக ஆகக் கிடைத்ததைக் கவரலானார்கள் குழந்தைகளும் அவர்கள் மாதிரி ஆரம்பித்தன. நாட்கள் கடத்துவதுகூடக் கஷ்டமாகப் போய்விட்டது. நாளுக்கு நாள் பஞ்சாயத்துக் கோர்ட்டு, ஜில்லா கோர்ட்டு, ஹைகோர்ட்டு—என்று இவானும் காப்ரியலும் கட்சி யாடினார்கள். ஜட்ஜுகளுக்கே அவர்களைக் கண்டு வெறுப்பு ஏற்பட்டது. காப்ரியல் இவானுக்கு அபராதமோ, சிறைவாசமோ வாங்கித் தருவான்; இவான் மறுதடவை காப்ரியலுக்கு அதேமாதிரி செய்துவிடுவான். இப்படிப் பழி அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் கோபமும் அதிகரித்தது—சண்டையிடும் நாய்கள், நேரமாக ஆக, கோபம் கொள்வதுபோல். ஒன்றை நாம் பின்னாலிருந்து அடித்தால் மற்றொன்று தான் கடிக்கிறது என்று எண்ணி அது இன்னும் ஆக்குரோஷம் கொள்ளுகிறது. அந்த மாதிரிதான் இவர்களும் கட்சி யாடினார்கள். எவனுக்காவது

ஒருவனுக்குத் தண்டனை ஏற்பட்டது. உடனே இருவருக்குள்ளும் குரோதம் அதிகமாயிற்று. "இரு, இரு, உனக்குச் சரியாக பதில் வைக்கிறேன்!" என்று ஒருவருக்கொருவர் சபதம் கூறிக்கொண்டார்கள். இப்படியாக ஆறு வருஷங்கள் நடந்தது. கிழவன் மட்டும் திண்ணையிலிருந்து "என்னடாப்பா செய்துகொண்டிருக்கிறீர்கள்? இந்தச் சபதம் கூறுவது போதுமே! உங்கள் ஜோலிகளைப் பாருங்களடா, வைரம் போதும்—நல்லதைச் சொல்லுகிறேன்!" என்று கதறினான்.

அவர்கள் கேட்கவில்லை.

ஏழாவது வருஷம், ஒரு கலியாணச் சந்தர்ப்பத்தில் காப்ரியல் குதிரை திருடும்போது அகப்பட்டுக்கொண்டான் என்று சொல்லி இவானின் மருமகள் காப்ரியலைக் கேலிக்கு இலக்காக்கினாள். காப்ரியல் குடிவெறியில் கோபம் தாங்காமல் கொடுத்த அடியில் அவள் ஒரு வாரம் எழுந்திருக்கவில்லை. அப்பொழுது அவள் கர்ப்பம். அவ்வளவுதான்! இவான் அகமகிழ்ச்சி கொண்டான். உடனே பிராதுடன் மாஜிஸ்ட்ரேட்டிடம் போனான். "இப்போது இவனைத் தொலைத்து விடுகிறேன். இந்தத் தடவை சிறை வாசமோ, தீவாந்தர சிட்சையோ தப்பாது" என்றான். ஆனால், இவான் நினைத்தபடி நடக்கவில்லை. நீதிபதி கேஸைத் தள்ளிவிட்டார். பெண்ணை வைத்தியப் பரிசோதனை செய்து பார்த்ததில் ஒன்றும் கெடுதல் தென்படவில்லை. அவள் எப்பொழுதும்போல நடமாடிக்கொண்டுதான் இருந்தாள்.

உடனே மேல் கோர்ட்டுக்குப் போனுன் இவான். ஆனுல் அந்த நீதிபதி கேஸை ஜில்லா கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார். இவான் மும்முரமாகி, குமாஸ்தாவுக்கும் அதிகாரிக்கும் ஒரு காலன் சாராயம் வாங்கிக் கொடுத்துச் சரிக்கட்டி, காப்ரியலுக்குக் கசையடி தண்டனை கொடுக்கச் செய்தான். குமாஸ்தா தீர்ப்பை காப்ரியலுக்கு வாசித்துக் காட்டினுன்.

"குடியானவன் காப்ரியல் கார்தேவ் இருபது கசையடி பெறுவான் என்று கோர்ட்டார் தீர்ப்பு!"

இவானும் அதைக் கேட்டான். காப்ரியலைப் பார்த்தான். காப்ரியல் முகம் வெளுத்தது. காப்ரியல் கோர்ட்டிலிருந்து வெளியே வரும்போது இவானும் பின்னுல் வந்தான். காப்ரியல் சொன்னது அவன் காதில் பட்டது: "நல்லது! அவன் முதுகில் அடி வாங்கி வைக்கிறுன். முதுகு எரியும். ஆனுல் இன்னொன்றை நான் இன்னும் அதிகமாக எரியச் செய்கிறேன்!"

இதைக் கேட்டதும் இவான் உள்ளேபோய் "நீதிபதிகளே! அவன் என் வீட்டைக் கொளுத்தி விடுவதாகப் பயமுறுத்துகிறுன். கேளுங்கள், சாட்சிகள் இருக்கின்றன!" என்றுன்.

உடனே காப்ரியலைக் கோர்ட்டார் உள்ளே வரவழைத்து "நீ அப்படிச் சொன்னது உண்மைதானு?" என்று கேட்டார்கள்.

"நான் ஒன்றும் சொல்லவில்லை. அதிகாரம் இருக்கிறது உங்களிடத்தில், அடியுங்கள். நான்தான்

அகப்பட்டேன் போலிருக்கிறது, சரியாக நடந்து கொண்டும்கூட. அவன் மட்டும் இஷ்டப்படி செய்ய லாம் போல் இருக்கிறது” என்ருன் காப்ரியல்.

அவன் இன்னும் ஏதோ சொல்ல விரும்பினுன்; ஆனுல் அவன் உதடுகளும் கன்னங்களும் துடித்தன. அதிகாரிகள்கூட அவன் தோற்றத்தைக் கண்டு பயந் தார்கள். “தனக்கோ, அல்லது விரோதிக்கோ அவன் ஏதாவது தீங்கிழைக்கவும் செய்யலாம்” என்று எண் ணினுர்கள்.

வயதானவரான நீதிபதி “இதோ பாருங்கள், ஏதாவது யோசித்து சமரஸமாகப் போங்கள். காப் ரியல், கர்ப்பிணியை அடிக்கலாமா? நல்ல வேளையாகத் தப்பிற்று. ஏதாவது ஆயிருந்தால்? செய்யலாமா அப்படி? தப்பை ஒப்புக்கொண்டு, அவளிடம் மன் னிப்புக் கேட்டுக்கொள். அவள் நிச்சயம் மன்னித்து விடுவாள். நாங்களும் தீர்ப்பை மாற்றி விடுகிருேம்” என்ருர்.

குமாஸ்தா இந்த வார்த்தைகளைக் கேட்டதும் “117 செக்ஷன்படி அப்படிச் செய்ய முடியாது. கட் சிக்காரர்களிடையே சமாதானம் ஏற்படாததன் காரணமாகக் கோர்ட்டார் தீர்ப்புக்கூறி ஆகிவிட்டது. தண்டனை விதித்தே ஆகவேண்டும்” என்ருன்.

ஆனுல் ஜட்ஜ் குமாஸ்தாவின் வார்த்தையைக் கேட்கவில்லை.

“நீ கொஞ்சம் வாயை மூடிக்கொண்டிரு, தம்பி. அமைதியை விரும்பும் கடவுளை வழிபடுவது எல்லா

வற்றிலும் முதல் சட்டம்'' என்று சொல்லி ஜட்ஜ் மறு படியும் கட்சிக்காரர்களுக்கு நல்ல வார்த்தை சொல் லிப் பார்த்தார்; பிரயோஜனப்படவில்லை. காப்ரியல் கேட்கவில்லை.

"எனக்கு வயது ஐம்பதாகிறது. என் மக னுக்குக் கலியாணம் ஆகிவிட்டது. என் ஆயுசில் கசையடி பட்டது கிடையாது. இப்பொழுது இந்த அம்மை வடு இவான் எனக்குக் கசையடி வாங்கி வைக் கிறது, நான் அவனைப்போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறதா? ஒருநாளும் கிடையாது. வேண் டிய மட்டும் பொறுத்திருந்து விட்டேன். அவன் என்னை மறக்க முடியாதபடி செய்கிறேன்.''

மறுபடி காப்ரியலின் குரல் நடுங்கிற்று. அவ னால் மேலே பேச முடியவில்லை, திரும்பி வெளியே போய் விட்டான்.

கோர்ட்டிலிருந்து வீடு ஏழு மைல், இவான் வீட் டிற்கு வந்தபோது வெகுநேரமாகி விட்டது. குதிரை யின் சேணத்தைக் கழற்றிவிட்டு அதை லாயத்தில் கொண்டு கட்டினான். பிறகு குடிசைக்குள் நுழைந் தான். அங்கே யாரையும் காணோம். ஆடுமாடுகளை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டுவரச் சென்றிருந்தார்கள் பெண்கள். பையன்கள் வயலிலிருந்து திரும்பவில்லை இன்னும். இவான் உள்ளேபோய் உட்கார்ந்து யோசிக்கலானான். காப்ரியல் தீர்ப்பைக் கேட்ட வகை யும், அவன் திடீரென்று முகம் சுண்டி மறுபக்கம் திரும்பிக் கொண்டதும் அவன் நினைவிற்கு வந்

தன. அவன் கவலை கொண்டான். அந்தத் தண்டனை தனக்கு ஏற்பட்டிருந்தால் என்ன மாதிரி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தபொழுது அவனுக்குக் காப்ரியல்மேல் இரக்கம்கூட உண்டாயிற்று. திண்ணைமேல் கிடந்த தகப்பன் 'கொள், கொள்' என்று இருமினது கேட்டது; கிழவன் மெள்ள எழுந்து தள்ளாடிக் கொண்டுவந்து அவன் அருகில் உட்கார்ந்தான். சிரமம் மேலிட்டு வெகுநேரம் இருமிவிட்டுப் பிறகு எப்படியோ சமாளித்துக்கொண்டு தொண்டையைச் சரி செய்த வண்ணம் "என்ன, அவனைத் தண்டித்தாய் விட்டதா ?" என்று கேட்டான்.

"ஆய்விட்டது. இருபது கசையடிகள்."

கிழவன் தலையை அசைத்தான்.

"காரியம் கெட்டுப்போச்சு!—நீ செய்வது ரொம்பத் தப்பு, இவான், ரொம்பத் தப்பு! அவனுக்குக் கூட இதனால் அதிகக் கெடுதல் கிடையாது—உனக்குத் தான். ஆமாம், அவனை அடித்தால் அதனால் உனக்கென்ன லாபம் ?"

"திரும்பவும் இந்தமாதிரி செய்யமாட்டான் !"

"எத்தைத் திரும்பிச் செய்யமாட்டான் ? உன்னைக் காட்டிலும் அதிகமாக அவன் என்ன செய்து விட்டான் ?"

"என்ன செய்து விட்டானா ? என் மருமகளைக் கொல்ல இருந்தான். இப்பொழுது வீட்டைக் கொளுத்திவிடுவதாகப் பயமுறுத்துகிறான். இதற்கெல்லாம்போய் அவனைப் பாராட்ட வேண்டுமாக்கும் !"

கிழவன் பெருமூச்சு விட்டுக்கொண்டே "வருஷ மெல்லாம் நான் இந்தத் திண்ணையில் முடங்கிக் கிடக்கிறேன். நீ வெளியில் போய் உலகத்தைப் பார்த்து வருகிருய்; ஆகையால் உனக்கு எல்லாம் தெரியுமென்றும் எனக்கு ஒன்றுமே தெரியாதென்றும் நீ நினைக்கிருய். அடே, உனக்குத்தான் கண் தெரியவில்லை. குரோதம் உன் கண்களைக் கட்டி விட்டது. பிறர் செய்யும் பிசகெல்லாம்தான் உன் கண்முன் நிற்கிறது. நீ செய்வதெல்லாம் உனக்குப் பின்னுல் இருக்கிறது. 'அவன் தப்பு செய்து விட்டான்!'—என்பது எவ்வளவு அர்த்தமில்லாத வார்த்தை? அவன் மட்டும்தான் பிசகு செய்தான் என்ருல் சண்டை எப்படி வரும்? மனிதரிடையே சண்டைகள் ஒரு கட்சியிலிருந்து மட்டுந்தான கிளம்புகின்றன? சண்டையென்ருல் இரண்டுபேர் வேண்டாமா? அவன் தப்பு உனக்குத் தெரிகிறது, உன்னுடையது தெரியவில்லை. அவன் கெட்டவனுயிருந்தாலும் நீ நல்லவனுய் இருந்தால் சண்டையே வராது. அவன் தாடி மயிரை யார் பிய்த்தது? அவன் போரை யார் அழித்தது? அவனைக் கோர்ட்டுக்கு இழுத்தது யார்? இப்படியிருந்தும் பழி பூராவும் அவன் தலையில் சுமத்துகிருய். நீ தானடா சீராக நடக்கவில்லை. அதில்தான் இருக்கிறது பிசகு! நான் இந்த மாதிரியெல்லாம் குடும்பம் நடத்தவில்லை. இந்த மாதிரியும் நான் உன்னைப் பழக்கவில்லை. அவன் தகப்பனும் நானும் இப்படியா வாழ்ந்தோம் அந்தக் காலத்தில்? அக்கம்பக்கத்தார் வாழ

வேண்டிய முறையில் காலந்தள்ளினோம். அவர்கள் வீட்டில் மாவு செலவாகிவிட்டால் பெண்டுகளில் யாராவது ஒருத்தி வந்து 'மாமா, கொஞ்சம் மாவு வேணும்' என்பாள். 'குதிருக்குப்போய் வேண்டியது எடுத்துக்கொள் அம்மா!' என்பேன். குதிரைகள் மேய்க்க அவர்கள் வீட்டில் ஒருவரும் இல்லையென்றால் 'அடே இவான், அவர்கள் குதிரைகளையும் பார்த்துக்கொள்!' என்பேன். எனக்கு ஏதாவது வேண்டியிருந்தால் அவரிடம் போய் 'கார்தே மாமா, இன்னதுவேணும்' என்பேன். "எடுத்துக் கொள்ளுங்களேன்!" என்பார் அவர். அந்த மாதிரிப் பழகினோம்—வெகு சுகமாகக் காலம் கழிந்தது. இப்பொழுது? பிளவ்னாவில் நடக்கும் யுத்தத்தைப்பற்றி அன்று ஒரு சிப்பாய் சொல்லிக்கொண்டிருந்தான். அதைக் காட்டிலு மல்லவா மோசமாக இருக்கிறது உங்கள் யுத்தம்! இதென்ன வாழ்வு இது? மகா பாவமாயிற்றே! நீ விவரம் தெரிந்தவன், வீட்டிற்கு யஜமானன். நீ யல்லவா இதற்கெல்லாம் பொறுப்பாளி? நீ யல்லவா நாளைக்குக் கடவுள்முன் ஜவாப் சொல்லியாக வேண்டும்? பெண்டுகளும் குழந்தைகளுங்கூட நீ சொல்லிக் கொடுத்தாற்போலல்லவா சீறிக் கடிக்கிறார்கள்? ஏன், அன்று தாஸ்கா—நேற்று முளைத்த முளை—பாவம் பக்கத்து வீட்டு ஐரீனாவைத் திட்டித் தீர்த்தது—அதன் தாய் பார்த்துச் சிரிக்கிறாள்! அப்படிச் செய்யலாமா? நீதான் ஜவாப்தாரி. நீ என்ன ஆவாய், நினைத்துப்பார்! இப்படி யெல்லாமா

காரியங்கள் நடக்கலாம்? நீ ஒரு வார்த்தை எறிந்தால் நான் இரண்டு எறிகிறேன். நீ ஒரு அடி அடித்தால் நான் இரண்டைத் திருப்பிக் கொடுக்கிறேன். இல்லையப்பா, அப்பன் கிறிஸ்து இங்கு உலகத்தில் உலவிய பொழுது முட்டாள்களான நமக்கு வேறொன்றை அல்லவோ போதித்தார்! யாராவது உன்னை ஒரு வார்த்தை சொன்னால் சும்மா இருந்துவிடு; அவனுடைய மனச்சாட்சியே அவனைச் சுடும்—அவர் அப்படி உபதேசம் செய்தார். ஒரு கன்னத்தில் அறை விழுந்தால், மற்றக் கன்னத்தையும் காட்டு; 'வேண்டுமானால் இன்னும் அடி!' என்று சொல். அவன் மனச்சாட்சி அவனைத் திட்டும், அவன் உடனே இளகி வழிக்கு வந்து விடுவான்—அவர் சொன்னது அது; கர்வமே கொள்ளாதே....ஏனடா பேசமாட்டேன் என்கிறாய்? நான் சொல்வது உனக்குச் சரியாய் இல்லையா?"

இவான் மௌனமாக உட்கார்ந்து கேட்டான்.

கிழவன் இருமித் தொண்டையை வெகு சிரமத்துடன் சரி செய்துகொண்டு மறுபடியும் ஆரம்பித்தான். "கிறிஸ்து போதித்தது சரியல்ல என்று நினைக்கிறாயா? நமது நன்மைக்குத் தானடா சொன்னார். உன் வாழ்வையே நினைத்துப் பார். இந்த யுத்தம் ஆரம்பமானதற்குப் பிறகு உனக்கு ஏற்பட்டிருப்பது நன்மையா, தீமையா? கோர்ட் செலவு என்ன ஆகியிருக்கிறது என்று கணக்குப் பார், போவதும் வருவதும், வழிச் சாப்பாடும் எவ்வளவு செலவு! உன் பையன்

கள் பக்கா ஆள்களாகி விட்டார்கள்; அவர்களிடம் வேலை வாங்கி நீ எவ்வளவு கவலையற்றிருக்கலாம்? இப்பொழுது உனது வரும்படி குறைந்து வருகிறது. எதனால்? இந்த முட்டாள்தனத்தால்தான்! — உன் கர்வம்தான் காரணம். பையன்களோடு வயலில் உழுது பயிரிட்டுக் கொண்டிருக்க வேண்டியவன்— ஜட்ஜிடமும் அவனிடமும் இவனிடமும் போய் தொங்கிக்கொண் டிருக்கிறாய். காலாகாலத்தில் நடவோ விதைப்போ ஆகவில்லை—பூமிதேவி விளைவாளா? இந்த வருஷம் 'ஓட்ஸ்' பயிர் ஏன் ஒன்றும் இல்லாமல் போயிற்று? எப்பொழுது விதைத்தாய்? கோர்ட் ஜோலி தீர்ந்த பிறகு வந்து! என்ன லாபம் முடிவில்? சுமரும் சுமைதான் மிச்சம். அப்பா, உன் தொழிலையே பார்! வீட்டிலும் வெளியிலும் உன் பையன்களோடு பாடுபடு; யாராவது உனக்குக் கெடுதல் செய்தால் அவனை மன்னித்துவிடு. கடவுள் உத்தரவு அது. அப்புறம் வாழ்க்கை வெகு சுகமாக ஆகி விடும்; உன் மனது கவலையற்றுப் போகும்."

இவான் வாய் திறக்கவில்லை.

"அப்பா இவான்! கிழவன் நான், உன்னைப் பெற்றவன் சொல்லைக் கேள்! போ, வண்டி கட்டிக் கொண்டு கச்சேரிக்குப் போய் இந்த விவகாரத்தை உடனே முடி. காலையில் காப்ரியலிடம் போய் கடவுள் சாட்சியாகச் சமாதானம் செய்துகொள். நாளைப் பண்டிகைக்கு அவனை இங்கே சாப்பிடச் சொல். இந்தப் பாழும் சச்சரவைத் தொலைத்துத் தலைமுழுகு.

பெண்டுகளுக்கும் குழந்தைகளுக்கும் நல்லதைச் சொல்லி அதேமாதிரி செய்யச் சொல்."

இவான் பெருமூச்சுடன் "அவர் சொல்வது சரி தான்" என்று எண்ணினவுடன் அவன் மனதிற்கு வந்தது நிம்மதி. ஆனல் எல்லாவற்றையும் எப்படிச் சீர்ப்படுத்துவது என்று மட்டும் அவனுக்குப் புரிய வில்லை.

அவனுடைய எண்ணத்தை ஊகித்தவன்போல் கிழவன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"இவான், போ உடனே! தள்ளிப் போடாதே! பரவுவதற்குள் தீயை அணைத்துவிடு. இல்லாது போனல் பிறகு ஒன்றும் செய்யமுடியாது."

கிழவன் இன்னும் ஏதோ சொல்ல நினைத்தான். பெண்டுகள் அதற்குள் சளசளவென்று பேசிக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். காப்ரியல் தண் டனையும் அவன் தீ வைத்துவிடுவதாகப் பயமுறுத்திய தும் அவர்களுக்குத் தகவல் வந்துவிட்டது. தங்கள் கைச்சரக்கையும் சேர்த்து வெளியே காப்ரியல் வீட் டுப் பெண்களுடன் ஒரு சண்டைபோட்டு முடித்தார் கள். காப்ரியலின் மருமகள் மறுபடியும் ஏதா வது செய்வோம் என்று பயமுறுத்தினளாம். காப் ரியல் விசாரணை அதிகாரியிடம் விஷயம் பூராவையும் சொல்லிச் சரிப்படுத்தித் தன் கட்சிக்குச் சாதகம் தேடிக் கொண்டு விட்டானும். இந்தத் தடவை ஜார் அரசனுக்கே மனுச்செய்து கொள்வதாக ஏற்பாடு. ஏற் கனவே பள்ளிக்கூட உபாத்தியாயர் மனு தயாரித்துக்

கொண்டிருந்தாராம். மனுவில் ஒன்றுகூட பாக்கி யில்லை—அச்சு விஷயம், தோட்ட விஷயம்—எல்லாம் பட்டவர்த்தனமாக எழுதி யிருக்கிறதாம். மொத்தத் தில் கூடிய சீக்கிரம் இவானுடைய பாதிப் பண்ணை எதிரி வசமாகி விடுமாம். இதையெல்லாம் கேட்டதும் இவானின் மனம் மறுபடியும் மாறிவிட்டது. சமரஸ யோசனையை உடனே கைவிட்டான்.

பண்ணையில் குடும்பத் தலைவன் செய்யவேண்டிய வேலை எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். இவான் பெண்களுடன் நின்று பேசாமல் நேராகக் களத்துமேட்டிற்குப் போனான். அங்கே யாவற்றையும் 'பங்கிடு' செய்து முடிப்பதற்குள் பொழுது விழுந்து விட்டது. வயலில் வேலைசெய்த பையன்களும் திரும்பி விட்டார்கள். பின்பனிக் காலத்தில் ஏற்றவேண்டிய பயிருக்கு உழுது கொண்டிருந்தார்கள். இவான் அவர் களைச் சந்தித்து, நடந்த வேலையைப் பற்றி விசாரித்து, கூடவிருந்து சாமான்களை அதனதன் இடத்தில் வைக்க உதவி செய்தான். கிழிந்த குதிரைக் கழுத்து வாரைச் செப்பனிடத் தனியாக எடுத்துவைத்துக் கொண்டான். அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. ஆடுமாடுகளுக்குத் தீவனம் போட்டுக் குதிரைகளை லாயத்திலிருந்து வெளியேற்றிக் கதவை மூடினான். தாராஸ் அவற்றை இரவு மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டு போகவேண்டும். "சரி, இனிமேல் சாப் பிட்டுவிட்டுப் படுக்க வேண்டியதுதான்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு பழுது பார்க்கவேண்

டிய வாரை எடுத்துக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தான். இவ்வளவு செய்ததில் காப்ரியலைப் பற்றியும் தன் தந்தையின் உபதேசத்தையும் மறந்து போனான். உள்ளே போகக் கதவின் பிடியைப் பிடித்தான். வேலிக்கு அந்தப்புறமிருந்து காப்ரியல் உரத்த குரலில் யாரையோ திட்டும் சத்தம் கேட்டது: "வேறென்ன செய்வது அவனை ?—கொலைதான் செய்யவேண்டும்." இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இவான் மனதில் பழைய பகை பூராவும் முழுவேகத்துடன் மூண்டெழுந்தது. காப்ரியல் வசவைக் கேட்டுக்கொண்டே நின்றான். அவன் ஓய்ந்ததும்தான் உள்ளே நுழைந்தான்.

உள்ளே விளக்கு எரிந்துகொண் டிருந்தது. மருமகப் பெண் நூல் நூற்றுக்கொண் டிருந்தாள் ; மனைவி இராச் சாப்பாடு தயார் செய்துகொண் டிருந்தாள். மூத்தமகன் மரப்பட்டைச் செருப்புகளுக்கு ஒட்டுகள் பண்ணிக்கொண் டிருந்தான். இரண்டாம் மகன் ஏதோ புத்தகத்துடன் மேஜையண்டை இருந்தான். குதிரைகளை ஓட்டிக்கொண்டு போக தாராஸ் தயாராகிக் கொண்டிருந்தான். வீட்டில் எல்லாம் வரிசையாகவும் ஒழுங்காகவும் இருந்திருக்கும்—அந்தச் சனியன் பிடித்த அண்டை வீட்டான் இல்லாவிட்டால்!

நுழைந்தபோதே எரிந்து விழுந்தான் இவான். பெஞ்சியின்மேல் படுத்திருந்த பூனையைத் தூக்கி ஒரு பக்கம் எறிந்தான். கழுநீர்ப் பானையைக் கண்ட இடத்தில் வைப்பதா என்று பெண்டுகளின் மேல்

பாய்ந்தான். அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை. அலுத்து உட்கார்ந்து குதிரைவாரைச் சரிசெய்ய ஆரம்பித்தான். காப்ரியல் வார்த்தைகள் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன: கோர்ட்டில் அவன் பயமுறுத்தினது, கொலை செய்வதைப் பற்றி சற்று நேரத்துக்கு முன் அவன் கர்ஜித்தது.

அவன் மனைவி தாராஸுக்குச் சாப்பாடு போட்டு முடித்தாள். அவன் உடனே ஆட்டுத்தோல் சட்டையை மாட்டிக்கொண்டு இடுப்பில் பெல்டுடனும் கையில் கொஞ்சம் ஆகாரத்துடனும் கிளம்பினான். மூத்தவன் அவனுடன் போக எழுந்தான். ஆனால் இவான் தானே எழுந்து கூடப் போனான். வெளியே மையிருட்டு; மேகங்கள் கூடியிருந்தன; காற்று கிளம்பிவிட்டது. வாசற்படி யிறங்கி இவான் மகனுடன் சென்று மகனைக் குதிரைமேல் ஏற்றி மற்றவையையும் முன்னால் விரட்டினான். கிராமக் கோடியில் அவன் மற்ற வாலிபர்களுடன் சேர்ந்து கண்ணிலிருந்து மறையும் வரை இவான் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அங்கே அவன் வாசற்படியண்டை நிற்கும்பொழுது காப்ரியல் சொன்ன வார்த்தைகள் அவன் மனதை விட்டகலாமல் ஒலித்தன: "பார், உன்னுடையது இதைக் காட்டிலும் அதிகமாக எரிகிறதா இல்லையா என்று!"

"இந்த நிலைமையில் அவன் எதை வேண்டுமானாலும் செய்யத்துணிவான். எல்லாம் வெயிலில் உலர்ந்து கிடக்கிறது—காற்றடிக் காலம் வேறே. எங்கேயா

வது கொல்லைப் பக்கம் வந்து எதிலாவது நெருப்பு வைத்துவிட்டுப் போய் விடுவான். வீட்டைக் கொளுத்தித் தரைமட்டமாக்கி விட்டுத் தப்பித்துக் கொண்டுவிடுவான். அவன் அந்தத் தீச்செயலைச் செய்யும்போது கையும் களவுமாகப் பிடித்துவிட்டால், அப்பொழுது எப்படித் தப்புவான்?'' அந்த நினைப்பு உறுதியாக உருவாக ஆரம்பித்தது, உள்ளே போகவில்லை அவன். தெருவில் இறங்கிச் சுற்றிக்கொண்டு வீட்டுப் பின்புறத்திற்கு வந்தான். "வீட்டைச் சுற்றிக்கொண்டு வருகிறேன். அவன் என்ன செய்வானே, யார் கண்டார்கள்?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். ஓசைப்படாமல் நடந்து சுற்றி வரும்பொழுது திடீரென்று எதிரே ஏதோ நகர்வது போலிருந்தது அவன் கண்களுக்கு—யாரோ வந்து மறைந்தது போல. இவான் உடனே நின்ற நிலையில் உற்றுப் பார்த்து ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கவனமாகக் கேட்டான். எல்லாம் நிச்சப்தமாக இருந்தது. சில இலைகளும் வீட்டுக் கூரையில் மேய்ந்திருந்த வைக்கோலும் தான் காற்றில் அசைந்தன. முதலில் இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை; பிறகு இருட்டு கொஞ்சம் கண்களுக்குப் பழக்கமானதும் தூரவிருந்த மூலைமுடுக்கும், அங்கே கிடந்த கலப்பையும் கூரை இறப்பும் தெரிந்தன. பார்த்தான் சிறிது நேரம்: யாரும் காணேம்.

"நான் கண்டது பிசகாய்த்தான் இருக்கவேண்டும். இருந்தாலும் ஒருதரம் சுற்றிக்கொண்டு வருவது

நல்லது" என்று இவான் மெள்ளக் குடிசை யோரமாகப் போனுன். அந்த மரப்பட்டைச் செருப்புடன் அவன் அவ்வளவு சந்தடியின்றி நடந்தான். அவன் காலடி அவனுக்கே கேட்கவில்லை. எதிர்த்த மூலையை யடைந்ததும் கலப்பை யருகில் ஏதோ திடீரென்று பளிச்சென்று தோன்றி மறைந்ததைக் கண்டான். அப்படியே சடக்கென்று அவன் நின்றதுதான் தாமதம்: மறுபடியும் ஏதோ ஜ்வாலை இன்னும் அதிகமான ஒளியுடன் கிளம்பிற்று. தலையில் தொப்பியுடன் ஒரு மனிதன் பதுங்கிய வண்ணம் கையில் வைத்திருந்த பிடி வைக்கோலுக்கு நெருப்பு வைப்பதை அந்த வெளிச்சத்தில் நன்ருகக் கண்டான். இவானின் உள்ளம் அவனுள் பட்சிபோலப் பதைத்துக் கொண்டது. வெகு வேகமாக இரண்டே அடியில் அந்த இடத்தை நோக்கி நடந்தான். கால் பாவினதே அவனுக்கு நினைவில்லை. "அவன் தப்பமாட்டான்; கையும் களவுமாக அவனைப் பிடித்து விடுகிறேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இவான் இன்னும் அருகில் போகவில்லை. அதற்குள் திடீரென்று மற்ருேர் இடத்தில் பெரியகொழுந்து ஒன்றைக் கண்டான். இறப்பின் அருகில் கூரை பிடித்துக்கொண்டு விட்டது; நெருப்பு ஜ்வாலை வெகு வேகமாகக் கூரைமேல் பாய்ந்துகொண் டிருந்தது. அதன்கீழ் காப்ரியல் உருவம் தெளிவாக இவானுக்குத் தெரிந்தது. புருமேல் பாயும் வைரியைப்போல இவான் நொண்டி காப்ரியலை நோக்கிப் பாய்ந்தான். "இப்

போது அவனைக் கைப்பிடியாகப் பிடித்து விடுகிறேன். அவன் தப்பமுடியாது!" என்று இவான் எண்ணினன். ஆனல் காப்ரியல் அவன் வருவதைப் பார்த்திருக்க வேண்டும் (எப்படியோ தெரியவில்லை); முயலைப்போலத் தத்தித் தத்திப் பாய்ந்து ஓடினன்.

"நீ தப்பமாட்டாய்!" என்று கத்திக்கொண்டு இவான் அவனைப் பின் தொடர்ந்து ஓடினன்.

காப்ரியலை அவன் பிடிக்கப்போகும் சமயத்தில் அவன் எப்படியோ தப்பித்துக்கொண்டான். ஆனல் அவன் சட்டை நுனி இவான் கையில் அகப்பட்டது. அது சர் என்று கிழிந்து, இவான் இழுத்த வேகத்தில் பின்னல் சாய்ந்தான். சட்டென்று உருண்டு எழுந்து "பிடியுங்கள், திருடன்! கொலை!" என்று கத்திக் கொண்டு ஓடினன். ஆனல் அதற்குள் காப்ரியல் தன் வாசற்படிக்குப் போய்ச் சேர்ந்து விட்டான், இவான் தொடர்ந்தோடி அவனை அங்கே பிடித்து விட்டான். ஆனல் அப்பொழுது ஏதோ வேகமாகக் கல் போல அவன் முகத்தில் வந்து தாக்கியது. காப்ரியல்தான் கீழே கிடந்த மரமுளை ஒன்றை எடுத்து பலம் கொண்டமட்டும் ஓங்கி அடித்துவிட்டான்.

இவான் மயங்கிப் போனன்; பொறிகள் கண்கள் முன் தெறித்தன. பிறகு இருண்டது எல்லாம்; நிலை தவறி விழுந்தான். அவனுக்கு மறுபடியும் நினைவு வந்தபொழுது காப்ரியல் அங்கே இல்லை. பகல்போல ஒரே வெளிச்சம். இவான் வீடு இருந்த திக்கிலிருந்து இஞ்சின் போல ஏதோ இடிமுழக்கத்துடன் வெடித்

துக் கொண்டிருந்தது. இவான் திரும்பிப் பார்த்தான். பின்புறத்துக் கொட்டம் பூராவும் தீ, பக்கத்துக் கொட்டமும் தீப்பற்றிக்கொண்டிருந்தது ; நெருப்பு ஜ்வாலையும் புகையும் எரியும் வைக்கோல் துண்டு களும் வீட்டின் பக்கம் வீசிக்கொண்டிருந்தன.

"இதென்னப்பா !" என்று கத்தி இவான் கைகளைத் தூக்கி முழங்கால்களில் அடித்துக் கொண்டான். "அட இறப்பிலிருந்து அதைப் பிடுங்கிக் காலின்கீழ் போட்டு மிதித்திருந் தால் போதுமே! இதென்னப்பா !" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண் டிருந்தான். உரக்கக் கத்தவேண்டுமென்று நினைத்தான். மூச்சுக் கிளம்பவில்லை. வாயடைத்துப் போய்விட்டது. ஓட நினைத்தான் ; கால்கள் பின்னிக்கொண்டு நகர மறுத் தன. மெள்ள நகர்ந்தான், மறுபடியும் தடுமாறினான், மேல் மூச்சு வாங்கிற்று. சரியாக மூச்சு வாங்க முடிகிறவரை நின்றான். பிறகு நகர்ந்தான். பின் கொட்டத்திற்குப் போய் நெருப்பை அணுகுவதற்குள் பக்கத்துக் கொட்டம் பூராவும் தீயாகி விட்டது. வீட் டின் ஓரமும் பின் வாசற்படியும் கூடத் தீப் பிடித்தது. வீட்டிலிருந்து கிளம்பிவந்த ஜ்வாலையில் தாழ்வாரத் திற்குக் கூடப் போக முடியவில்லை. பெருங் கூட்டம் கூடிவிட்டது ; ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அக்கம் பக்கத்தார் தங்கள் தங்கள் சாமான்களை வேறிடத்திற்கு அகற்றிக்கொண் டிருந்தார்கள். கொட்டங்களிலிருந்து ஆடுமாடுகளை வெளியேற்றிக்

கொண்டிருந்தார்கள். இவான் வீட்டிலிருந்து காப்ரி யல் வீட்டிற்குத் தீ பரவிற்று. காற்று கிளம்பவே ஜ்வாலைகள் தெருவின் குறுக்கே பாய்ந்து எதிர்ச் சிற கையும் கவ்வின. பாதி கிராமம் எரிந்து சாம்ப லாயிற்று.

இவான் வீட்டில் கிழவனைத் தப்புவிப்பது தம்பி ரான் புண்ணியமாகப் போய்விட்டது. வெறும் உடுத் திய உடைகளுடன் குடும்பம் தப்பிற்று. மேயப் போயிருந்த குதிரைகளைத் தவிரப் பண்ணையில் மற்றது எல்லாம் போச்சு!—ஆடுமாடுகள், கோழிகள், வண்டி கள், கலப்பைகள், உழவு சாமான்கள், பெண்டுகளின் உடுப்புப் பெட்டிகள், தானியம் நிறைந்த குதிர்கள்— எல்லாம் வெந்து கரியாயின!

காப்ரியல் வீட்டில் ஆடுமாடுகளை அவிழ்த்து வெளியே துரத்தினார்கள்; சில சாமான்கள் மட்டும் தீயிலிருந்து எடுக்கப்பட்டன.

இரவு பூராவும் எரிந்தது தீ. இவான் வீட்டின் முன் நின்றுகொண்டு "இதென்னப்பா! அதைப் பிய்த் தெடுத்துக் காலின் கீழ் மிதித்திருந்தால் போதுமே!" என்று சொல்லிக்கொண்டே இருந்தான். ஆனால் கூரை எரிந்து உள்ளே விழுந்ததும் இவான் உள்ளே பாய்ந்து எரிந்த உத்திரம் ஒன்றை வெளியே இழுக்க முயன்றான். பெண்டுகள் பார்த்துக் கதறி அவனை வெளியே வரச் செய்தார்கள். அதை இழுத்து வெளியே போட்டுவிட்டு மற்றொன்றை எடுக்க உள்ளே போனான். கால் இடறித் தீயில் விழுந்தான்.

அவன் மகன் உடனே பாய்ந்து அவனை வெளியே இழுத்துக்கொண்டு வந்தான். மயிர் எல்லாம் பொசுங்கிப் போய்விட்டது; துணிகள் எரிந்து கைகள் புண்ணாயின. ஆனால் அதொன்றும் அவனுக்குத் தெரியவில்லை. "துயரத்தால் அவன் சித்தப் பிரமை கொண்டு விட்டான் பாவம்!" என்றார்கள் ஜனங்கள். தீ எரிந்து தானாகவே தணிந்து கொண்டிருந்தது. "என்னப்பா!....அதைப் பியத்து எறிந்திருந்தால் போதுமே!" என்று தான் சொல்லிக்கொண் டிருந்தான் இவான்.

காலையில் நாட்டாண்மைக்காரன் மகன் இவானைக் கூப்பிட வந்தான்.

"அண்ணே, உங்கள் தகப்பன் சாகக் கிடக்கிறார். உங்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார்."

தகப்பனார் ஞாபகமே இல்லை இவானுக்கு. சொன்னது அவனுக்கு அர்த்தமாக வில்லை.

"யார் தகப்பனார்? யாரைக் கூப்பிடுகிறார்?" என்றான்.

"உங்களைத்தான்! எங்கள் வீட்டிலிருக்கிறார். உயிர் போகும் தருவாயில் இருக்கிறார். வாருங்கள் அண்ணே!" என்று நாட்டாண்மைக்காரன் மகன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான். இவனும் போனான்.

வீட்டிலிருந்து வெளியே எடுத்தபோது எரிகிற வைக்கோல் கொஞ்சம் கிழவன் மேல் விழுந்து அவன் உடம்பைச் சுட்டுவிட்டது. நெருப்பு அண்டாமல்

தூர விருந்த நாட்டாண்மை வீட்டிற்கு அவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

இவான் தகப்பனிடம் வந்தபோது குடிசையில் நாட்டாண்மை மனைவியும் சில குழந்தைகளும்தான் அங்கே இருந்தார்கள். மற்றெல்லோரும் நெருப் பண்டைதான் இருந்தார்கள். கையில் மெழுகுவத்தி யுடன் ஒரு பெஞ்சியின் மேல் கிடந்த கிழவன் வாசற் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தான். மகன் உள்ளே வந்ததும் கொஞ்சம் நகர்ந்து கொடுத்துக் கொண் டான். கிழவி அவனிடம் சென்று மகன் வந்திருப் பதாகத் தெரிவித்தாள். அருகில் அவனைக் கூட்டிக் கொண்டு வரும்படி கிழவன் சொன்னான். இவான் கிட்டே போனான்.

"நான் என்ன சொன்னேன், இவான்? ஊரைக் கொளுத்தியது யார்?"

"அவன் தான், அப்பா! அவனைக் கைப்பிடி யாகவே பிடித்தேன். அவன் கூரைமேல் நெருப்பைப் போடுவதை நானே பார்த்தேன். அந்தப் பிடி வைக் கோலைச் சட்டென்று பற்றி யிழுத்துக் கீழே போட்டு அணைத்திருந்தால் ஒன்றுமில்லை."

"நான் சாகிறேன், இவான்! நீயும் ஒரு நாள் இந்தக் கதிக்கு வரவேண்டும். யார் குற்றம் இது?"

வார்த்தை சொல்லமுடியாமல் இவான் தந்தை யையே பார்த்துக்கொண் டிருந்தான்.

"இந்தா, கடவுள் பொதுவாகச் சொல்! யார் குற்றவாளி? நான் என்ன சொன்னேன்?"

அப்பொழுதுதான் இவானுக்குப் புத்தி வந்தது. எல்லாம் அவனுக்குப் பளிச்சென்று விளங்கிற்று.

“அப்பா, நான்தான் குற்றவாளி!” என்று சொல்லிக்கொண்டே தந்தை முன் மண்டி யிட்டுக் கொண்டு “தந்தையே, என்னை மன்னியுங்கள். நான்தான் உங்கள் முன்னிலையிலும் கடவுள் முன்னிலையிலும் குற்றவாளி!” என்று கதறினான்.

கிழவன் கைகளை நகர்த்தி வலது கையிலிருந்த வத்தியை இடது கையில் மாற்றிக்கொண்டு வலது கையை நெற்றிக்குக் கொண்டுபோய் கும்பிடு போட முயன்றான்; முடியவில்லை.

“கடவுள் கிருபை, கடவுள் கிருபை!” என்று சொல்லிக்கொண்டு அவன் மகன் பக்கம் பார்த்தான்.

“இவான், இந்தா இவான்!”

“என்ன தந்தையே!”

“நீ இப்பொழுது என்ன செய்யவேண்டும்?”

இவான் அழுதுகொண் டிருந்தான்.

“எப்படி ஜீவனம் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.”

கிழவன் கண்களை மூடிக் கொஞ்சம் பலம் பெற விரும்பினவன் போல உதடுகளை அசக்கி மறுபடியும் கண் திறந்து, “வழி இருக்கிறது குழந்தாய், வழி இருக்கிறது. கடவுள் உத்தரவுப்படி நடந்தால் வழியுண்டு நிச்சயம்!” என்று சொல்லிவிட்டுச் சற்று பொறுத்துப் புன்னகையுடன், “இதோ பார், இவான், யார் தீ வைத்தார்கள் என்பதை வெளியிடாதே! ஒரு

வன் குற்றத்தை நீ மறைத்தாயானல் கடவுள் உன் குற்றங்கள் இரண்டை மன்னிப்பார்!" என்று தான் அவனல் சொல்ல முடிந்தது; கிழவன் வத்தியை இரண்டு கைகளாலும் மார்பில் அணைத்துப் பெருமூச்செய்தி கட்டையை நீட்டினன்; இறந்தான்.

இவான் காப்ரியலைக் காட்டிக்கொடுக்கவில்லை. தீ வைத்தது யார் என்று ஒருவருக்கும் தெரியாது.

இவானுக்குக் காப்ரியல் மேலிருந்த கோபம் மறைந்தது. இவான் யாரிடமும் தன் குற்றத்தைச் சொல்லாததைக் கண்டு காப்ரியல் ஆச்சரிய மடைந்தான். முதலில் காப்ரியல் பயந்துகொண்டே இருந்தான்; பிறகு வழக்கமாகி விட்டது. சண்டை இடுவது நின்றது ஆண்களிடையே; பெண்களும் ஓய்ந்தார்கள். மறுபடி வீடு கட்டும்பொழுது இரு குடும்பங்களும் ஒரே வீட்டில் தங்கி யிருந்தன. கிராமமே புதிதாகி இருவரும் வெவ்வேறு இடங்களுக்குப் போகக்கூடிய வசதி இருந்தும் இவானும் காப்ரியலும் அண்டை அயலாகவே வீடு கட்டிக்கொண்டார்கள்—முன் போலவே.

அக்கம்பக்கத்தார் போலவே வாழ்ந்தார்கள். 'கடவுள் கட்டளைப்படி நட' என்று கிழவன் இட்ட உத்தரவையும், 'தீ பரவுவதற்கு முன் முதற் பொறியை அணைத்து விடு' என்ற உபதேசத்தையும் இவான் மறக்கவில்லை. இப்பொழுது இவானுக்கு யாராவது ஒரு தீங்கு செய்தால் அவன் பதில் செய்வதில்லை, நிலைமையைத்தான் சீர்திருத்த முயலுகிறான். யாரா

வது அவனைத் திட்டினால், பதிலுக்குத் திட்டாமல் கெட்ட வார்த்தை பேசவேண்டாம் என்று போதிக்கிறான். பெண்டு பிள்ளைகளுக்கும் அதே பாடம் தான். இப்பொழுது இவான் தலையெடுத்துவிட்டான். முன்னைக் காட்டிலும் மேன்மையாக வாழ்கிறான்.

2. இரண்டு கிழவர்கள்

அந்தப் பெண் கிறிஸ்துவைப் பார்த்து "ஐயா, நீங்கள் தீர்க்கதரிசியாக இருக்கிறீர்கள். எங்கள் மூதாதையர்கள் இந்த மலையில் ஆண்டவனைத் தொழுதார்கள்; ஜெருஸலம்தான் ஆண்டவனைத் தொழவேண்டிய இடம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்" என்றாள். அவளைப் பார்த்து கிறிஸ்து சொன்னார்: "பெண்ணே, பரம பிதாவை இந்த மலையிலும் ஜெருஸலத்திலும்கூடப் போய்த் தொழவேண்டாம். காலம் நெருங்குகிறது. வந்தே விட்டது, இப்பொழுது உண்மையான பக்தர்கள் அவரை உள்ளத்திலும் உண்மையிலும் பணிய வேண்டும். அப்படிப் பட்டவர்கள்தான் தம்மைப் போற்ற வேண்டுமென்று விரும்புகிறார்."—ஜான் 4(19-21, 23).

முன்னொரு காலத்தில் இரண்டு கிழவர்கள் ஜெருஸலத்திற்கு யாத்திரை போய் ஆண்டவனைத் தரிசித்து வரவேண்டுமென்று தீர்மானித்தார்கள். எபிம் என்றவர் ஒருவர்; நல்ல சொத்து சுதந்திரமுள்ள குடியானவர்; மற்றவர், எலிஷா, அவ்வளவு அதிகமில்லாதவர்.

எபிம் எதிலும் நிதானஸ்தர், கருத்துடையவர், உறுதியானவர். அவர் குடிப்பதோ, புகை பிடிப்பதோ கிடையாது, பொடிகூடப் போடுவது கிடையாது. தன் ஆயுளில் அவர் யாரிடமும் கெட்ட

வார்த்தை சொன்னது கிடையாது. இருமுறை அவர் கிராம நாட்டாண்மைக்காரராக இருந்திருந்தார்; கணக்குகள் 'அப்பழுக்கு' இல்லாமல் இருக்கும். குடும்பம் பெரிது. இரண்டு பிள்ளைகள், கலியாண மான பேரன், எல்லோரும் ஏக குடும்பமாக இருந் தார்கள். ஆரோக்கிய புருஷன், வளர்ந்த தாடி, நிமிர்ந்த தோற்றம். வயது அறுபதுக்குமேல் தாடி யில் லேசாக வெண்மை பாய ஆரம்பித்தது.

எலிஷா ஏழையும் இல்லை, தனவந்தனுமில்லை. அதற்கு முன்பு தச்சுவேலை செய்துகொண்டிருந்தார். வயதாகி விட்டதால் வீட்டிலேயே தேனீ வளர்த்து வந்தார். ஒரு பிள்ளை வேலை தேடி வெளிநாடு போய் விட்டான். மற்றவன்தான் வீட்டோடு இருந்தான். இதமாகப் பேசுகிறவர், சிரித்தமுகம். எப்பொழுதா வது கொஞ்சம் குடி உண்டு, உண்மைதான்; பொடி யும் போடுவார். பாட்டென்றால் பைத்தியம். ஆனால் ஒரு 'தண்டாவு'க்கும் போகமாட்டார். வீட்டிலும் வெளியிலும் நிரம்ப நல்லதனமாகக் காலம் தள்ளி னார். குட்டையாகவும் கறுவலாகவும் இருந்தார். தாடியும் கட்டை, பெயர் பெற்ற பெரியாரைப்போல அவர் தலை பூராவும் வழுக்கை.

இருவரும் ஜெருஸலம் போவதென்று 'வேண் டி'க்கொண்டு வெகுகாலமாகி விட்டது. எபிமுக்கு ஒழியவே இல்லை. எப்போதும் ஏதாவது கைமேல் வேலை இருந்துகொண்டே இருந்தது. ஒன்று முடிந் ததும் மற்றொன்றைத் துவக்கி விடுவார். முதலில்

பேரன் கலியாணத்தை நிச்சயித்து முடிக்க வேண்டியிருந்தது. பிறகு இளைய மகன், சேனையில் இருந்தவன், திரும்பி வருவதற்காகக் காத்திருந்தார். அதற்குப் பிறகு புதிய வீடு ஒன்று கட்ட ஆரம்பித்தார்.

ஓர் ஒய்வு நாளன்று கிழவர்கள் இருவரும் அந்த வீட்டு வாசலில் சந்தித்தார்கள். அருகில் கிடந்த மரச் சாமான்மீது உட்கார்ந்துகொண்டு பேச ஆரம்பித்தார்கள்.

"ஆமாம், நம் பிரார்த்தனையை எப்பொழுது செலுத்துகிறது?" என்று கேட்டார் எலிஷா.

எபிம் முகத்தைச் சுளித்துக்கொண்டார்.

"கொஞ்சம் பொறுத்துத்தான் ஆகவேணும். இந்த 'விசை' மகசூல் மோசம் பண்ணிவிட்டதா? சுலபமாக முடித்துவிடலாம், நூறு ரூபிளுக்குமேல் ஆகாது என்று இந்தக் குடிசையில் கையை வைத்தேன—முன்னூறை இழுத்து விட்டது, இன்னும் முடிந்தபாட்டைக் காணேம். கோடைவரையில் போகணும். பிழைத்துக் கிடந்தால், கோடையில் கட்டாயம் போவோம்" என்ருர் எபிம்.

"இனிமேல் தள்ளிப் போடக் கூடாதென்று எனக்குப் படுகிறது. இப்பொழுதே கிளம்பி விட வேண்டும். இளவேனிற் காலம் தான் சரியான சமயம்."

"சரியான சமயந்தானேயா, கட்டிடம் என்ன ஆகிறது? அதை இப்படியே விட்டு விடுகிறதா?"

"கவனித்துக் கொள்ள வேறு யாரும் இல்லை போலிருக்கிறது! உங்கள் பிள்ளை இருக்கிறான், பார்த்துக் கொள்ளுகிறான்."

"அதெப்படி? பெரியவன்—நம்ப முடியாது—சில சமயங்களில் குடி மீறிப்போகிறது."

"சரிதான், நாம் செத்தால்? நாம் இல்லாமல் கூட அவர்கள் எப்படியோ வாழ்க்கை நடத்தத்தான் போகிறார்கள். உங்கள் மகன் இப்பொழுதிருந்தே கொஞ்சம் அனுபோகம் அடையட்டுமே!"

"அது சரிதான். ஆனால், என்னமோ ஒரு காரியத்தைத் துவக்கி விட்டால், முடிவு வரையில் இருந்து பார்த்தால்தான் திருப்தியாகிறது."

"இதோ பாரும். நாம் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து பார்த்துவிட்டுப் போவதற்கு இந்த ஆயுள் போதாது. அன்று வீட்டில் பெண்கள் ஈஸ்டர் பண்டிகைக்காகக் கழுவுகிறதும் மெழுகுகிறதுமாக இருந்தார்கள். இங்கே ஒன்று பாக்கி, அங்கே மற்றொன்று—நினைத்தபடி பூராவும் செய்து முடிக்க முடியவில்லை. என் பெரிய மருமகள் புத்திசாலி. அவள் சொன்னாள்: 'நல்ல வேளை, பண்டிகை நமக்காகக் காத்துக்கொண்டிருக்காமல் வந்துவிடுகிறது. இல்லாதபோனால் எவ்வளவு செய்தாலும் நாம் அதற்குத் தயாராகப் போகிறதில்லை'."

எபிம் யோசனையில் ஆழ்ந்தார்.

"இந்தக் கட்டிடத்திலே 'ஏகப்பட்ட' பணத்தைப் போட்டு விட்டேன். பிரயாணம் புறப்படுகிற

வன் வெறும் கையுடனா புறப்படுகிறது? ஆளுக்கு நூறு ரூபிளாவது வேண்டும் நிச்சயம். அதென்ன சின்னத் தொகையா?" என்றார் கடைசியாக.

எலிஷா சிரித்தார்.

"ஓய், இந்தாரும், எனக்கு இருக்கிறதற்குமேல் பத்துப் பங்கு இருக்கிறது உமக்கு—நீர் பணத்தைப் பற்றி யோசிக்கிறீர். எப்பொழுது புறப்படுகிறோம் என்பதைச் சொல்லும். இப்பொழுது கையில் ஒன்று மில்லை யென்றாலும் அதற்குள் தேவையான பணம் சரிபண்ணி விடுகிறேன்."

எபிமும் புன்னகை செய்தார்.

"அடட, நீர் அவ்வளவு பணம் புரட்டுகிறீர் என்று எனக்குத் தெரியாதே! ஆமாம், எப்படி, எங்கே சமாளிக்கப்போகிறீர்?"

"வீட்டில் ஏதாவது கொஞ்சம் பொருக்கிப் பிணைத்து விடுவேன். அது போதவில்லை என்றால் பத்துத் தேன் கூடுகளைப் பக்கத்து வீட்டுக்காரனுக்கு விற்றால் தீர்ந்தது. ரொம்ப நாளாகக் கேட்டுக்கொண்டு கூட இருக்கிறான்."

"இந்த வருஷம் நன்றாக அடை வைத்தால், அப்புறம் 'ஏனடா விற்றோம்' என்று விசாரப்படுவீர்."

"விசாரப்படுவேனா! அந்த சமாசாரம் என்னிடம் கிடையாது. என் பாவங்களைத் தவிர வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் நான் என் வாழ்க்கையில் விசாரப்பட்டது கிடையாது. ஆத்மாவைக் காட்டிலும் முக்கியமானது என்ன ஐயா?"

"அது சரி, அதற்காக வீட்டு விஷயங்களை நஷ்டப்படுத்தலாமா?"

"ஆத்மாவே நஷ்டமாகி விட்டால்? அது இன்னும் மோசமாச்சே! 'வேண்டுதல்' செய்துகொண்டோம். இந்தாரும், ஒரு வார்த்தையாகச் சொல்லுகிறேன், கிளம்பும் போவோம்!"

2

கடைசியில் ஒரு விதமாக எலிஷா தன் நண்பரைச் சரிசெய்து விட்டார். நன்றாக யோசனை செய்துவிட்டுக் காலையில் எபிம் எலிஷாவிடம் வந்தார்.

"நீர் சொன்னது வாஸ்தவம்தான். போவோம். வாழ்வதும் இறப்பதும் இறைவன் கையில் இருக்கிறது. இப்பொழுதே—உயிரும் உடலில் வலுவும் இருக்கிறபொழுதே—போகவேண்டியதுதான்" என்றார் எபிம்.

இருவரும் ஒரு வாரத்திற்குள் புறப்படத் தயாரானார்கள். எபிம் கையில் பணம் இருந்தது. தான் நூறு ரூபிள் எடுத்துக்கொண்டு இருநூறைப் பெண்சாதியிடம் கொடுத்தார்.

எலிஷாவும் தயாரானார். பத்துத் தேன் கூடுகளைப் பக்கத்து வீட்டுக்காரனுக்கு, கோடைக்குள் வந்து அடையும் தேனீ உள்பட, விலை பேசிக் கொடுத்துவிட்டார். அதில் எழுபது ரூபிள்கள் கிடைத்தன. பாக்கியை வீட்டிலுள்ளவர்களிட மிருந்து தட்டிக் கொட்டிச் சேர்த்து அவர்களை அநேகமாகத் தம்பிடியின்றிச் செய்து விட்டார். பெண்சாதி தன் சாவுச்

சடங்குகளுக்காகச் சேர்த்து வைத்திருந்தது முழு வதையும் எடுத்துக் கொடுத்தாள். நாட்டுப் பெண்ணும் தன்னிடம் இருந்ததைக் கொடுத்தாள்.

எபிம் தன் மூத்த மகனிடம் எதெதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னார். எப் பொழுது, எவ்வளவு புல் அறுத்துவிட வேண்டும், எருவை எப்பொழுது வண்டியேற்ற வேண்டும், குடி சையை எப்படி முடித்துச் சார்பு போடவேண் டும்—எல்லாவற்றிற்கும் யோசனை செய்து அதன் படி உத்தரவுகள் கொடுத்தார். எலிஷாவோ, விற்ற தேன் கூடுகளைத் தனியாக வைத்திருந்து ஏமாற்றுமல் அவனிடம் சேர்க்கும்படி மனைவியிடம் சொன்னார். வீட்டுச் சங்கதிகளைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

"பார்த்துக் கொள்ளுங்கள், சமயத்திற்கேற்ற படி செய்யுங்கள் எல்லாவற்றையும். நீங்கள் பொறுப் பாளிகள்; உங்களுக்கு எப்படிச் செய்தால் சௌகரி யமோ அந்தமாதிரி செய்யுங்கள்" என்றுமட்டும் சொன்னார் எலிஷா.

கிழவர்கள் புறப்பட ஆயத்தமானார்கள். வீட் டில் இருவருக்கும் ரொட்டி தட்டிக் கொடுத்தார்கள்; கையில் கொண்டுபோவதை வைத்துக்கொள்ளப் பைகள் தயாரித்துக் கொடுத்தார்கள். காலில் சுற்றிக் கொள்ள கம்பளியில் கால் பட்டைகள் வெட்டிக் கொடுத்தார்கள். கிழவர்கள் புதுத்தோல் செருப்புகள் அணிந்து, கையில் மரப்பட்டைச் செருப்புகளும் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் குடும்பங்கள்

கிராமத்து எல்லை வரையிலும் கூடப்போய் வழியனுப்பினார்கள். கிழவர்கள் இந்த மாதிரியாக யாத்திரை கிளம்பினார்கள்.

எலிஷா உற்சாகமாக வீட்டைவிட்டுப் புறப்பட்டார். கிராம எல்லையைத் தாண்டினதும் வீட்டு விஷயங்களையே மறந்தார். கூட்டாளியை எப்படிச் சந்தோஷப்படுத்துவது, எப்படி ஒரு சின்ன வார்த்தை பெரிய வார்த்தைகூடப் பிறரிடம் சொல்லிவிடாமல் இருப்பது, புறப்பட்டமாதிரி ஒரு சண்டை, சச்சரவின்றி எப்படி நல்லபடியாக வீடு திரும்புவது—இவற்றில் அவருக்குக் கவனம். நடந்தபடியே எலிஷா ஏதாவதொரு தோத்திரப் பாடலை மெதுவாகத் தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுவார்; அல்லது நினைவிற்கு வந்த மதப் பெரியார்களின் வாழ்க்கைச் சம்பவங்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பார். வழியில் யாரையாவது சந்தித்தாலும், இரவிற்கு எங்கேயாவது தங்கினாலும், முடிந்தவரையில் இதமாகவே நடந்துகொண்டு கடவுளைப் பற்றியே பேசுவார். இப்படிச் சந்தோஷமாக அவர் பிரயாணத்தைக் கழித்தார். ஒன்றைத்தான் அவரால் விடமுடியவில்லை; பொடிடப்பியை ஊரிலேயே வைத்துவிட்டு வந்திருந்தாலும் சபலம் போகவில்லை. வழியில் எவனோ ஒருவன் கொஞ்சம் பொடி கொடுத்தான். அடிக்கடி கொஞ்சம் பின் தங்கி (தன் சகாவைக் கெட்ட பழக்கத்தில் இழுக்காதிருக்க) ஒரு தரம் பொடி போட்டுக்கொள்வார்.

எபிமும் திடமாகவே நடந்தார்; ஒரு பிசகும் செய்யாமலும் உபயோகமற்ற வார்த்தை பேசாமலும் தான் இருந்தார். ஆனால் அவர் உள்ளம் மட்டும் கவலையற்றிருக்கவில்லை. வீட்டு நினைப்புகள் விடாமல் வாதனை செய்தன. வீட்டில் என்ன நடக்கிறதோ என்று தொல்லைப்பட்டார். 'மகனிடம் இதைச் சொல்ல மறந்து போனேனே, அந்த விஷயத்தில் என்ன செய்கிறானோ? சரியாகச் செய்ய வேண்டுமே அவன்!'—என்றெல்லாம் நினைவுகள் ஓடின. வழியில் உருளைக்கிழங்கு சாகுபடியாவதைப் பார்த்தாலும், எருவண்டி போவதைப் பார்த்தாலும், உடனே தன் மகன் தன் சொற்படி நடந்திருப்பானா என்ற எண்ணம் வந்து விடும் அவருக்கு. அந்த வேதனையில் திரும்பிப்போய்க்கூட 'அப்படிச்செய், இப்படிச் செய்!' என்று சொல்லலாம் போல இருக்கும் அவருக்கு.

3

இப்படி ஐந்து வாரங்கள் நடந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த நாட்டுச் செருப்புகள் தேய்ந்து போய் விட்டன. சின்ன ரஷ்யாவை* அடைந்ததும் புதுச் செருப்பு வாங்கவேண்டியதாகிவிட்டது. புறப்பட்டதிலிருந்து அதுவரை சாப்பாட்டிற்கும் இரவு தங்குவதற்கும் அவர்கள் கையிலிருந்து செலவழிக்கவேண்டியிருந்தது. சின்ன ரஷ்யாவிற்கு வந்ததும் அவர்களைத்

---

*ரஷியாவிற்குத் தென்மேற்கில் உள்ளது. இப்பொழுது உக்ரைன் என்று வழங்கப்படுகிறது.

தங்கள் குடிசைகளுக்கு வரவேற்பதில் ஜனங்கள் போட்டி போட்டுக்கொண்டார்கள். வீட்டிலிட்டு உணவளித்துப் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல, வழியில் சாப்பிட ரொட்டி, பட்சணம் எல்லாம் அவர்கள் பையில் நிரப்பிக் கொடுத்தார்கள்.

இந்த மாதிரி, செலவின்றி, ஐநூறு மைல் பிரயாணம் முடிந்தது. அடுத்த பிரதேசத்திற்குப் போனார்கள். அங்கே அந்த வருஷம் விளைச்சல் இல்லை. ஆனால் ஜனங்கள் அவர்கள் இரவு தங்கினதற்குப் பணம் கேட்கவில்லை; சாப்பாடு இனாமாகப் போட முடியவில்லை. பணம் கொடுத்தால்கூடச் சாப்பாடு துர்லபமாகிவிட்டது. முந்தின வருஷம் விளைச்சல் கொஞ்சம்கூட இல்லாமல் போய்விட்ட தென்றார்கள் குடியானவர்கள். நில மிருந்தவர்கள் எல்லாம் 'பாபர்' களாகி, இருந்ததை விற்கவேண்டி வந்துவிட்டதாம். நடுத்தரமாக இருந்தவர்கள் ஒன்று மில்லாமற் போய்த் திண்டாடினார்கள். ஏழைகள் பாடு சொல்லவேண்டியதில்லை. அங்கிருந்து வெளி யேறாதவர்கள்—ஒன்று பிச்சை எடுத்தார்கள், அல்லது வீட்டில் பட்டினி கிடந்தார்கள். பனிக்காலத்தில் தவிடையும் பச்சிலைகளையும் தின்றார்கள்.

ஒருநாள் இரவு அவர்கள் ஒரு சிறு கிராமத்தில் தங்கினார்கள். பதினைந்து பவுண்டு ரொட்டி விலைக்கு வாங்கிக்கொண்டு அங்கே இரவு தங்கி, பொழுது விடிவதற்கு முன்பே கிளம்பி வெயிலுக்குமுன் வெகுதூரம் போய்விட்டார்கள். எட்டு மைல் போனதும் ஓடை

யொன்று தென்பட்டது. அங்கே ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து ரொட்டியை அதில் தோய்த்துத் தின்ருர்கள். பிறகு கால் பட்டையை மாற்றிச் சிறிது இளைப்பாறினுர்கள். எலிஷா பொடியைக் கையில் எடுத்தார். எபிம் தலையை அசைத்தார்.

"நீர் ஏன் அந்தக் கெட்ட வாடிக்கையை விட்டுத் தொலைக்கமாட்டேன் என்கிறீர்?"

"அதென்னமோ சனியன், விடமாட்டேன் என் கிறது" என்ருர் எலிஷா.

திரும்பக் கிளம்பிப்போனுர்கள். இன்னுமொரு எட்டு மைல் போனதும் ஒரு பெரிய கிராமத்தை அடைந்தார்கள். அதில் நுழைந்தே போனுர்கள். வெயில் சரியாக ஏறிவிட்டது. எலிஷா ஓய்ந்து போய் விட்டார். கொஞ்சம் களைப்பாறி ஏதாவது தாக சாந்தி செய்துகொள்ள வேண்டுமென்பது அவர் விருப்பம். எபிம் நிற்கவில்லை. இருவரில் எபிம்தான் நடையில் வேகமுள்ளவர்; அவருடன் பின் தொடர்வது எலிஷா வுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

"கொஞ்சம் ஏதாவது குடித்தால் நல்லது" என்ருர் எலிஷா.

"சரி, குடியும். எனக்கொன்றும் வேண்டாம்."

எலிஷா நின்றுவிட்டார்.

"நீர் போய்க்கொண்டே இரும், அப்படியானுல். அதோ தெரிகிற குடிசைக்குப் போய்விட்டு நிமிஷத் தில் உம்மை வந்து பிடித்துவிடுகிறேன்" என்ருர் எலிஷா.

"சரி" என்று சொல்லிவிட்டு எபிம் ரஸ்தா வோடு மேலே போனர். எலிஷா திரும்பிக் குடிசைக் குப் போனர்.

அது மண் பூசின சிறு குடிசை. கீழே கருப்பு, மேலே வெள்ளை அடித்திருந்தது. ஆனல் மண் உதிர்ந்து போயிருந்தது. மண்பூசி வெகுநாளாயிற்று போலிருந்தது; கூரைகூட ஓரிடத்தில் எடுபட்டுப் போயிருந்தது. சுற்றுத்தாழ்வாரம் தாண்டித்தான் வாசல்படி. தாழ்வாரத்தில் ஏறி, குடிசையைச் சுற்றி யிருந்த ஒரு மண்மேட்டின்பக்கம் ஒரு மனிதன் படுத்திருப்பதைக் கண்டார். இளைத்துத் தாடியற்ற வன். ஊர் வழக்கப்படி ஷர்ட்டை சராயிக்கடியில் திணித்திருந்தான். நிழலில் படுத்துக்கொண் டிருந் திருக்கிறன். அப்பொழுது நன்ருக வெயிலேறி விட்டபடியால் அவன்மேல் நன்ருக வெயில் அடித் துக்கொண்டிருந்தது. தூங்கவில்லை, ஆனல் அப்படியே கிடந்தான். அவனைக் கூப்பிட்டு எலிஷா ஏதாவது குடிக்கிறதற்கு வேண்டுமென்று கேட்டார். பதி லில்லை.

"உடம்பு சரியில்லையோ அல்லது உபகாரம் செய்ய மனமற்றவனே" என்று எண்ணிக்கொண்டு எலிஷா கதவண்டை போனர். உள்ளே குழந்தை அழும் சத்தம் கேட்டது. கதவின்பிடியாக இருந்த வளையத்தைப் பிடித்து ஆட்டிக் கதவைத் தட்டினர்.

"யார் உள்ளே?" என்றர். பதிலில்லை. மறு படியும் தன் கைத்தடியால் கதவைத் தட்டினர்.

"யாரையா உள்ளே, புண்ணிய முண்டு, உங்களுக்கு?" ஓசை இல்லை.

"கொஞ்சம் கதவைத் திறவுங்கள், கடவுள் பெயரால்!" அப்பொழுதும் பதில் இல்லை.

எலிஷா திரும்பிப்போகும் சமயம், உள்ளே யாரோ முனகும் சத்தம் கேட்டது.

"அடட! ஏதோ கஷ்டம் ஏற்பட்டிருக்க வேண்டும் இங்கே இருப்பவர்களுக்கு, பார்க்கிறேன் எதற்கும்!" என்று சொல்லிக்கொண்டு எலிஷா உள்ளே நுழைந்தார்.

4

எலிஷா வளையத்தைத் தள்ளினர்; கதவு தாழ்ப்பாள் போடாமல் இருந்தது. திறந்துகொண்டு குறுகிய ரேழி வழியாகப் போனர். கூடத்துக் கதவு திறந்திருந்தது. இடது பக்கத்தில் செங்கல் அடுப்பு ஒன்று இருந்தது. எதிர்ச் சுவரில் பூஜை அலமாரி, அதன்முன் ஒரு மேஜை, அதன் அருகில் ஒரு பெஞ்சு, அதில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள்; உடம்பில் ஒற்றை ஆடை; தலையில் தொப்பி இல்லை. தலையை மேஜைமேல் சாய்த்துக்கொண் டிருந்தாள். பக்கத்தில் இளைத்த கறுவல் சிறுவன், வயிறு தள்ளிப் போயிருந்தது. அவளை ஏதோ கேட்டவண்ணம் அவள் கைச் சட்டையைப் பிடித்திழுத்து அழுது கொண்டிருந்தான். எலிஷா அங்கே போனர். ஒரே துர்நாற்றம். சுற்று முற்றும் பார்த்தார். ஒரு கணப்பின்

அருகில் ஒருத்தி படுத்துக் கிடந்தாள். கட்டைபோல நீட்டிக்கிடந்தாள். தொண்டையிலிருந்து களகள வென்று சத்தம் கிளம்பிற்று. காலை நீட்டியும் மடக்கியும் புரண்டுகொண்டிருந்தாள். அவளிட மிருந்து தான் அந்த துர்நாற்றம் வந்தது. தானாக அவளால் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை யென்றும் யாரும் ஒத்தாசை செய்யவில்லை யென் றும் தெரிந்தது. கிழவி தலையெடுத்து வந்தவரைப் பார்த்தாள்.

"என்ன வேண்டும்? என்ன வேண்டுமையா? எங்களிடத்தில் ஒன்றுமில்லை."

அவள் சிறிய ரஷ்ய பாஷையில் பேசினாள்; ஆனால் எலிஷா அர்த்தம் செய்துகொண்டார்.

"கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்க வந்தேன், தாயே!"

"இங்கே யாரும்—இங்கே யாரும்—கொண்டு வர ஏனம் கூடக் கிடையாது. போங்கள்."

"அப்படியானால் உங்களில் யாருக்கும் அந்தப் பெண்ணைக் கவனிக்கக்கூட சக்தி கிடையாதா?" என்று எலிஷா கேட்டார்.

"இல்லை, யாரும் இல்லை. என் மகன் வெளியே செத்துக்கொண்டிருக்கிறான். நாங்கள் இங்கே உள்ளே உயிரோடு மன்றாடிக்கொண் டிருக்கிறோம்."

புது ஆளைக் கண்டதும் சிறுவன் அழுகையை நிறுத்திவிட்டான். கிழவி பேச ஆரம்பித்தவுடனே அவனும் மறுபடி ஆரம்பித்தான். அவன் சட்டை

யைப் பிடித்திழுத்துக்கொண்டு "பாட்டி, ரொட்டி பாட்டி!" என்றான்.

எலிஷா கிழவியை மேலும் ஏதோ கேட்க இருந்தார். வெளியே கிடந்த ஆள் தட்டுத் தடுமாறி உள்ளே வந்தான். சுவரைப் பிடித்துகொண்டே ரேழியைத் தாண்டினான், கூடத்தில் கால் வைத்ததும் வாசற்படி யண்டையே கீழே சாய்ந்தான். எழுந்திருக்க முயற்சி செய்யாமலே, விட்டு விட்டுப் பேச ஆரம்பித்தான். ஒரு வார்த்தை சொல்லிவிட்டு நிறுத்தி மூச்சு வாங்கினான், திணறினான்.

"எல்லோருக்கும்—வியாதி—பிடித்துக்கொண்டு விட்டது. பஞ்சம்—அவனைப் பசி—கொல்லுகிறது" என்று சொல்லிச் சிறுவனைக் காட்டி அழ ஆரம்பித்தான்.

தன் தோளிலிருந்த பையைத் தூக்கி எலிஷா வாரை அவிழ்த்து அதைக் கீழே வைத்தார். பிறகு அதைப் பெஞ்சியின்மேல் எடுத்துவைத்துக் கயிற்றை அவிழ்த்தார். சாக்கைத் திறந்து ஒரு ரொட்டியை எடுத்துக் கத்தியால் ஒரு பாகத்தை வெட்டி யெடுத்து அந்த ஆளிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கிக் கொள்ளாமல் சிறு பையனையும் கணப்பருகே பதுங்கிக்கிடந்த சிறு பெண்ணையும் காண்பித்தான்—'அவர்களுக்குக் கொடுங்கள்' என்ற அர்த்தத்துடன்.

எலிஷா சிறுவன் பக்கம் அதை நீட்டினார். ரொட்டி வாசனை எட்டியதுமே கைகளை நீட்டி அதை வாங்கி இரு கைகளிலும் வைத்துக்கொண்டு ஆவ

னுடன் கடித்தான். அவன் மூக்கு அதற்குள் பதிந்து விட்டது. சிறு பெண் மெள்ள வந்து ரொட்டியைப் பார்த்து ஏங்கினுள். எலிஷா அவளிடம் ஒரு துண் டைக் கொடுத்தார். பிறகு இன்னொரு துண்டு வெட் டிக் கிழவியிடம் கொடுத்தார். அவளும் அதை மென்று தின்ன ஆரம்பித்தாள்.

"கொஞ்சம் தண்ணீர் கொண்டுவர முடிந்தால்—அவர்கள் வாய் உலர்ந்து போயிருக்கிறது. நேற்று நான் தண்ணீர்—நேற்ரு இன்ரு ஞாபகமில்லை—கொண்டுவரப் பார்த்தேன். கீழே விழுந்துவிட்டேன். மேலே நடக்க முடியவில்லை. குடம்கூட அங்கேயே கிடக்கிறது. அல்லது யார் எடுத்துக்கொண்டு போய் விட்டார்களோ?" என்ருள் அவள் மெதுவாக.

கிணறு எங்கிருக்கிறது என்று எலிஷா கேட் டார். கிழவி சொன்னுள். எலிஷா வெளியே போய்ப் பார்த்தார். குடம் இருந்தது; தண்ணீர் கொண்டுவந் தார். எல்லோரும் குடித்தார்கள். குழந்தைகளும் கிழவியும் ஜலத்துடன் இன்னும் கொஞ்சம் ரொட்டி தின்ருர்கள். ஆனுல் அந்த ஆள் தொடமாட்டேன் என்று விட்டான்.

"என்னுல் தின்ன முடியாது" என்ருன்.

அவ்வளவு நேரமும் கீழே கிடந்த பெண்ணுக்குப் பிரக்ஞை கிடையாது. புரண்டுகொண்டே இருந் தாள். உடனே எலிஷா கிராமத்துக் கடைக்குப் போய், விறகு, உப்பு, மாவு, எண்ணெய் எல்லாம் கொஞ்சம் வாங்கிக்கொண்டு வந்தார். ஒரு கோடாலி

யைத் தேடி எடுத்துக் கொஞ்சம் விறகு உடைத்து அடுப்பு மூட்டினர். சிறு பெண் வந்து உதவிசெய்தாள். கொஞ்சம் குழம்பும் வைத்து அந்தப் பசி நோயில் பரிதபித்த மக்களுக்கு ஓர் ஆகாரம் செய்வித்தார்.

5

அந்த ஆள் கொஞ்சம் சாப்பிட்டான், கிழவியும் கொஞ்சம் உண்டாள். சிறுவனும் சிறுமியும் தட்டைச் சுத்தமாக நக்கிவிட்டுச் சுருண்டு படுத்துக்கொண்டு அருகருகே அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

ஆளும் கிழவியும் எலிஷாவிடம் தாங்கள் அந்தக் கதிக்கு உள்ளான கதையைச் சொன்னார்கள்.

"அதற்கு முன்பே நாங்கள் ஏழை. விளைச்சல் இல்லாமற் போகவே, கையில் இருந்த தானியமும் கொஞ்ச நாள்தான் இருந்தது. பனிக்காலம் வந்த பொழுது கையில் ஒன்றுமே இல்லை. அக்கம் பக்கத்திலும் மற்ற விடங்களிலும் பிச்சை யெடுக்கவேண்டியதாயிற்று. முதலில் கொடுத்தார்கள்; பிறகு எல்லோரும் மறுக்க ஆரம்பித்தார்கள். சிலருக்கு எங்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்றுதான் ஆசை; ஆனல் அவர்களிடமும் ஒன்றுமில்லை. எங்களுக்கும் கேட்க வெட்கம்; எங்கு பார்த்தாலும் கடன்—பணம், மாவு, ரொட்டி எல்லாம்."

"வேலையைத் தேடி அலைந்தேன்" என்று அந்த ஆள் ஆரம்பித்தான்: "எங்கும் கிடைக்கவில்லை. எல்லோரும் உயிரை உடலில் வைத்துக்கொள்ள வேலை

செய்யக் காத்துக்கொண் டிருந்தார்கள். ஒருநாள் ஒரு சிறு வேலை கிடைக்கும். பிறகு இரண்டு நாள் வேலைக்கு அலையவேண்டும். பிறகு கிழவியும் சிறு குழந்தைகளும் கொஞ்சம் விலகிப்போய்ப் பிச்சை எடுக்க ஆரம்பித்தார்கள்: ஆனால் பலன் ஒன்றும் காணோம். ரொட்டியேதான் எங்கும் கிடையாதே! அப்படியும் எப்படியோ திண்டாடி வயிற்றுப் பாட்டுக்குச் சம்பாதித்தோம். மெள்ள அடுத்த அறுவடை வரை தள்ளி விடலாமென்றும் நினைத்தோம். ஆனால் இளவேனிற் காலத்தின் போதே ஜனங்கள் ஏதாவது கொஞ்ச நஞ்சம் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள். பிறகுதான் இந்த வியாதி பிடித்துக்கொண்டது எங்களை. நிலைமை மேலும் மேலும் நெருக்கடியாயிற்று. ஒருநாள் சாப்பிட ஏதாவது கிடைக்கும்; பிறகு தொடர்ந்து இரண்டு நாள் பட்டினி. புல்லைத் தின்ன ஆரம்பித்தோம். அதைத் தின்றது தானோ என்னமோ என் மனைவிக்கு உடம்பிற்கு வந்துவிட்டது. நடமாடக்கூட முடியாமல் போயிற்று அவளுக்கு. எனக்கும் ஓய்ந்துவிட்டது. எனவே எங்களுக்கு உயிர் வாழ ஒரு வழியும் இல்லாமற் போயிற்று."

கிழவி ஆரம்பித்தாள்: "தனியாக நான் கொஞ்ச காலம் அப்படி யிப்படியாகத் தள்ளினேன். கடைசியில் உணவில்லாததால் நானும் உட்கார்ந்து போய்விட்டேன். அந்தப் பெண்ணும் இளைத்து ஏங்கிப்போனாள். அக்கம் பக்கத்தாரிடம் போகச் சொன்னேன்—குடி

சையை விட்டு நகரமாட்டேனென்றுவிட்டாள். ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டே கிடந்தாள். முந்தாநாள் பக்கத்து வீட்டிலிருப்பவள் ஒருத்தி உள்ளே வந்து பார்த்தாள். நாங்கள் பட்டினியாயும் வியாதி பிடித்தும் கிடப்பதைப் பார்த்து வாயை மூடிக்கொண்டு போய்விட்டாள். அவள் புருஷன் எங்கேயோ போக வேண்டி ஏற்பட்டுவிட்டது. அவன் குழந்தைகளே சோற்றுக்கு வழியில்லாமல் திண்டாடின. எனவே நாங்கள் சாவை எதிர்பார்த்துக் கிடந்தோம்.''

இந்தக் கதையைக் கேட்டதும் எலிஷா அன்று தன் நண்பனோடு போய்ச் சேர்ந்துகொள்ளும் யோசனையைக் கைவிட்டார். இரவு முழுவதும் அவர்களுடன் தங்கினர். மறுநாள் காலையில் எழுந்து, தன் வீட்டில் செய்வது போல் வீட்டு வேலையைச் செய்ய ஆரம்பித்தார். கிழவியின் உதவியைக்கொண்டு ரொட்டிக்கு மாவைப் பிசைந்தார், அடுப்பை மூட்டினர். சிறுமியைக் கூட்டிக்கொண்டு அக்கம் பக்கத்தாரிடம் சென்று முக்கியமான சில சாமான்களைச் சேகரித்தார் —வீட்டில் ஒன்றுமில்லை—வயிற்றுச் சோற்றுக்காக அவை யெல்லாம் எல்லாம் விற்பனையாகிவிட்டது. எதெது அவசியமோ அவற்றை எலிஷா மறுபடி வாங்கினர். அங்கே ஒருநாள் தங்கினர், பிறகு ஒருநாள், மூன்று நாளாகிவிட்டது. சிறுவன் கொஞ்சம் தெம்படைந்து எலிஷா உட்காரும் போதெல்லாம் பெஞ்சோரமாகப் பதுங்கிவந்து அவரிடம் ஒட்டிக்கொண்டான். சிறுமியும் தெளிவடைந்து வேலைகளில் ஒத்தாசை

செய்து அவர் பின்னாலேயே "தாத்தா, தாத்தா!" என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடிவந்தாள்.

கிழவி வலிவுபெற்று மெள்ளப் பக்கத்து வீட்டுக் காரி ஒருத்தியைப் போய்ப் பார்த்தாள். அந்த ஆளும் கொஞ்சங் கொஞ்சமாகக் குணமடைந்து சுவரைப் பிடித்துக்கொண்டு நடமாடினான். அவன் மனைவி தான் எழுந்திருக்கவில்லை; அவளும் மூன்றாம் நாள் சுய நினைவடைந்து ஆகாரம் கேட்டாள்.

"வழியில் இவ்வளவு தாமதம் ஆகிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இனிமேல் கிளம்பவேண்டியதுதான்" என்று நினைத்தார் எலிஷா.

6

நாலாம் நாள் எலிஷா 'கோடை உபவாஸம்' என்ற விரதத்தின் பிறகு சாப்பிடும் தினம்.

"இன்று இங்கே தங்கி இவர்களுடன் உபவாசத்தை முடிக்கலாம், போய் ஏதாவது வாங்கிக் கொண்டுவந்து இவர்களுடன் விருந்துண்டுவிட்டு நாளை மாலை புறப்பட்டு விடுகிறேன்" என்று எலிஷா எண்ணினார்.

உடனே அவர் கிராமத்துக்குள்ளே போய், பால், கோதுமை மாவு, கொழுப்பு—எல்லாம் வாங்கிக் கொண்டுவந்து, மறுநாளைக்கு ரொட்டி தட்டவும், வறுக்கவும் கிழவிக்கு உதவி செய்தார். விருந்தன்று எலிஷா கோவிலுக்குப் போய்வந்து குடிசையில் தன் நண்பர்களுடன் உபவாசத்தை முடித்தார். அன்று

வீட்டுக்காரி கொஞ்சம் எழுந்து நடமாடினுள். அவள் புருஷன் க்ஷவரம் செய்துகொண்டு, கிழவி துவைத்துக் கொடுத்த சட்டையைப் போட்டுக்கொண்டான். அவன் சாகுபடி நிலமும் புல்தரிசும் அடகுக்கு வைக்கப்பட்டிருந்த பணக்காரக் குடியானவனிடம் போய் அவன் நிலத்தையும் தரிசையும் அறுவடை வரையில் உபயோகித்துக்கொள்ள உத்தரவு கேட்டான். ஆனல் மாலையில் அவன் விசனத்துடன் வீடு திரும்பி உட்கார்ந்து கண்ணீர்விட ஆரம்பித்தான். அந்தப் பணக்காரன் இரக்கம் காட்டாமல் "பணம் கொண்டுவா!" என்று சொல்லிவிட்டான்.

எலிஷா மறுபடியும் யோசனையிலாழ்ந்தார்: "இப்பொழுது இவர்கள் எப்படிக் காலம் கழிப்பது? எல்லோரும் வைக்கோல் அடிக்கப் போவார்கள். இவர்கள் தரிசு நிலமோ அடகில் இருக்கிறது. எங்கிருந்து புல் அறுத்துக் காயப்போடுவார்கள்? கம்பு கதிர் வாங்கும். எல்லோரும் அறுவடை செய்வார்கள்; (இந்த வருஷந்தான் பூமிதேவி எப்படி விளைந்திருக்கிருள்!) இவர்களுக்கு என்ன இருக்கிறது? மூன்று ஏகராக்களும் அவனிடம் அடகில் கிடக்கின்றன. நான் போனவுடனே மறுபடியும் நான் முதலில் பார்த்த நிலைமைக்குத்தான் வந்து சேருவார்கள்."

எலிஷா தொந்தத்தில் அகப்பட்டுக்கொண்டார். கடைசியாக அன்று மாலை கிளம்புவதில்லை, மறு நாள் காலையும் இருப்பது என்று தீர்மானித்தார். தூங்க வாசல் தாழ்வாரத்திற்குப் போனுர். கடவுளை வணங்கி

விட்டுப் படுத்துக்கொண்டார். தூக்கம் வரவில்லை. உடனே கிளம்பவேண்டும் என்ற எண்ணம் ஒரு பக்கம்; ஏற்கெனவே பணமும் காலமும் அதிகமாக அங்கே செலவாகிவிட்டன. அந்த ஏழைகளிடம் இரக்கம் மற்றொரு பக்கம்.

"இதற்கு முடிவே இல்லைபோ லிருக்கிறது. முதலில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து ரொட்டியுடன் கொடுக்க நினைத்தேன்; அது என்னை எங்கே கொண்டுவந்துவிட்டது! இப்பொழுது நிலத்தையும் தரிசையும் மீட்டுக் கொடுத்தால்தான் பிரயோஜனம். அதைச் செய்தால், ஒரு பசுவும் கதிரை யேற்ற வண்டிக் குதிரை யொன்றும் வாங்கவேண்டும். எலிஷாப் பெரியாரே, நல்ல இக்கட்டில் வந்து மாட்டிக்கொண்டீர்! கை நழுவி எங்கோ மீளாமல் விழுந்து விட்டீர்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

எழுந்திருந்து தலைமாட்டில் இருந்த சட்டையை எடுத்துப் பிரித்துப் பையிலிருந்த பொடியைக் கொஞ்சம் எடுத்து ஒரு சிம்டா போட்டுக்கொண்டார்— யோசனை தெளிவாக ஓடுவதற்கோ என்னவோ?

முடியவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தார், ஒரு முடிவும் தென்படவில்லை. போகவேண்டியது முக்கியம்; ஆனால் இரக்கம் ஒரே இறுக்காக அவரை அங்கே இறுக்கிவிட்டது. என்ன செய்வதென்று அவருக்கு ஓடவில்லை. மறுபடியும் சட்டையை மடித்துத் தலைக்கடியே வைத்துக்கொண்டார். கோழி கூவுகிறவரை அப்படியே படுத்துக்கொண் டிருந்தார்.

அப்பொழுது கொஞ்சம் கண்ணயர்ந்தார். திடீரென்று யாரோ எழுப்பினதுபோல் இருந்தது. பிரயாணத்திற்குத் தயாராக முதுகில் சாக்கும் கையில் கம்புமாகத் தான் நின்றது போலிருந்தது. கதவும் கொஞ்சம் திறந்திருந்தது. அதன்வழியே நெருங்கிப் புகுந்து போய்விடலாம். வெளியே போகும்போது சாக்கு ஒரு பக்கத்து வேலியில் மாட்டிக்கொண்டது. அதை விடுவிக்கத் திரும்பினர்; கால்பட்டை மற்ருெருபுறம் மாட்டிக்கொண்டு அவிழ்ந்து போயிற்று. சாக்கை முரண்டி இழுத்தார். அப்பொழுது அதைப்பற்றிக் கொண்டது வேலியல்ல என்று தெரிந்தது. அந்தச் சிறுமி அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ரொட்டி, தாத்தா, ரொட்டி!" என்று கத்திக் கொண்டிருந்தாள்.

காலைப் பார்த்தார். அந்தச் சிறு பயல் பட்டையைப் பிடித்துக்கொண்டிருந்தான். வீட்டுக்காரனும் கிழவியும் ஜன்னல் வழியாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எலிஷா விழித்துக் கொண்டார். தனக்குத் தானே உரக்கச் சொல்லிக்கொண்டார்.

"நாளைக்கு அவர்கள் நிலத்தை மீட்கிறேன். குதிரை வாங்கிக் கொடுக்கிறேன், அறுவடை வரை வேண்டிய மாவும் குழந்தைகளுக்கு ஒரு பசுவும் வாங்குகிறேன். இல்லாவிட்டால் கடலுக்கப்பால் கடவுளைத் தேடப்போய் இங்கேயே—என் உள்ளத்திலேயே—அவரை நான் இழந்துவிடக் கூடும்."

மறுபடியும் எலிஷா படுத்துக்கொண்டு நன்ருக விடிகிற வரை தூங்கினர். எழுந்ததும் எழுந்திருக் காததுமாக அந்தப் பணக்காரக் குடியானவனிடம் போய், சாகுபடி நிலத்தையும் தரிசையும் பணம் கொடுத்து மீட்டார். அரிவாள் ஒன்றுவாங்கிக்(அதைக் கூட விற்றுவிட்டார்கள்) கொண்டுவந்தார். அந்த ஆளைப் புல் அறுக்க அனுப்பிவிட்டுத் தான் கிராமத்திற் குள் போனர். சத்திரத்தடியில் ஒரு குதிரையும் வண் டியும் ஏலத்திற்கு வருகிறது என்று கேள்விப்பட்டு அவர் உடனே அங்கே போய் அவற்றை விலைபேசி முடித்தார். ஒரு மூட்டை மாவு வாங்கி வண்டியி லேற்றிக்கொண்டு பசுவைத் தேடிச்சென்ருர். போகிற வழியில் இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு போனர்கள்.

"முதலில் அவரை அவர்களுக்குத் தெரியவே தெரியாதாம். அவரைச் சாதாரண மனிதன் என்று நினைத்தார்களாம். குடிக்கத் தண்ணீர் கேட்க உள்ளே வந்தவர், அங்கேயே தங்கிவிட்டார்! அவர்களுக்கு என்னென்ன வெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிருர்! ஏன், இன்று காலை, வண்டி குதிரை கூட வாங்கின ராம்! இந்தமாதிரி உலகத்தில் மனிதர்கள் இருப்பது நிரம்ப துர்லபம். அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால்கூடத் தகும்."

எலிஷா அந்தப் புகழ்ச்சியைக் கேட்டார். மாடு வாங்கப் போகாமல் திரும்பி வண்டியை ஓட்டிக் கொண்டு குடிசைவந்து சேர்ந்தார். குடிசையிலிருந்

தவர்கள் குதிரையைக் கண்டு ஆச்சரியமடைந்து போனார்கள். தங்களுக்குத்தான் என்று தெரிந்தும் கேட்கத் துணியவில்லை. வீட்டுக்காரன் வந்து கதவைத் திறந்தான்.

"குதிரை எங்கே கிடைத்தது?" என்று கேட்டான் அவன்.

"ஏன், வாங்கினேன். மலிவாகக் கிடைத்தது. போ, கொஞ்சம் புல் வெட்டிக்கொண்டு வந்து போடு. மூட்டையை உள்ளே கொண்டு போடு" என்றார் எலிஷா.

அவன் குதிரையை அவிழ்த்துவிட்டுச் சாக்கை உள்ளே கொண்டுபோனான். பிறகு புல்வெட்டிக் குதிரைக்குப் போட்டான். எல்லோரும் படுத்துக் கொண்டார்கள். எலிஷா வெளியில் போய் தெரு வோரமாகப் படுத்துக்கொண்டார். அன்றிரவு தன் மூட்டையையும் கூடவே வெளியே கொண்டுபோனார். எல்லோரும் தூங்கும்பொழுது எழுந்து, மூட்டையை முதுகில் கட்டிக்கொண்டு, கால்பட்டை, செருப்பு அணிந்த பிறகு, எலிஷா நண்பரைச் சேரப் புறப்பட்டார்.

7

எலிஷா மூன்று மைல் போனதும் விடிந்துவிட்டது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, பையைத் திறந்து, பணத்தை எண்ணிப் பார்த்தார். பதினேழு ரூபிள்களும் சில்லரையாக இருபது கோபெக்குகளும் தான் இருந்தன.

"சரி, இதைக்கொண்டு கடல் தாண்டிப்போக எண்ணுவது நடக்காது. பிச்சையெடுத்துக்கொண்டு போவதைக் காட்டிலும் சும்மா இருக்கலாம். நண்பர் எபிம் தனியாக ஜெருசலம் போய்விடுவார். என் பெயரில் கோவிலில் மெழுகுவர்த்தி ஏற்றிவைப்பார். நான் இனிமேல் இந்த ஆயுளில் பிரார்த்தனையை நிறைவேற்ற முடியாது என்று நினைக்கிறேன். தயாமூர்த்திக்குத்தான் பிரார்த்தனை; அவர் குற்றங்களை மன்னிப்பவர், கடவுள் கிருபை!" என்று எலிஷா தனக்குள் சொல்லிக்கொண்டார்.

எலிஷா எழுந்து மூட்டையைத் தூக்கிச் சரியாகத் தோளில் போட்டுக்கொண்டு வீட்டைப் 'பார்க்க'க் கிளம்பினார். யாரும் தன்னைத் தெரிந்துகொள்ளக் கூடாதென்று கிராமத்திற்குள் போகாமல் சுற்றி வளைத்துக் கொண்டு வேகமாக வீட்டுப் பக்கம் நடந்தார். வீட்டிலிருந்து கிளம்பி வரும்பொழுது பாதை வளருவதுபோல் இருந்தது: எபிம்முடன்கூட நடந்துவருவதே கஷ்டமாக இருந்தது. திரும்பின போது சிரமமே தெரியாமல் கடவுள் கிருபையால் விளையாட்டுப் போல நடந்துபோனார். கைத்தடியைச் சுற்றிக் கொண்டே நாளுக்கு நாற்பது ஐம்பது மைல் நடந்தார்.

அவர் வீடு திரும்பினபொழுது அறுவடை முடிந்துவிட்டது. திரும்ப அவரைக் கண்டதும் குடும்பம் மகிழ்ச்சி அடைந்தது. எல்லோரும் என்ன நடந்தது என்று அறிய ஆவலாயிருந்தார்கள். ஏன்,

எப்படி அவர் பின்தங்கவேண்டி ஏற்பட்டது? ஏன் ஜெருஸலம் போகாமல் திரும்பிவிட்டார்?—என்றெல் லாம் கேட்க அவர்களுக்கு ஆசை. ஆனால் எலிஷா ஒன்றும் சொல்லவில்லை.

"நான் அங்கே போவது கடவுளுக்கு இஷ்ட மில்லை. வழியில் பணத்தை இழந்து பின்தங்கி விட்டேன், அவ்வளவுதான். கடவுள்பேர் சொல்லி என்னை மன்னியுங்கள், வேறொன்றும் சொல்லமுடி யாது" என்று சொல்லிவிட்டார் எலிஷா.

கையில் மிச்சமிருந்த பணத்தை எலிஷா பெண் சாதியிடம் கொடுத்தார். பிறகு வீட்டு விவகாரங் களைப்பற்றி விசாரித்தார். எல்லாம் ஒழுங்காகத் தான் நடைபெற்றது. எல்லா வேலைகளும் நடந் தேறின; ஒன்றும் நின்றுபோகவில்லை. எல்லோரும் ஒத்து அமைதியுடன் காலம் தள்ளினார்கள்.

அவர் வந்து விட்டதைப்பற்றி எபிம் குடும்பத் தார் அன்றே கேள்விப்பட்டார்கள். தங்கள் வீட் டுக் கிழவரைப் பற்றித் தகவல் கேட்க அவர்கள் வந் தார்கள். அவர்களுக்கும் எலிஷா அதே பதில்களைத் தான் சொன்னார்.

"எபிம் வேகமாக நடப்பவர். குரு பீடர் தினத்திற்கு மூன்று நாள் முன்பு நாங்கள் பிரிந்தோம். அவரைப் போய்ப் பிடித்துவிடலாம் என்று உத்தேசித் திருந்தேன். ஆனால் என்னென்னமோ நடந்தது. பணம் போயிற்று; மேலே போக மார்க்கமில்லை. ஆகையால் திரும்பி விட்டேன்" என்றார்.

அவ்வளவு புத்திசாலியான மனிதர் இவ்வளவு முட்டாள்தனமாக எப்படி நடந்துகொண்டார் என்று ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். புறப்பட்டுப் போனவர், குறித்த இடத்திற்குப் போகாமல் பணத்தையெல்லாம் பறிகொடுத்து விட்டு வந்து சேர்ந்தார்! சிறிது காலம் ஆச்சரியப்பட்டார்கள்; பிறகு மறந்து போனார்கள். எலிஷாவும் மறந்து போனார். மறுபடியும் முன்போலத் தன் வீட்டுக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினார். மகன் உதவிகொண்டு பனிக்காலத்துக்கு வேண்டிய விறகு முழுவதும் வெட்டிச் சேர்த்தார். பெண்டுகளும் அவரும் தானியத்தைக் குத்தினார்கள். பிறகு கூரைகளைப் பழுது பார்த்தார்; தேனீக்களைச் சரியான இடத்தில் அடைகட்ட விட்டார். பக்கத்து வீட்டானுக்கு விற்ற பத்து கூடுகளையும் பின்னால் கூடிய தேனீக்களுடன் பிரித்தெடுத்துக் கொடுத்தார். அவற்றிலிருந்து உற்பத்தியான தேன் எவ்வளவு என்பதை அவரிடம் அறிவிக்காமல் மறைக்க முயற்சி செய்தாள் அவர் மனைவி. ஆனால் அவர் எதில் தேனீ உற்பத்தியாயிற்று, எதில் ஆகவில்லை என்று தானே கண்டுபிடித்துக் கொண்டார். பத்துக்குப் பதிலாக பதினேழு கூடுகளைக் கொடுத்தார். பனிக்காலத்திற்கு வேண்டிய தெல்லாவற்றையும் சேகரம் செய்துவிட்டு மகனை வேலை தேட அனுப்பினார். தன் செருப்புக்காக மரப்பட்டைகளைப் பதனிடுவதிலும் தேன் கூட்டிற்காக மரக்கட்டைகளில் துவாரம் போடுவதிலும் ஈடுபட்டார்.

8

எலிஷா குடிசையில் தங்கின தினம் பூராவும் எபிம் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்து பார்த்தார். கொஞ்சம் தூரம் போய் உட்கார்ந்தார். காத்துக் காத்து, தூங்கிக்கூட விழுந்தார். மேலும் அங்கேயே உட்கார்ந்துகொண்டிருந்தார். நண்பர் வரவில்லை. அந்தத் திக்கையே பார்த்துக் கண்கூட வலி எடுத்துவிட்டது. சூரியன் அஸ்தமனமாகியும் எலிஷா வரவில்லை.

"ஒரு வேளை என்னைத் தாண்டிக்கொண்டு போய்விட்டார் போலிருக்கிறது. அல்லது யாராவது வண்டியில் ஏற்றிக் கொண்டதால் நான் தூங்கும் போது என்னைக் கவனிக்காமல் போயிருப்பார். ஆனால் எப்படிப் பார்க்காமல் இருக்கமுடியும்? இந்தப் பொட்டலில் கண்ணுக்கெட்டிய வரையில் எல்லாம் தெரியுமே! திரும்பி விடட்டுமா? ஒரு வேளை அவர் முன்னே போயிருந்து இருவரும் சந்திக்கவே முடியாமல் போய் விட்டால் இன்னும் மோசம். நான் மேலே போகிறேன். எங்காவது இரவு தங்குமிடத்தில் சந்தித்துத்தான் ஆகவேண்டும், பார்த்துக்கொள்ளலாம்" என்று எபிம் யோசனை செய்தார்.

ஒரு கிராமத்தை அடைந்தார். அவர் சொன்ன அடையாளத்திற்குச் சரியான கிழவர் யாராவது வந்தால் தான் தங்கியிருக்கும் குடிசைக்குக் கூட்டிக் கொண்டுவரச் சொல்லி காவல்காரனிடம் சொல்லி

விட்டு இரவு தூங்கப்போனார். ஆனால் எலிஷா அன்றிரவும் வந்துசேரவில்லை. எபிம் மேலே சென்றார். வழியில் கண்டவர்களை யெல்லாம் ‘குட்டையான வழுக்கைத் தலைக் கிழவர் யாரையாவது பார்த்தீர்களா?’ என்று கேட்டுக்கொண்டு போனார். யாரும் அந்தமாதிரி ஆளைப் பார்த்ததாகவே சொல்லவில்லை. எபிம் கொஞ்சம் ஆச்சரியமடைந்தார். ஆனால் பிரயாணத்தைத் தொடர்ந்து செய்துகொண்டே “ஒடிஸ்ஸாவில் நிச்சயம் சந்தித்துத் தீரவேண்டும், தவறினால் கப்பலில்” என்று எண்ணி அதைப்பற்றி மேலே சிந்திக்கவில்லை.

வழியில் நீண்டதொரு பாதிரி—அங்கியை அணிந்த யாத்திரிகர் ஒருவரைச் சந்தித்தார். மயிர் வளர்ந்த தலையில் பாதிரிகள் அணியும் தொப்பி அணிந்திருந்தார். அவர் அதாஸ் மலைக்குப் போனவர். அப்பொழுது ஜெருஸலத்திற்கு இரண்டாவது தடவையாகப் போய்க் கொண்டிருந்தார். ஓரிரவு இருவரும் ஒரே இடத்தில் தங்கினார்கள். பிறகு இருவரும் சேர்ந்தே பிரயாணம் செய்தார்கள்.

ஒடிஸ்ஸாவிற்கு ஒருவிதமான இடைஞ்சலுமின்றிப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே கப்பலுக்காக மூன்று நாட்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டியதாகி விட்டது. பல பிரதேசங்களிலிருந்து வந்திருந்த பல யாத்திரிகர்களுக்கும் அதே கதி நேர்ந்தது. அவர்களை யெல்லாம் எபிம் எலிஷாவைப் பற்றி விசாரித்துப் பார்த்தார்; ஒருவரும் அவரைப் பார்த்ததாகச் சொல்லவில்லை.

ஐந்து ரூபிள்கள் கொடுத்து எபிம் அக்கரை நாட்டிற்குப் போவதற்குத் தேவையான அனுமதிச் சீட்டு ஒன்று வாங்கினர். நாற்பது ரூபிள்களுக்கு ஜெருஸலம் போய் வர ஒரு 'ரிடர்ன் டிக்கட்'டும் வாங்கினர். வழிக்குக் கொஞ்சம் ரொட்டி ஆகாரமும் வாங்கி வைத்துக்கொண்டார்.

சார்ஜ் கொடுக்காமலே கப்பலில் பிரயாணம் செய்து விடுவதற்கு வழி சொல்லிக் கொடுத்தார் அந்த யாத்திரிகர். ஆனல் எபிம் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

"இல்லை, நான் செலவு செய்யத் தயாராக வந்திருக்கிறேன். பணம் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டார் அவர்.

கப்பல் நிறைந்தது. எல்லா யாத்திரிகர்களும் அதில் ஏறிக்கொண்டார்கள்—எபிமும் அவர் நண்பரும் உள்பட. கப்பல் புறப்பட்டது.

பகல் பூராவும் கப்பல் அமைதியாகவே போயிற்று; இரவில் காற்றுக் கிளம்பி மழையும் வந்தது; கப்பல் கீழும் மேலுமாகச் சாய்ந்து கொஞ்சம் நீர் கொண்டது. பிரயாணிகள் திகிலடைந்துவிட்டார்கள். பெண்டுகள் அழுதார்கள்; ஆண்களிடையே பயந்தவர்கள் சிலர் கப்பலில் அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டார்கள். எபிமும் கவலையடைந்தார். ஆனல் அதை வெளிக்காட்டாமல் மேல்தட்டில் முதலில் வந்து உட்கார்ந்த இடத்திலேயே அசையாமல் இருந்தார். இன்னும் தம்போலிருந்து வந்த

சிலரும் அவர்கூட இருந்தார்கள். அங்கேயே அவர்கள் தம்தம் மூட்டைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இரவும் மறுநாள் பகலும் இருந்தார்கள். மூன்றும் நாள் புயல் தணிந்தது. ஐந்தாம் நாள் கப்பல் கான்ஸ்டான்டிநோபில் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சப்பெற்றது. அப்பொழுது துருக்கியர்கள் கைவசமிருந்த ஸோபியா கோவிலைப் பார்க்கச் சில யாத்திரிகர்கள் கப்பலைவிட்டு இறங்கிப் போனார்கள். எபிம் கப்பலிலேயே இருந்தார்; கொஞ்சம் ரொட்டி மட்டும் வாங்கினார். அங்கே இருபத்தி நான்கு மணிநேரம் தங்கிவிட்டுக் கப்பல் மறுபடியும் கிளம்பிற்று. ஸ்மர்னாவில் மறுபடியும் கப்பல் நின்றது; அலக்ஸாண்ரெட்டா என்னும் ஊரிலும் கப்பல் நின்றது. கடைசியாக எல்லோரும் இறங்கவேண்டிய ஜவ்வா வந்தது. அங்கிருந்து ரோட்டுமார்க்கமாக ஜெருஸலம் நாற்பது மைல் தூரம். கப்பலிலிருந்து இறங்கும்போதும் ஜனங்கள் மறுபடியும் திண்டாடினார்கள். கப்பல் உயரம். ஜனங்களைக் கீழேயிருந்த படகுகளில் இறக்கினார்கள். அவை அலைகளால் இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தன. கொஞ்சம் தவறினால் கடலில்தான் விழவேண்டும். இரண்டு பேர் அப்படி விழுந்தே விட்டார்கள். ஆனால் அவர்களும் கரையேற்றப் பட்டார்கள்.

ஜெருஸலத்தை நோக்கி நடந்தார்கள். மூன்றும் நாள் ஜெருஸலம் போய்ச் சேர்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இருந்த ரஷிய ஹோட்டல் ஒன்றில்

தங்கினார்கள். சாப்பாடானதும் கூட வந்த யாத்திரிகர்களுடன் எபிம் புண்ணிய ஸ்தலங்களைப் பார்க்கச் சென்றார். புண்ணியப் புதை குழியைப் பார்க்க அது நேரமில்லையாதலால் குருக்கள் கோவிலுக்குப் போனார்கள். எல்லா யாத்திரிகர்களும் அங்கே கூடினார்கள். ஆண்களையும் பெண்களையும் அங்கே தனியாகப் பிரித்து ஆண்களைக் காலில் ஒன்றுமின்றி சுற்றி வட்டமாக உட்காரச் சொன்னார்கள். அவர்கள் கால்களைச் சுத்தம் செய்யத் துணியுடன் ஒரு சன்னியாசி வந்தார். அவர் கால்களைக் கழுவித் துடைத்து முத்தமிட்டார். இந்தமாதிரி எல்லோருக்கும் செய்தார். எபிம் கால்களும் அதே சடங்கைப் பெற்றன. காலைப் பிரார்த்தனை, மாலைப் பிரார்த்தனை எல்லாவற்றிலும் ஈடுபட்டு ஜபம் செய்து, கோவில்களில் மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து, பிரார்த்தனையில் சொல்லுவதற்காகத் தன் பெற்றோர்கள் பெயரைப் பதிந்த சிறு புத்தகங்களையும் கொடுத்தார். குருக்கள் கோவிலில் ரொட்டியும் சாராயமும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. மறுநாட்காலை எகிப்து மேரியின் அறைக்குப் போனார்கள். அங்கேதான் அவள் தவம் புரிந்தாள். அங்கேயும் வர்த்திகள் வைத்து ஜபம் செய்தார்கள். அங்கிருந்து ஆப்ரகாம் மடத்திற்குப் போனார்கள். ஆப்ரகாம் தன் மகனைக் கடவுளுக்குப் பலியிட எண்ணின இடத்தைத் தரிசித்தார்கள். அப்புறம் கிறிஸ்து மாரி மாக்தலீனாவுக்குத் தரிசன மளித்த இடத்தைப் பார்த்தார்கள்; பிறகு இயேசுநாதரின் சகோதரர் ஜேம்ஸ்

கோவிலுக்குப் போனார்கள். யாத்திரிகர்தான் எல்லா இடங்களையும் எபிமுக்குக் காட்டினார்; ஒவ்வோர் இடத்திலும் செலுத்த வேண்டிய காணிக்கையையும் சொன்னார். மத்தியானம் ஹோட்டலுக்குத் திரும்பிப் போஜனம் செய்தார்கள். படுத்து இளைப்பாறி இருக்கும் பொழுது யாத்திரிகர் 'கூகூ!' என்று கத்தித் தமது துணிகளையெல்லாம் உதறித் தேட ஆரம்பித்தார்.

"என் பணப்பை திருட்டுப் போய்விட்டது! அதில் இருபத்தி மூன்று ரூபிள்கள் இருந்தன—இரண்டு பத்து ரூபிள் நோட்டுகளும் சில்லரையுமாக!" என்றார்.

அதற்காகப் பிரமாதமாக ஆர்ப்பாட்டம் செய்தார்; ஆனால் ஒன்றும் செய்ய வழியில்லாததால் படுத்துத் தூங்க ஆரம்பித்தார்.

9

படுத்துக்கொண்டே எபிம் பல யோசனைகள் செய்தார்.

"இந்த யாத்திரிகனிடமிருந்து யாரும் பணம் திருடவில்லை. அவனிடம் ஒன்றுமே இல்லை என்று நினைக்கிறேன். எங்கேயும் ஒன்றும் கொடுக்கவில்லை. என்னைத்தான் கொடுக்கச் செய்தான்; என்னிடம் ஒரு ரூபிள் கடன்கூட வாங்கிவிட்டான்."

இந்த எண்ணம் ஏற்பட்டவுடனே எபிம் தன்னைத் தானே கண்டித்துக்கொண்டார். "ஒருவனைப்

பற்றி இப்படி நினைக்க எனக்கென்ன அதிகாரம்? இது மகா பாவம். இனிமேல் அதைப்பற்றி எண்ணக் கூடாது" என்று தீர்மானித்தார். ஆனல் எண்ணங் கள் மறுபடியும் எங்கோ போய்த் திரும்பி யாத்திரிகன் பக்கமே வந்தன—பணத்தில் அவனுக்கு எவ்வளவு ஊக்கம், பணப்பை போய்விட்டதென்று அவன் சொன்னது எவ்வளவு நம்பமுடியாத விஷயம்—இந்த மாதிரி.

"அவனிடம் பணமே கிடையாது. அவன் சொல்வது வெறும் கற்பனை" என்று எபிம்மின் எண் ணம் ஓடியது.

சாயங்காலம் எழுந்திருந்து இயேசு நாதரின் புதை குழி இருந்ததும் கிறிஸ்து புத்துயிர் பெற்றது மான கோவிலின் அர்த்தஜாம ஆராதனைக்குப் போனர் கள். யாத்திரிகன் எபிமையே தொடர்ந்தான். அவர் சென்ற விடமெல்லாம் சென்முன். கோவிலை அடைந் தார்கள். அங்கே யாத்திரிகர்கள் வெகுபேர் இருந்தார் கள்—கிரேக்கர்கள், அர்மீனியர்கள், துருக்கியர்கள், ஸிரியா தேசத்தார்கள். கூட்டத்துடன் எபிமும் புனித வாசலில் நுழைந்தார். துருக்கியக் காவலர்களைத் தாண்டி ஒரு பாதிரி அவர்களை இயேசு சிலுவையி லிருந்து எடுத்து எண்ணெய்க் காப்பு செய்யப்பட்ட இடத்திற்கு அழைத்துக்கொண்டு போனர். ஒன்பது பெரிய ஸ்தம்பங்களில் மெழுகு வத்திகள் எரிந்து கொண்டிருந்தன. பாதிரி எல்லாவற்றையும் காட்டி விசேஷத்தை விளக்கிச் சொன்னர். எபிம் அங்கே

ஒரு வத்தி உபயம் செய்தார். பாதிரி எபிமை வலது புறமாகப் படியேற்றி சிலுவை நின்ற கோல்காதாவுக்கு இட்டுச் சென்றார். எபிம் அங்கே பிரார்த்தனை செய்தார். பிறகு பூமி வெடித்துப் பாதாளம் வரை போயிருந்த விரிசலைக் காட்டினார்கள். பிறகு கிறிஸ்துவின் கைகளும் கால்களும் சிலுவையில் அறையப்பட்ட இடம்; பிறகு ஆதாமின் புதை குழி; அங்கேதான் கிறிஸ்துவின் ரத்தம் பெருகி ஆதாமின் எலும்புகளில் விழுந்தது. பிறகு, முள்கிரீடம் தலையில் வைக்கப்பட்ட பொழுது இயேசு உட்கார்ந்த கல்லைக் காட்டினார்கள். பிறகு கசையடி பெற்றபோது அவர் கட்டப்பட்டிருந்த தூண். அதன் பிறகு கிறிஸ்துவின் கால்களுக்காகவென்று இரண்டு துளைகள் கொண்ட கல்லைப் பார்த்தார் எபிம். அவருக்கு இன்னும் ஏதோ காட்டும் சமயம்; அப்பொழுது கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் நாதரின் புதை குழியை நோக்கி விரைந்தார்கள்; அங்கே லத்தீன் ஆராதனை அப்பொழுதுதான் முடிந்து ருஷியப் பிரார்த்தனை ஆரம்பமாகும் சமயம். எபிமும் போனார்.

எப்படியாவது யாத்திரிகனை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று பார்த்தார். அவனைப்பற்றி இன்னும் அவர் மனத்தில் பாவம் செய்துகொண்டே இருந்தார். ஆனால் அவன் அவரை விடுகிற வழியாக இல்லை. அவருடன் கூடப் புண்ணியப் புதை குழியண்டை நடந்த ஆராதனைக்கு அவனும் வந்தான். முன்னால் போக முயன்றார்கள்; ஆனால் அவர்கள் நேரம் கழித்துவந்து

விட்டார்கள். அங்கிருந்த கூட்டத்தில் முன்னே பின்னே நகர முடியவில்லை. எபிம் தம்முன் பார்த்துக்கொண்டு பிரார்த்தனை செய்தார். அடிக்கடி பணப் பையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார். அவருக்கு இரண்டு விதமான எண்ணங்கள்; சில சமயங்களில் யாத்திரிகன் தன்னை ஏமாற்றுகிறான் என்று நினைத்தார்; மறுபடியும் யாத்திரிகன் சொன்னது உண்மையென்றால் அவன் பணப்பையைப் போலத் தன் பையும் போய்விடலா மென்றும் தோன்றிற்று அவருக்கு.

10

மேலே முப்பத்தாறு வத்திகள் எரிந்துகொண்டிருந்த புனிதப் புதைகுழி மேல் கட்டப்பட்டிருந்த சிறு கோவிலுக்குள் பார்த்துக்கொண்டு நின்றார் எபிம். ஜனங்கள் தலைக்கு மேல் அப்படிப் பார்த்துக்கொண்டு நின்றபொழுது அங்கே ஒன்றைப் பார்த்தது அவரைத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. வத்திகளுக்குக் கீழே, எல்லோருக்கும் முன்னால், சாம்பல் வர்ணச் சட்டையுடன் ஒரு கிழவர் நின்றுகொண்டிருந்தார். பளபளவென்றிருந்த அவர் வழுக்கைத் தலை—எலிஷா போலவே இருந்தது.

"அவர் மாதிரி இருக்கிறது; ஆனால் அவராக இருக்க முடியாது. எனக்கு முன் அவர் இங்கே எப்படி வந்திருக்க முடியும்? எங்களுடைய கப்பலுக்கு முந்தினது இன்னும் ஒருவாரம் முன்பே புறப்பட்டுவிட்டது. அதற்கு அவர் வந்திருக்கவே முடி

யாது. எங்கள் கப்பலிலும் வரவில்லை;—அதிலிருந்த ஒவ்வொரு யாத்திரிகனையும் நான் பார்த்து விட்டேனே!'' என்று யோசித்தார் எபிம்.

இப்படி அவர் எண்ணிக்கொண் டிருக்கும் போதே அந்தக் கிழவர் பிரார்த்தனை செய்து மூன்று தடவை தலை வணங்கினர்—ஒருதரம் கடவுள் பக்கமும் மற்ற இரண்டு தடவை இருபுறமு மிருந்த கோஷ்டியின் பக்கமும். அவர் முகம் வலது பக்கம் திரும்பிய பொழுது எபிம் அவரை நன்ருக அடையாளம் கண்டு கொண்டார். அவரேதான்—எலிஷா! அதே குட்டையான கருப்புத் தாடி, கன்னத்தடியில் கொஞ்சம் நரைத்தது! அவர் புருவங்கள், கண்கள், மூக்கு, அவர் முக ஜாடை; ஆமாம், சந்தேக மில்லை, அவர்தான்!

தன் சகாவைப் பார்த்ததில் எபிமுக்கு நிரம்ப சந்தோஷம்; அவர் எப்படித் தனக்கு முன்னல் அங்கே வந்து சேர்ந்தார் என்று மட்டும் அவருக்குப் புரியவில்லை.

“சபாஷ், எலிஷா! எப்படியோ முந்திக்கொண்டு விட்டாரே! வழிகாட்டி யாரையாவது அவர் சந்தித்திருக்கவேண்டும். வெளியே போனதும் அவரைத் தேடிப் பிடித்து விடுகிறேன். இந்தப் பயலை உதறியெறிந்து விட்டு எலிஷாவுடன் சேர்ந்து கொள்கிறேன். முன்னல் போய் நிற்பதற்குக்கூட அவர் எனக்கு வழி சொல்லித் தருவார்'' என்று எபிம் எண்ணினர்.

எலிஷா தம் கண்ணிலிருந்து மறைந்து போய் விடாமல் எபிம் அந்தப் பக்கமே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். பிரார்த்தனை முடிந்ததும் ஜனங்கள் நகர ஆரம்பித்தார்கள்; சமாதியைத் தொட்டு முத்த மிட்டு வணங்க அதை நோக்கி ஜனங் கள் நெருக்கித் தள்ளலானார்கள். எபிமும் ஒரு புறம் தள்ளிக்கொண்டு போகப் பட்டார். பணப்பை போய்விடப் போகிறதே யென்று திரும்பவும் அவருக் குத் திகில் பிடித்துக்கொண்டது. அதைக் கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே கூட்டத்தை விலக்கிக்கொண்டு வெளியில் போய் விட்டால் போது மென்றாகி விட்டது அவருக்கு. வெளியே வந்து வெகு நேரம் எலிஷாவைத் தேடினார். கோவில் மண்டபங் களில் பலரக ஆள்கள் சாப்பிட்டுக்கொண்டும் சாரா யம் அருந்திக் கொண்டும் படுத்துக்கொண்டும் தூங் கிக்கொண்டும் இருந்தார்கள். எலிஷாவை எங்கேயும் காணோம். அவரைக் கண்டு பிடிக்காமலே திரும்பி ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார். அன்று மாலை அவருடன் கூடத் திரிந்த யாத்திரிகன் வரவில்லை. கடன் வாங்கின ரூபிளைத் திருப்பிக்கூடத் தராமல் அவன் கம்பி நீட்டி விட்டான். எனவே எபிம் தனி யாக இருந்தார்.

அடுத்த நாள் கப்பலில் சந்தித்த கிழவர் ஒருவ ருடன் எபிம் கோவிலுக்குப் போனார். முன்னால் போக முயன்றார். ஆனால் கூட்டம் அவரைப் பின்னே தள்ளிவிட்டது. ஒரு தூணடியில் நின்று கொண்டு

பிரார்த்தனை செய்தார். முன்னால் பார்த்தார். அங்கே அதே விளக்கடியில் இயேசுநாதரின் கல்லறைக் கருகில் எலிஷா நின்றுகொண் டிருந்தார். பிரசங்க மேடையில் நிற்கும் பாதிரிபோலக் கைகளை விரித்த வண்ணம் வழுக்கைத்தலை மண்டையுடனும் நின்று கொண்டிருந்தார்.

"இத் தடவை அவரை விடாமல் பிடித்து விடுகிறேன்!" என்று எபிம் தமக்குள் சொல்லிக் கொண்டார்.

எப்படியோ முட்டி முனைந்து கொண்டு முன்னால் போனார். ஆனால் அங்கே எலிஷாவைக் காணோம். அவர் அவ்விடம் விட்டுப் போய்விட்டார் போலிருக்கிறது என்று எண்ணினார்.

மூன்றும் நாளும் அதே இடத்தில் எலிஷா கைகளை விரித்துக்கொண்டு எதையோ மேலே கண்டவர்போல ஆகாயத்தை நோக்கிய வண்ணம் வழுக்கைத் தலையும் அவருமாக நின்றார்.

"இந்தத் தடவை அவர் தப்ப முடியாது. முன் வாசலில் போய் நின்றுகொள்கிறேன். அப்பொழுது தப்பிப்போக முடியாது" என்று எபிம் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

எபிம் சற்று முன்னாலேயே வெளியே போய் வாசலண்டை நின்றுகொண்டார். உச்சி நேரத்துக்குப் பிறகு வெகு நாழிகை அங்கேயே நின்றார். எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். எலிஷாவை மட்டும் காணவில்லை.

எபிம் ஆறு வாரங்கள் ஜெருஸலத்தில் இருந்தார். எல்லா இடங்களேயும் தரிசனம் செய்தார். பெதானிக்கும் ஜோர்டனுக்கும் போனுர். தன்னுடைய சமாதிக்காகப் புதுப் பிரேத வஸ்திரம் ஒன்றில் கோவில் முத்திரை போட்டு வாங்கிக்கொண்டார். ஜோர்டனிலிருந்து ஒரு சீசா புண்ணிய தீர்த்தமும் கொஞ்சம் புண்ணிய மண்ணும் எடுத்துக் கொண்டார். நாதரின் சமாதியில் ஏற்றின வத்திகள் சிலது வாங்கிஞர். எட்டு இடங்களில் பிரார்த்தனை நடத்தத் தன் பெயரைப் பதிவு செய்தார். இப்படியாகத் திரும்புவதற்கு மட்டும் செலவுக்கு வைத்துக்கொண்டு பாக்கிப் பணம் முழுவதையும் செலவு செய்தார். பிறகு ஊருக்குக் கிளம்பினுர். ஜவ்வா வரையிலும் நடந்தே வந்து ஒடிஸ்ஸா வரை கப்பல் பிரயாணம் செய்து அங்கே யிருந்து ஊருக்குக் கால்நடையாகவே புறப்பட்டார்.

11

வந்த வழியாகவே வீடு திரும்பினுர். ஊர் நெருங்க நெருங்க பழைய வீட்டுக் கவலைகள் அவரை மறுபடியும் பற்றிக்கொண்டன. தான் ஊரில் இல்லாத பொழுது விவகாரங்கள் எப்படி நடை பெற்றனவோ என்ற கவலை. ஒரு வருஷத்தில் என்னென்னவோ நடந்துவிடுகின்றன. ஒரு வீட்டைக் கட்டுவதென்ருல் ஆயுள்பூராவும் முயற்சி செய்யவேண்டி யிருக்கிறது—அதைப் பாழ்படுத்த அதிக நேரமாவதில்லை. தான் இல்லாமல் தன் மகன் என்ன செய்திருப்பான், வீட்

டில் வேனிற் காலத்தை எப்படிக் கழிக்கிறார்களோ, ஆடுமாடுகள் மழை காலத்தில் என்னவாயினவோ, வீடு சரியாகக் கட்டி முடிந்ததோ—என்றெல்லாம் யோசித்தார். போகிறபோது எலிஷாவிடமிருந்து பிரிந்த பிரதேசத்திற்கு வந்தபோது போன கோடையில் தான் பார்த்த ஊர்தானா அது என்று அவருக்குப் பிரமிப்பு தட்டிற்று; அதே மக்கள்தானா அப்போது அங்கே வசித்தவர்கள்! முதல் வருஷம் பஞ்சம் அங்கே தாண்டவ மாடிக்கொண் டிருந்தது; இப்பொழுது எல்லோரும் சௌக்கியமாக இருந்தார்கள். விளைச்சல் முதல்தரம்; மக்கள் சமாளித்துக்கொண்டு விட்டார்கள்; முன் கஷ்டத்தைக்கூட மறந்து போய் விட்டார்கள்.

எலிஷா பின்தங்கிய இடத்திற்கே ஒரு நாள் மாலையில் எபிம் வந்து சேர்ந்தார். கிராமத்தில் நுழைந்ததுமே ஒரு குடிசையிலிருந்து வெள்ளைப் பாவாடை யணிந்த சிறுமி ஒருத்தி ஓடிவந்து "தாத்தா தாத்தா, எங்கள் வீட்டுக்கு வாருங்கள்!" என்றாள்.

எபிம் மேலே போகவேண்டும் என்று எண்ணியிருந்தார். சிறுமி விடமாட்டேன் என்றுவிட்டாள். சிரித்துக்கொண்டே அவர் சட்டையைப் பிடித்திழுத்துக் குடிசைக்குக் கொண்டு போனாள். அங்கே பெண் ஒருத்தி ஒரு சிறு பையனுடன் வாசற்படியில் நின்று கொண்டு அவரைக் கூப்பிட்டாள்.

"வாரும், தாத்தா, உள்ளே வாரும். இரவு சாப்

பாட்டை எங்களுடன் வைத்துக்கொண்டு இங்கேயே இரவையும் கழியுங்கள்" என்றாள் அவள்.

எபிம் உள்ளே போனார்.

"இங்கே எலிஷாவைப் பற்றிக் கேட்டால் தெரியும். இதே குடிசையில்தான் தண்ணீருக்காக அவர் நுழைந்தார் என்று நினைக்கிறேன்" என்று அவர் நினைத்துக் கொண்டார்.

பெண் கூட உதவி செய்து முதுகிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கிவிட்டு முகம் கழுவத் தண்ணீர் கொடுத்தாள். பிறகு மேஜையருகே உட்காரச் சொல்லி பால், தயிர்வடை, கஞ்சி எல்லாம் பரிமாறினாள். எபிம் அவளுடைய தர்ம சிந்தனையைப் புகழ்ந்தார். யாத்திரிகர்களுக்கு அவள் செய்த உபசாரத்தைப் பாராட்டினார். பெண் தலையை அசைத்தாள்.

"யாத்திரிகர்களை நாங்கள் உபசரிப்பது எதனால் தெரியுமா? அப்பேர்பட்ட புண்ணியவான் ஒருவர் தான் எங்களுக்கு வாழ்க்கை இன்னதென்று சொல்லிக் காட்டினது. கடவுள் நினைப்பே இல்லாமல் வாழ்ந்ததால், கடவுள் எங்களைத் தண்டித்தார்; சாகுந் தறுவாய்க்கு வந்துவிட்டோம். வயிற்றுக்கு ஒன்றுமில்லாமல், போன கோடையில், இங்கே எல்லோரும் வியாதி பிடித்துக் கிடந்தோம். உங்களைப்போல ஒரு கிழவர்—அவரைக் கடவுள் இங்கே அனுப்பி யிருக்காவிட்டால் நாங்கள் செத்தேதான் போயிருப்போம்—குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று ஒருநாள் இங்கே வந்தார். நாங்கள் கிடந்த கிடக்கையைப்

பார்த்து இரக்கம் பொங்கி எங்களுடன் தங்கினர். எங்களுக்கு உண்ண உணவும் குடிக்கத் தண்ணீரும் கொடுத்து எழுந்து நடமாடச் செய்தார்—உயிர்கொடுத்தார். அடகு போயிருந்த எங்கள் நிலத்தை மீட்டுக் கொடுத்து, வண்டி குதிரை வாங்கிக் கொடுத்தார்."

இந்த இடத்தில் கிழவி உள்ளே வந்தாள். அவள் குறுக்கிட்டுப் பேசலானுள்.

"அவர் மனிதனே அல்லது கடவுள் அனுப்பிய தூதனே—தெரியாது. எங்கள்மேல் இரக்கம் கொண்டு எங்களை நேசித்து உயிர்ப்பிச்சை யளித்து விட்டுப் பெயரைக்கூடச் சொல்லாமல் போய்விட்டார். ஆகையால் யார் பேரைச் சொல்லி வாழ்த்துவது என்றுகூட எங்களுக்குத் தெரியவில்லை. இன்று போல இருக்கிறது! நான் அங்கே தான் எந்த நிமிஷம் சாவு வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வழுக்கைத்தலைக் கிழவர் ஒருவர் உள்ளே வந்தார். பார்க்கிறதற்கு என்னவோ போலிருந்தார். குடிக்கத் தண்ணீர் கேட்டார். மகா பாபி, நான் என்ன எண்ணினேன்: "இவன் எதற்காக இங்கே வந்து பிராணனை வாங்குகிருன்?" அவர் என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்? எங்களைப் பார்த்தாரோ இல்லையோ புண்ணியவான்—இதே இடத்தில் தம் முதுகிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கி அவிழ்த்தார்—"

"இல்லை, பாட்டி, முதலில் இங்கே, நடு வீட்டில் இறக்கினர், பிறகுதான் பெஞ்சிமேல் தூக்கி

வைத்தார்" என்று சிறுமி குறுக்கிட்டுச் சொன்ளுள்.

உடனே அவர் எங்கே உட்கார்ந்தார், எங்கே படுத்தார், ஒவ்வொருவரிடமும் என்ன சொன்னுர், எல்லாவற்றையும் சொன்ஞர்கள்.

பொழுது விழுந்ததும் வீட்டுக்காரனே வயலிலிருந்து குதிரை மீதேறிக்கொண்டு வீடுவந்தான். அவனும் எலிஷாவைப்பற்றியும் அவர் தங்களுடன் பழகியதைப்பற்றியும் பிரஸ்தாபம் செய்ய ஆரம்பித்தான்.

"அவர் வந்திரா விட்டால் நாங்கள் பாவ பண்டாரங்களாக அழிந்திருக்க வேண்டும். ஒன்றுஞ் செய்ய வழி தெரியாமல், கடவுளையும் மனிதனையும் திட்டிக்கொண்டு சாக விருந்தோம். அவர்தான் எங்களை மறுபடியும் உயிர்ப்பித்து நிறுத்திஞர். அவர் மூலமாக எங்களுக்குக் கடவுள் அறிவு ஏற்பட்டது; மனிதனிடம் இருக்கும் நல்ல குணங்களும் தென்பட்டன, கடவுள் அவரைக் காப்பாற்றட்டும்! நாங்கள் மிருகங்கள்போல இருந்தோம்; அவர் எங்களை மனிதர்கள் ஆக்கிஞர்."

எபிமுக்கு ஆகாரம் அளித்த பிறகு அவருக்குப் படுக்க இடம் காண்பித்துவிட்டு அவர்களும் படுத்துக் கொண்டார்கள்.

எபிமுக்குத் தூக்கம் வரவில்லை. எலிஷா நினைவை அவர் தம் மனத்திலிருந்து அகற்றவே முடியவில்லை. ஜெருஸலத்தில் கோவிலுக்குள் முதல் இடத்

தில் அவரை மூன்றுதரம் பார்த்த மோகனக் காட்சி நினைவிற்கு வந்தது.

"இப்படியா அவர் என்னை முந்திக்கொண்டு விட்டார்? கடவுள் என் யாத்திரையை ஏற்றுக் கொண்டாரோ இல்லையோ—தெரியாது—அவர் யாத்திரையை அவர் ஏற்றுக்கொண்டு விட்டார், சந்தேக மில்லை" என்று எபிம் சொல்லிக்கொண்டார் தனக்குள்.

அடுத்த நாள் எபிம் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார். வேலைக்குப் போகுமுன் அவர்கள் அவர் சாக்கில் கொஞ்சம் ஆகாரம் வைத்துக் கட்டிக் கொடுத்தார்கள். எபிம் அங்கிருந்து பிரயாண மானார்.

12

எபிம் புறப்பட்டுச் சரியாக ஒரு வருஷம் முடிந்தது. அவர் வீடு திரும்பியபொழுது மறுபடியும் வசந்தகாலம், பொழுது விழும் நேரத்தில் வீடு சேர்ந்தார். அவர் மகன் வீட்டிலில்லை. அவன் வீடு திரும்பியபொழுது கொஞ்சம் குடி மயக்கத்துடன் வந்தான். எபிம் உடனே வீட்டைப்பற்றி அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். தகப்பனார் இல்லாதபொழுது பையன் நிரம்ப நிதானமில்லாமல் இருந்திருந்தான் என்பது எல்லாவற்றிலும் தெரிந்தது, பணமெல்லாம் எப்படியோ தப்புத்தண்டாவாகச் செலவாயிருந்தது. வேலையொன்றும் நடைபெறவில்லை.

தகப்பன் பிள்ளையைக் கண்டித்தபொழுது அவன் முரடாகப் பதில் சொன்னான்.

"நீயே இருந்து பார்த்துக் கொள்ளுகிறதுதானே? பணத்தை எடுத்துக்கொண்டு நீபாட்டிற்குப் போய் விட்டு என்னை வந்து பணமெங்கே என்றால்?" என்றான் புதல்வன்.

கிழவன் கோபமடைந்து மகனை அடித்தான். தன் மகன் நடத்தையைப்பற்றிக் கிராம நாட்டாண்மையிடம் புகார் செய்ய மறுநாள் காலை எபிம் தெரு வழியாகப் போனபோது எலிஷாவின் மனைவி வாசலிலிருந்து "சௌக்கியமா, ஜெருஸலத்திற்குச் சௌகரியமாகப் போய்ச் சேர்ந்தீர்களா?" என்று கேட்டாள்.

எபிம் நின்று பதில் சொன்னார்.

"கடவுள் கிருபையில் நல்லபடியாகப் போய்ச் சேர்ந்தேன், அம்மா! உன் புருஷனை விட்டுப் பிரிந்து போனேன். அவர் சௌகரியமாக வீடு வந்து சேர்ந்து விட்டாராமே!"

கிழவி பேச்சென்றால் சளைக்கமாட்டாள்.

"ஆமாம். வந்து விட்டார். வந்து ரொம்ப நாளாச்சு. அஸம்ப்ஷன் பண்டிகை முடிந்தவுடனேயே—ஆமாம் அப்பவே—வந்து விட்டார். அவர் அந்த மட்டிலே வீடு வந்து சேர்ந்தாரே, கடவுள் கிருபையில், என்று எங்களுக்குச் சந்தோஷம். அவர் வீட்டில் இல்லாமல் பொழுதே போகிறதில்லை. அவர் இங்கே என்னவோ சாதித்து விடுகிறார் என்பதில்லை; அவராலும் இனிமேல் ஒன்றும் முடியாது. அவர்

செய்த காலமெல்லாம் போச்சு. ஆனாலும் வீட்டுக்குப் பெரியவராய் அவர் இங்கே இருந்தால்தான் எங்களுக்கே சந்தோஷமாக இருக்கிறது. பயலுக்கு என்ன சந்தோஷம் தெரியுமோ? 'அப்பன் இல்லா விட்டால் வெய்யில் இல்லாததுபோல் இருக்கிறது' என்றான். அவரில்லாமல் வெறிச்சென்று இருந்தது. அவர்கிட்டே உசிரெ வச்சிருக்கோம்; காப்பாத்தரும்."

"இப்பொழுது வீட்டில் இருக்கிறாரா?"

"இருக்கிறாரே! தேனீக்கள்தான் எப்போது பார்த்தாலும் ஈக்களைக் கூட்டில் அடைத்துக் கொண்டிருக்கிறார். இந்த வருஷம் நன்றாக உற்பத்தியாகிறதாம். கடவுள் அவற்றிற்கு எவ்வளவு ஊக்கம் கொடுத்திருக்கிறார். உள்ளே வாருங்கள், உங்களைப் பார்த்தால் நிரம்பச் சந்தோஷப் படுவார்."

ரேழியில் நுழைந்து கூடத்தின் வழியாகத் தேனீக் கூடுகள் இருந்த இடத்திற்குப் போனார். அங்கே எலிஷா, முகமூடியோ, கைத்துணியோகூட இல்லாமல் பர்ச் மரத்தடியில் ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் விரித்த கைகளும் வழுக்கைத் தலையுமாய் அவர் கோவிலில் பார்த்தமாதிரி நின்றார். அதே சாம்பல் வர்ணச் சட்டை! அங்கே கோவிலில் விளக்கு ஜ்வாலைகள் எரிந்தமாதிரி இங்கே பர்ச் மரங்களின் இடைவெளிகளில் சூரிய ஒளி பிரகாசித்தது. தங்கவர்ணத் தேனீக்கள் அவர் தலையைச் சுற்றி, கொட்டாமல், பரிவேடம்போல் பறந்தன.

எபிம் அப்படியே நின்று அந்தக் காட்சியை அனுபவித்தார். கிழவி தன் புருஷனைக் கூப்பிட்டாள்.

“இதோ, உங்கள் நண்பர் வந்திருக்கிறார்!”

சந்தோஷம் மலர்ந்த முகத்துடன் எலிஷா திரும்பிப் பார்த்தார். தாடியிலிருந்து மெதுவாக ஈக்களை எடுத்துக்கொண்டே எபிமை நோக்கி வந்தார்.

“வாரும், வாரும், இன்று நன்னாள்! அங்கே தடையொன்றுமின்றிப் போய்ச் சேர்ந்தீரா?”

“என் கால்கள் அங்கே சென்றன. ஜோர்டன் நதியின் புண்ணிய தீர்த்தமும் கொண்டுவந்திருக்கிறேன். நீர் என் வீட்டுக்கு வந்து அதைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் கடவுள் என் முயற்சிகளை ஏற்றுக் கொண்டாரா?”

“கடவுள் புண்ணியம்! இயேசு உங்களை ரட்சிக்கட்டும்” என்று எலிஷா குறுக்கிட்டுச் சொன்னார்.

எபிம் சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு “என் கால்கள் அங்கு போயின. ஆனால் என் உள்ளம் உண்மையாக அங்கே லயித்ததோ—” என்று இழுத்தார்.

“அது கடவுள் பொறுப்பு, நண்பரே, அது கடவுள் கையில் இருக்கிறது” என்றார் எலிஷா.

“வருகிற வழியில் நீர் தங்கிய குடிசையில் நானும்—” என்று எபிம் ஆரம்பித்தார்.

எலிஷா திகிலுடன் அவசர அவசரமாகக் குறுக்கிட்டு “கடவுள் காரியம், கடவுள் காரியம். வாரும், உள்ளே போவோம், கொஞ்சம் தேன் தருகிறேன்.

உமக்கு" என்று சொல்லிப் பேச்சை மாற்றி, வீட்டு விவகாரங்களைப்பற்றிப் பேசலானார்.

எபிம் பெருமூச் செறிந்தார். குடிசை மக்களைப்பற்றியும் அவர் எலிஷாவை ஜெருஸலத்தில் பார்த்த விந்தையைப்பற்றியும் அதற்குமேல் அவர் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் அப்பொழுது அவருக்கு ஒன்று நிச்சயமாயிற்று: ஒவ்வொரு மனிதனும் அவன் ஜீவிய காலத்தில், பிறரை நேசித்து நல்லது செய்வது என்பது ஒன்றுதான் அவர் கட்டளைப்படி நடப்பதாகும்; அதுதான் மனிதன் கடவுளுக்குச் செய்து கொள்ளும் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் ஒரே முறை.

3. அன்புள்ள இடத்தில் கடவுள்

ஒரு நகரத்தில் மார்ட்டின் என்றெரு சக்கிலியன் இருந்தான். ஒரு வீட்டின் கீழ்த் தளத்தில் தெருவின் பக்கமாக அவனுக்கு ஒரு சிறு அறை. அதன் ஜன்னல் வழியாகத் தெருவில் போகிறவர்களின் கால்களை மட்டும்தான் அவன் பார்க்க முடியும். ஆனால் அந்தக் கால்களிலிருந்த செருப்பைக்கொண்டே ஆள் யார் என்று அவன் கண்டுகொண்டு விடுவான். அங்கே அவன் வெகுநாளாக இருந்ததால் அநேகமாக எல்லோரும் பழக்கம். ஓரிரண்டு தடவையாவது அவன் கைப்பட ரிப்பேர் செய்யாத செருப்புகளே அந்தச் சுற்று வட்டாரத்தில் கிடையாது. எனவே ஜன்னல் வழியாக அவற்றை அடையாளம் பிடித்து வருவான். சிலதுக்கு அடித்தோல் போட்டிருப்பான், சிலதைத் தைத்திருப்பான், சிலதுக்கு ஒட்டுப்போட்டிருப்பான், சிலவற்றிற்கு மேல் தோல்கூடப் புதிதாகப் போட்டுக் கொடுத்திருப்பான். அவனுக்கு வேலை வந்து கொண்டே இருந்தது. ஏனென்றால் அவன் வேலையைச் செவ்வையாகச் செய்தான், நல்ல சாமானை உபயோகித்தான், கூலி குறைத்துத்தான் கேட்டான்,— நம்பிக்கையானவன், குறித்த நாளுக்குள் கொடுக்கக் கூடிய வேலையாய் இருந்தால்தான் ஒப்புக்கொள்ளுவான்; இல்லையென்றால் தவணைக்குள் கொடுக்க முடி

யாது என்று உண்மையைச் சொல்லிவிடுவான். பொய் சால்ஜாப்பு சொல்வதில்லை. எனவே எல்லோரும் அவனை ஆதரித்தார்கள்: அவனுக்கு வேலைக் குறைவே கிடையாது.

எப்பொழுதுமே மார்ட்டின் தப்புத் தண்டாவுக்குப் போகாதவன், நிரம்ப யோக்கியன்; அதுவும் வயதானதும் கொஞ்சம் அதிகமாகக் கடவுள் பக்தி கொள்ளலானான். தனிக்கடை வைக்காமல் அவன் வேறொருவனிடம் வேலை செய்துகொண்டிருந்த பொழுதே அவன் மனைவி தவறிப் போய்விட்டாள். மூன்று வயதுப் பையன் ஒருவன்தான். அவனுக்கு முன் பிறந்த குழந்தைகள் எல்லாம் தூளிப் பருவத்திலேயே இறந்துவிட்டன. முதலில் மகனைக் கிராமத்திலிருந்து தன் சகோதரியிடம் அனுப்புவதாக எண்ணினான். பிறகென்னவோ மகனைப் பிரிய அவனுக்கு மனம் வரவில்லை. "பாவம், புது இடத்தில் போய் இருப்பது கஷ்டமாயிருக்கும் குழந்தைக்கு, இங்கேயே வைத்துக்கொள்ளுகிறேன்" என்று நினைத்தான்.

மார்ட்டின் தனிக்கடை வைத்தான். ஆனால் அவனுக்கும் குழந்தைகளுக்கும் ராசி இல்லை. தகப்பனுக்கு உதவியாகக்கூடிய வயதில், அவனுக்கு ஆதரவும் ஆனந்தமும் கொடுக்கக்கூடிய தருணத்தில், திடீரென்று நோயுற்று ஒருவாரம் படுத்த படுக்கையாக இருந்து அவன் மகன் காலமாகிவிட்டான். அவனுக்கேற்பட்ட அளவற்ற துக்கத்தில் கடவுளைக்கூடக்

குறை கூறினான். புத்திர சோகம் தாங்கமாட்டாமல் தன்னையும் கொண்டுபோய்விடும்படி கடவுளை அடிக்கடி வேண்டினான்; தன் ஒரே மகனைப் பறித்துக் கொண்டு தன்னை ஏன் உயிருடன் விட்டிருக்கிறார் என்று கடவுளைக் கடிந்தான். அதன் பிறகு கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டான்.

மார்ட்டினுடைய சொந்த கிராமத்திலிருந்து கிழவர் ஒருவர் அவனைத் தேடிக்கொண்டுவந்து சேர்ந்தார். எட்டுவருஷ காலமாக அவர் ஸ்தல யாத்திரை செய்துகொண்டு டிராயிட்ஸா மடத்திற்குப் போகிற வழியில் மார்ட்டின் வீட்டிற்கு வந்தார். மார்ட்டின் தன் மனதிலிருந்த வேதனை பூராவையும் அவரிடம் திறந்து சொல்லி வருத்தப்பட்டான்.

“பெரியவரே, இனிமேல் எனக்கு உயிர் வாழக்கூட விருப்பமில்லை; சீக்கிரம் என்னை ஐக்கியம் செய்துகொள்ளும்படிதான் நான் கடவுளை வேண்டிக் கொள்ளுகிறேன். எனக்கு உலகத்தில் இனிமேல் ஆசையோ பற்றுதலோ கிடையாது” என்றான் அவன்.

“மார்ட்டின், நீ அந்தமாதிரியெல்லாம் சொல்லவே கூடாது. கடவுளின் காரியங்களைப்பற்றி தீர்ப்புக்கூற நாம் யார்? நம்முடைய யுக்திவாதமா நடக்கிறது? கடவுள் செயலல்லவா! உன் மகன் இறந்தும் நீ உயிர் வாழவேண்டுமென்பது கடவுள் இச்சையானால் அது நடைபெற்றே தீரும். உன் நிராசையும் வருத்தமும் இருக்கிறதே, அதற்குக்

காரணம் உன் சுகத்தை அண்டியே நீ வாழவேண்டு மென்று எண்ணுவதுதான்" என்றார் பெரியவர்.

"பின் எதற்காக வாழ்வது?" என்று மார்ட்டின் கேட்டான்.

"கடவுளுக்காக, மார்ட்டின்! அவர் உனக்கு ஆயுளைக் கொடுக்கிறார். அவர் இச்சைக்காக, அவர் கருவியாக, நீ வாழவேண்டும். அப்படி அவர் திட்டப் படி நீ வாழ ஆரம்பித்துவிட்டால் பிறகு உனக்குத் துயரம் கிடையாது. எல்லாம் நல்லதென்று உனக்குப் பட்டுவிடும்."

மார்ட்டின் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு மறுபடியும் "ஆனால் கடவுளுக்காக என்று எப் படி வாழ்வது, சொல்லுங்கள் பார்ப்போம்!" என்றான்.

"கடவுளுக்காக நாம் எப்படி வாழவேண்டு மென்பதை இயேசு கிறிஸ்து செய்து காட்டியிருக் கிறார். உனக்குப் படிக்கத் தெரியுமல்லவா? சுவி சேஷங்களை வாங்கிப்படி. நீ எப்படி வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று கடவுள் விரும்புகிறார் என்பது உனக்கு அவற்றில் விளங்கும். எல்லாம் அவற்றில் அடங்கி யிருக்கின்றன."

பெரியவரின் பேச்சு மார்ட்டின் உள்ளத்தில் பதிந்துவிட்டது. அன்றே கடைக்குப்போய் பெரிய எழுத்து வேத புத்தகம் ஒன்றை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

முதலில் விடுமுறை நாட்களில் மட்டும் படிப்ப தென்று நினைத்திருந்தான். ஆனால் அதைப் படிக்க

ஆரம்பித்தவுடனே அவன் உள்ளம் அடைந்த ஆற்ற லில் தினசரி படித்தான். சில சமயங்களில் அவன் அதில் ஈடுபட்டிருந்தபொழுது விளக்கில் எண்ணெய் எரிந்துபோனதுகூட அவனுக்குத் தெரியாமல் போய் விடும். பிறகு மனமின்றிப் புத்தகத்தை மூடிவைப் பான். ஒவ்வொரு இரவும் தவருமல் படித்தான். படிக்கப் படிக்கக் கடவுள் அவனிடம் என்ன எதிர் பார்த்தார் என்பதும் எப்படி அவன் அவருக்காக வாழ முடியும் என்பதும் பளிச்சென்று புலப்பட லாயிற்று. அவன் மேன்மேலும் திருப்தி அடைந் தான். முன்பெல்லாம், படுக்கச் சென்றதும், தன் மகன் காபிடன் நினைவுவந்து புலம்பிக்கொண்டு புர ளுவான். இப்பொழுதோ அடிக்கடி "ஈசா, உன் கருணை, உன் செயல்படி எல்லாம் நடக்கும்!" என்று தான் சொல்லுவான்.

அதுமுதல் அவன் வாழ்க்கையே மாறுபட்டது. முன்பெல்லாம், ஓய்வு நாட்களில், சிற்றுண்டிசாலைக் குச் சென்று தேனீர் அருந்துவான்; ஓரிரண்டு டம் ளர் வாட்கா என்ற சாராயம் கூடக் குடிப்பதற்கு அவன் ஆட்சேபனை செய்வதில்லை. அந்தமாதிரி, சில சமயங்களில், நண்பன் ஒருவனுடன் லேசாகக் குடித்துவிட்டு வெளியே வருவான். போதை ஏறுகிற அளவு குடிக்கமாட்டான்; ஆனால் கொஞ்சம் கிறு கிறுப்புடன் கொம்மாளமாக அசட்டு பிசட்டென்று பேசுவான்; எவனையாவது பார்த்துச் சத்தம் போடு வான், வைவான். இப்பொழுது அதெல்லாம் போயே

போய்விட்டது. அவன் வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் வந்துவிட்டன. காலையில் வேலைசெய்ய உட்கார்ந்தால் பொழுது விழுந்ததும் எழுந்திருந்து விளக்கேற்றி வைத்து, அலமாரியிலிருந்து புத்தகத்தை எடுத்துத் திறந்து வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பிப்பான். படிக்கப் படிக்க விஷயம் அவனுக்கு வியக்தமாக விளங்கலாயிற்று; அதனால் அவன் மனத்தில் தெளிவும் சந்தோஷமும் ஏற்பட்டன.

ஒருநாள் புத்தகத்திலேயே ஈடுபட்டு வெகுநேரம் படித்துக்கொண் டிருந்துவிட்டான். லியூக் எழுதிய சுவிசேஷத்தில் ஆருவது அத்தியாயத்தில் கீழேகண்ட சுலோகங்கள் வந்தன.

"உன்னை ஒரு கன்னத்தில் அடிக்கிறவனிடம் மற்றொன்றையும் காட்டு, உன் போர்வையை அபகரிக்கிறவனுக்கு உன் சட்டையையும் கொடு; கேட்கிறவனுக்கெல்லாம் கொடு. உன் சாமானை எடுத்துக் கொள்பவ னிடமிருந்து அதைத் திருப்பிக் கேட்காதே. உனக்குப் பிறர் எவ்வாறு செய்யவேண்டுமென்று நினைக்கிருயோ அவ்விதமே பிறர் பாலும் நீ நடந்துகொள்."

பகவான் இயேசு சொன்ன கீழ்க்கண்ட வரிகளையும் படித்தான்.

"நான் சொன்ன தொன்றையும் செய்யாமல் என்னை ஏன்! 'நாதா, நாதா' என்று அழைக்கிறீர்க்ள்? என்னை அண்டி, என் சொற்களைக் கேட்டு அவற்றின் படி நடப்பவன் யார் போன்றவன் என்று சொல்லுகிறேன். ஒருவன் வீடு கட்டினுன். ஆழமாகத் தோண்டி அஸ்திவாரத்தைப்

பாரைமேல் வைத்தான். வெள்ளம் பெருகிய போது ஆறு அந்த வீட்டின்மேல் வேகமாகத் தாக்கியது. அதை அசைக்க முடியவில்லை. ஏனென்றால் அது கல்மேல் கட்டின கட்டிடம். ஆனால் என் பேச்சைக் கேட்டுவிட்டு அதன்படி நடக்காமல் இருப்பவன் அஸ்திவாரம் போடாமல் தரைமேல் வீடு கட்டினவன் போலத்தான். ஆறு அதன்மேல் மோதினதும் அது தகர்ந்தது. வீடு விழுந்ததால் பெரு நஷ்டம் ஏற்பட்டது."

இந்த வாக்கியங்களைப் படித்ததும் மார்ட்டின் உள்ளத்தில் மட்டற்ற ஆனந்தம் பொங்கிற்று. மூக்குக் கண்ணாடியை எடுத்துப் புத்தகத்தின்மேல் வைத்துவிட்டு, மேஜைமேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு படித்ததைப்பற்றிப் பரியாலோசனை செய்தான். அந்த வாக்கியங்களை எடையாக வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை நிறுத்துப் பார்த்தான்.

"என்வீடு கல்லின்மேல் கட்டினதா, அல்லது மணல்மீதா? கல்லின்மேல் இருந்தால் சரி. இங்கே தனியாக உட்கார்ந்துகொண்டு கடவுள் கட்டளைகளை நிறைவேற்றி விட்டதாக எண்ணுவது சுலபம். ஆனால் கொஞ்சம் மறந்தால் மறுபடியும் பாவியாகிறேன். ஆனால் இன்னும் முயற்சி செய்கிறேன். அதே எவ்வளவு ஆனந்தம்! கடவுளே, உதவிசெய்!"

இப்படியெல்லாம் எண்ணிவிட்டுப் படுக்கப் போகும்போது மனது வரவில்லை. மறுபடியும் மேலே படிக்கலானான். ஏழாவது அத்தியாயத்தில், ரோமானிய தளகர்த்தன், விதவையின் மகன், இவர்களைப்

பற்றியும், ஜானின் சிஷ்யர்களுக்கு அளித்த பதிலையும் படித்துவிட்டுத் தனவந்தனான யூத 'பாரிஸி' இயேசு நாதரைத் தன் வீட்டிற் கழைத்த கட்டத்திற்கு வந்தான். பாவம்செய்த பெண் அவர் கால்களில் தைலம் தடவிக் கண்ணீர்கொண்டு கழுவியதையும், அவர் அவளைப் போற்றியதையும் படித்தான். நாற்பத்தி நாலாவது சுலோகத்தில் கண்டதைப் படித்தான்.

> "அந்தப் பெண்ணைப் பார்த்தவண்ணம் ஸைமனை நோக்கி அவர் சொன்னார்; இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? நான் உன் வீட்டிற்கு வந்தேன்; ஆனால் நீ எனக்குக் கால் அலம்பத் தண்ணீர் கொடுக்கவில்லை. ஆனால் இவள் என் கால்களைக் கண்ணீரால் கழுவிக் கூந்தல் கொண்டு துடைத்துவிட்டாள் நீ என்னை ஆதரவுடன் ஏற்று முத்தம் தரவில்லை. ஆனால் இவள் நான் உள்ளே வந்ததுமுதல் கால்களில் முத்த மிடுவதை நிறுத்தவில்லை. நீ என் தலைக்குக்கூடத் தைலம் அளிக்கவில்லை; இவள் என் கால்களில் கொட்டிப் பூசினாள் தைலத்தை."

இந்த வாக்கியங்களைப் பார்த்ததும் அவன் யோசனையில் ஆழ்ந்தான். "அவன் அவர் கால் கழுவ நீர் கொடுக்கவில்லை, முத்தம் தரவில்லை, அவர் தலைக்குத் தைலம் கொடுக்கவில்லை..............." மார்ட்டின் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிப் புத்தகத்தின்மேல் வைத்துவிட்டு யோசித்தான்.

"என்னைப்போல இருந்திருக்கவேண்டும், அந்த யூதன். அவனும் தன் நினைப்பாகவேதான் இருந்

தான். டம்ளர் தேனீர் எப்படிக் கிடைக்கும், எப்படி சௌக்கியமாக இருப்பது என்று வந்தவனைப்பற்றி ஒரு கவலையும் படவில்லை. தன் காரியத்தில் கவன மாக இருந்தான். விருந்தாளியைப் பற்றிய நினைப்பே அவனுக்கு இல்லை. அதுவும் வந்தவர் யார்? இயேசு நாதரே! அவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தால் நான் எப்படி நடந்துகொள்ளுவேன்!

பிறகு மார்ட்டின் கைகளின்மேல் தலையை வைத் துக்கொண்டு தான் அறியாமலே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

"மார்ட்டின்!"

திடீரென்று யாரோ காதருகில் வந்து கூப்பிட் டதுபோல் குரல் கேட்டது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்! "யார் அங்கே?" என்றான்.

திரும்பிக் கதவின் பக்கம் பார்த்தான், யாரும் காணோம். மறுபடியும் கேட்டான் யாரது என்று. அப்பொழுதும் அவன் காதில் தெளிவாக விழுந் தது:

"மார்ட்டின், மார்ட்டின்! நாளைக்குத் தெருவைக் கவனித்துக் கொண்டிரு; நான் வருகிறேன்!"

மார்ட்டின் பிரயத்தனமாகத் தூக்கக் கலக் கத்தைத் தூர விலக்கி நாற்காலியிலிருந்து எழுந்தான்; நன்றாகக் கண்களைக் கசக்கிக் கொண்டான். ஆனால் அந்த வார்த்தைகளை அவன் கேட்டது கனவிலா நினை விலா என்று அவனுக்கு விளங்கவில்லை. விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

மறுநாள் கிழக்கு வெளுப்பதற்குமுன் எழுந்திருந்து ஜபம் செய்துவிட்டு அடுப்பு மூட்டிக் கீரைக் கொழம்பும் கோதுமைக் கூழும் தயார் செய்தான். பிறகு வெந்நீர் கொதிக்க வைத்துவிட்டு மேலங்கி போட்டுக் கொண்டு ஜன்னலருகே உட்கார்ந்து வேலையைத் துவக்கினான். வேலை செய்துகொண்டே முன் இரவு நடந்ததைப் பற்றி யோசித்தான். சில சமயங்களில் அது வெ.றும் கனவுதான் என்று தோன்றிற்று; சில சமயங்களில் உண்மையாகவே அந்தக் குரலைக் கேட்டதாகப் பட்டது! 'இந்தமாதிரி இதற்குமுன் நடந்திருக்கின்றனவோ!' என்று சொல்லிக் கொண்டான்.

இப்படி ஜன்னலண்டை உட்கார்ந்து வேலையைக் கூட அதிகம் செய்யாமல் வெளியே பார்த்த வண்ணமே இருந்தான். தனக்கு அடையாளம் புரியாத செருப்பணிந்து யாராவது தெரு வழியே போனால் உடனே குனிந்து மேலே முகத்தைப் பார்ப்பான். மூட்டை தூக்கி ஒருவன் புதுச் செருப்பில் போனான்; பிறகு தண்ணீர் தூக்குகிறவன் ஒருவன். நிகலஸ் அரசன் காலத்துக் கிழச் சிப்பாய் ஒருவன் மண்வெட்டியும் கையுமாக ஜன்னலருகில் வந்தான். அவனுடைய பழைய பீத்தல் செருப்பைக் கண்டே மார்ட்டின் அவனை அடையாளம் கண்டு கொண்டான். அவன் பெயர் ஸ்டிபானிஷ். அடுத்திருந்த வியாபாரி ஒருவன் மனதிரங்கி அவனை வீட்டில் வைத்துக் கொண்டிருந்தான். வீட்டுக் காவல்காரனுக்கு உதவி செய்ய

வேண்டியதுதான் கிழவன் வேலை. மார்ட்டினுடைய ஜன்னலுக்கு முன் பேய்ந்துகிடந்த பனியைத் தூரத் தள்ள ஆரம்பித்தான் கிழவன். மார்ட்டின் அவனைப் பார்த்துவிட்டுத் தன் வேலையில் ஈடுபட்டான்.

"வயதாகி விட்டதால் எனக்குச் சித்தப் பிரமை கூட வந்துவிட்டதோ? பனியை அகற்றிப்போட ஸ்டிபானிஷ் வந்தால், கிறிஸ்து தான் என்னைக் காண வந்துவிட்டார் என்று நினைக்கிறேனே! முட்டாள்தனமாக இருக்கிறது" என்று தனக்குத் தானே சிரித்த வண்ணம் சொல்லிக் கொண்டான்.

ஆனால் பத்துப் பனிரண்டு தையல் கூடப் போட்டிருக்க மாட்டான்—மறுபடியும் வெளியே பார்க்க வேண்டுமென்று உள்ளம் தூண்டுதல் கொண்டது. ஸ்டிபானிஷ் மண்வெட்டியைச் சுவரில் சாற்றிவிட்டு களைப்பாறவோ குளிர் காயவோ முயன்று கொண்டிருந்தான். வயதாகி உடல் வலுவு போய்விட்டதால் பனியை வெட்டித் தூரப் போடக்கூட முடியவில்லை.

"அவனை உள்ளே கூப்பிட்டுக் கொஞ்சம் தேனீர் கொடுத்தாலென்ன? வெந்நீர் கொதித்துக் கொண்டு தான் இருக்கிறது" என்று மார்ட்டின் நினைத்தான்.

உடனே ஊசியைத் தோலில் குத்திவிட்டு எழுந்திருந்தான். வெந்நீரைக் கொண்டு தேனீர் தயாரித்தான். பிறகு கைவிரலால் ஜன்னலைத் தட்டினான். ஸ்டிபானிஷ் திரும்பிப் பார்த்து ஜன்னலருகில் வந்

தான். அவனை உள்ளே வரச்சொல்லிச் சைகை காட்டி விட்டுக் கதவைத் திறக்கப் போனான்.

"உள்ளே வா, கொஞ்சம் குளிர் காய்ந்து கொள். குளிர் தாங்கமுடியவில்லை அல்லவா?"

"கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்! எலும்பு களே இசிவெடுத்துப் போய்விட்டன" என்று சொல் லிக்கொண்டு அவன் உள்ளே வந்தான். முதலில் மேலே படிந்திருந்த பனியை உதறிவிட்டு, தரை ஈர மாகிவிடப் போகிறதே என்று கால்களையும் துடைத் துக்கொள்ள ஆரம்பித்தான். தடுமாறிக் கீழே விழு வதற்கிருந்தான்.

"அது கிடக்கிறது வா! நான் பிறகு தரை யைத் துடைத்துவிடுகிறேன்—எப்படியும் எப்பொழு தாவது துடைக்க வேண்டுமல்லவா? வா, உட் காரு, கொஞ்சம் தேனீர் சாப்பிடு!" என்றான் மார்ட் டின்.

இரண்டு டம்ளர்கள் நிறைய டீ எடுத்து ஒன்றை வந்தவனிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றை ஸாஸரில் கொட்டி ஊதினான்.

ஸ்டீபானிஷ் டம்ளரைக் காலி செய்து, போது மென்பதற் கடையாளமாக அதைக் கவிழ்த்து வைத்து அதன்மேல் மீதமிருந்த சக்கரைத் துண்டை வைத் தான். ஆனால் இன்னும் கொஞ்சம் இருந்தால் குடிப் பான் என்பது தெரிந்தது.

"இன்னொரு டம்ளர் சாப்பிடு" என்று சொல்லி மார்ட்டின் இரண்டு டம்ளர்களிலும் மறுபடி தேனீர்

ஊற்றினன். ஆனல் அவன் டீ குடித்தபொழுது மார்ட்டின் தெருவில் கவனமாக இருந்தான்.

"யாரையாவது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருயோ?" என்று வந்தவன் கேட்டான்.

"யாரையாவது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனு என்ரு கேட்கிருய்? அது—சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது. யாராவது வர வேண்டியவர்கள் இருக்கிருர்கள் என்பதில்லை. நான் நேற்றிரவு கேட்டதொன்று என் காதையும் மனத்தையும் விட்டு அகலவே மாட்டேன் என்கிறது. அது வெறும் கனவோ அல்லது என் மனக் கற்பனையோ தெரியவில்லை. நேற்றிரவு சுவிசேஷத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். இயேசுநாதர் உலகில் உலவிப் பட்ட கஷ்டங்களைப்பற்றிப் படித்தேன். நீ கூட அவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய், நிச்சயம்."

"கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் எனக்குப் படிக்கத் தெரியாது—அதெல்லாம் அதிகமாகத் தெரியாது" என்ருன் ஸ்டிபானிஷ்.

"அவர் உலகில் உலவியதைப்பற்றிப் படித்துக் கொண்டிருந்தேனு! அவர் யூதப் 'பாரிஸி' வீட்டிற்குச் சென்ற இடம் இருக்கிறதல்லவா, அங்கே வந்து சேர்ந்தேன். அவன் அவரைச் சரியாக வரவேற்கவில்லை. அதைப் படித்தபோது இயேசுநாதரை அவன் சரியாக வரவேற்று மரியாதை சொல்லவில்லையே என்று நினைத்தேன். அவர் என்னைப் போன்றவனைத் தேடிக்கொண்டு வந்திருந்தார் என்று வைத்

தூக்கொள். அவரை வரவேற்க நான் என்னதான் செய்ய மாட்டேன் என்று எண்ணலானேன். அவன் அவரை மரியாதையே செய்யவில்லை. இந்தமாதிரி எண்ணிக்கொண் டிருந்தபொழுது அசதியால் தூங்கி விட்டேன். யாரோ கூப்பிடுவது போல் இருந்தது. எழுந்து உட்கார்ந்தேன். யாரோ என் காதில் "என்னை எதிர்பார்த்துக் கொண்டிரு. நாளை வருகிறேன்" என்று சொன்னதுபோல இருந்தது. இரண்டு தடவை அப்படிக் கேட்டது. உண்மையைச் சொல்லி விடுகிறேனே, அது என் மனத்தில் பதிந்துவிட்டது. எனக்கே வெட்கமாயிருக்கிறது, ஆனால் இயேசு நாதரை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன்!"

ஸ்டிபானிஷ் மௌனமாகத் தலையை ஆட்டிவிட்டு டம்ளரில் இருந்ததைக் குடித்துவிட்டு அதைத் தூர வைத்தான். ஆனால் மார்ட்டின் மறுபடியும் அதில் தேனீர் ஊற்றி அவனிடம் கொடுத்தான்.

"இந்தா, இன்னொரு டம்ளர் குடி. இன்னும் என்ன நினைத்தேன் தெரியுமா? அவர் இங்கே நடமாடியபோது, யாரையும் வெறுக்காமல், சாதாரண மக்களிடையே பழகி வந்தார். ஏழைகளுடன் தான் காலம் கழித்தார். நம்மைப்போன்ற பாவிகளான தொழிலாளிகளிடையே இருந்துதான் தனது சிஷ்யர்களைக்கூடத் தேர்ந்தெடுத்தார். 'எவன் தன்னையே உயர்த்திக் கொள்ளுகிறானோ அவன் நிச்சயம் நீசனாவான். எவன் தாழ்மையுடன் இருக்கிறானோ அவன் மேலானவன் ஆவான். நீங்கள் என்னை ஆண்டவன்

என்கிறீர்கள். நான் உங்கள் கால்களைக் கழுவு கிறேன். முதலாக நிற்க விரும்புகிறவன் எல்லோருக்கும் கடையாக சேவை புரிந்து நிற்கட்டும். ஏனெனில் ஏழைகளும், தாழ்மையுள்ளவர்களும், இரக்கமுள்ளவர்களும் இறைவன் அருள் பெற்றவர்கள்" என்று நாதர் சொன்னார்.

ஸ்டிபானிஷ் டீயை மறந்தான். வயதானவனாதலால் வெகு சுலபமாக எதிலும் உருகி விடுவான். உட்கார்ந்து கேட்டுக்கொண் டிருக்கும் போதே அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந் தோடியது.

"இந்தா, இன்னும் கொஞ்சம் குடிக்கிறாயா?" என்றான் மார்ட்டின். ஆனால் ஸ்டிபானிஷ் வந்தனம் செய்து, டம்ளரை நகற்றி விட்டு எழுந்திருந்தான்.

"மார்ட்டின், நீ உடலுக்கும் உள்ளத்துக்கும் கூட உணவளித்து விட்டாய்!" என்றான்.

"மற்றொரு தரம் வா. விருந்தாளி வந்தால் எனக்கு திருப்தியாக இருக்கிறது."

ஸ்டிபானிஷ் போய்விட்டான். மார்ட்டின் மீதமிருந்த டீயைக் குடித்துவிட்டு, சாமான்களை எடுத்து வைத்து விட்டு வேலை செய்ய உட்கார்ந்தான். செருப்பின் அடிப் பாகத்தைத் தைத்துக்கொண்டே ஜன்னல் வழியாக கிறிஸ்துவை எதிர் நோக்கி அவரையும் அவர் செயல்களைப் பற்றியும் யோசித்துக்கொண் டிருந்தான். கிறிஸ்துவின் வாக்கு தான் அவன் உள்ளத்தில் நிரம்பிக் கிடந்தது.

இரண்டு ஸோல்ஜர்கள் தெருவழியே போனார்கள். ஒருவன் காலில் சர்க்கார் பூட்சும் மற்றவன் காலில் சொந்தச் செருப்பும் இருந்தன. அதற்கப்புறம் பக்கத்து வீட்டுக்காரன் ஒருவன் பளபளவென்றிருந்த ரப்பர் செருப் பணிந்து சென்றான். அதன் பிறகு கிழிந்த ஸாக்ஸும் நாட்டுச் செருப்பும் அணிந்த பெண் ஒருத்தி வந்தாள். ஜன்னலைத் தாண்டிச் சென்றவள் சுவரருகில் சற்று நின்றாள். மார்ட்டின் ஜன்னல் வழியாக அவளை எட்டிப் பார்த்தான். அவனுக்கு அறிமுகம் ஆகாதவள். ஏழைமை ஆடையில் குழந்தையொன்றைக் கையில் வைத்துக்கொண் டிருந்தாள். சுவரருகே நின்று காற்றடிக்கும் பக்கம் முதுகைக் காட்டிக்கொண்டு குழந்தைக்குப் போர்த்த முயன்று கொண்டிருந்தாள்; ஆனால் போர்வை என்று அவளிடம் ஒன்றும் இல்லை. அவள் அணிந்திருந்ததே வெயிற்கால ஆடை; அதுவும் அழுக்கடைந்தும் கிழிந்தும் இருந்தது. குழந்தை அழுதது—அவள் அதைச் சமாதானம் செய்யப் பார்த்தாள், முடியவில்லை—அதை மார்ட்டின் ஜன்னல் வழியாகக் கண்டான். மார்ட்டின் எழுந்திருந்து கதவண்டை போய் படியில் நின்று கொண்டு "இந்தாம்மா, தாயே, இந்தா!" என்று கூப்பிட்டான்.

அந்த ஸ்திரீ திரும்பிப் பார்த்தாள்.

"குழந்தையுடன் ஏன் அந்தக் குளிரில் நிற்கிறாய்? உள்ளே வா. குளிரடிக்காத இடத்தில் கொஞ்சம் நன்றாகப் போர்த்தலாம், இப்படி வா!"

மூக்குக் கண்ணாடி யணிந்த கிழவன் ஒருவன் தன்னைக் கூப்பிடுவதைக் கண்டு அவள் ஆச்சரிய மடைந்தாள். ஆனால் அவனைப் பின்தொடர்ந்து உள்ளே போனாள்.

படிகளில் இறங்கி, அந்தச் சிறு அறையில் நுழைந்தார்கள். கிழவன் அவளைப் படுக்கை யருகில் அழைத்துக்கொண்டு போய் " கணப்பின் அருகில் உட்கார் அம்மா! குளிர் காய்ந்து கொண்டு குழந் தைக்குப் பால் கொடு! " என்றான்.

" காலை முதல் வாயில் ஒன்றும் போட வில்லை. பால் எங்கிருக்கும்? " என்றாள் அவள். இருந்தாலும் குழந்தையை எடுத்துக்கொண்டாள்.

மார்ட்டின் தலையை ஆட்டினான். ஒரு தட்டில் கொஞ்சம் ரொட்டி எடுத்து வைத்துக்கொண்டு வந்தான். பிறகு அந்தத் தட்டில் கொஞ்சம் கீரைக் கொழம்பை ஊற்றினான். கோதுமைக் கூழ்ப் பாத்தி ரத்தை எடுத்துப் பார்த்தான். ஆனால் அது பதமாக வில்லை. ஆகையால் மேஜை மேல் துணியை விரித்து ரொட்டியையும் குழம்பையும் மட்டும் வைத்தான்.

" உட்கார்ந்து சாப்பிடு, தாயே! நான் குழந்தை யைப் பார்த்துக்கொள்ளுகிறேன். ஏன், நான் பிள்ளை குட்டிக்காரனாக இருந்தவன்தானம்மா! அதைச் சமா தானம் பண்ணத் தெரியும் எனக்கு " என்றான்.

அந்தப் பெண்மணி மரியாதைக் கடையாளமாக சிலுவைச் சைகை செய்துவிட்டு மேஜையண்டை உட்கார்ந்தாள். மார்ட்டின் குழந்தையைப் படுக்கை

யில் கிடத்திப் பக்கத்தில் உட்கார்ந்தான். 'த்ஸூ த்ஸூ' என்று செய்து பார்த்தான்; பல் இல்லாததால் சரியாக வரவில்லை. குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. பிறகு மார்ட்டின் விரலால் மெள்ளத் தட்டிப் பார்த்தான். விரலை அதன் வாயண்டைக் கொண்டு போய் சட்டென்று இழுத்துக்கொண்டான். இந்த மாதிரி பல தடவை செய்தான். குழந்தை விரலைக் கவ்வும்படி விடவில்லை. ஏனென்றால் சக்கிலியன் மெழுகு பட்டு விரல் கன்னங்கரேலென்று இருந்தது. குழந்தை விரலைப் பார்த்துக்கொண்டே அழுகையை நிறுத்திற்று; பிறகு சிரிக்க ஆரம்பித்தது. மார்ட்டின் பரம சந்தோஷம் அடைந்தான்.

அந்தப் பெண் சாப்பிட்டுக்கொண்டே தன் வரலாற்றைச் சொன்னாள்.

"என் புருஷன் ஒரு சோல்ஜர். அவரை எட்டு மாதங்களுக்கு முன்பு, எங்கேயோ, தூர, அனுப்பி விட்டார்கள். அவரைப் பற்றிப் பிறகு ஒன்றுமே தெரிய வில்லை. இது பிறக்கும் வரையில் ஓரிடத்தில் சமையல்காரியாக இருந்தேன். பிறகு குழந்தையுடன் என்னை வைத்துக்கொள்ளமாட்டோ மென்றுவிட்டார்கள். வேறு வேலை கிடைக்காமல் மூன்று மாதங்களாகத் திண்டாடிக்கொண் டிருக்கிறேன். வயிற்றைக் கழுவ இருந்ததையெல்லாம் விற்றாகி விட்டது. செவிலித் தாயாகப் போகலாமென்று பார்த்தேன். ஒருவரும் வைத்துக்கொள்ள முடியாதென்று விட்டார்கள். நான் மெலிந்து மேனியின்றி இருக்கிறே

னும். இப்போது வியாபாரி ஒருவருடைய பெண்சாதி யிடம் போயிருந்தேன். (எங்களூர்க்காரி ஒருத்தி அங்கே வேலையாக இருக்கிறாள்) அவள் என்னை வேலைக்கு எடுத்துக்கொள்ளுவதாகச் சொல்லி யிருக் கிறாள். எல்லாம் தீர்மானமாகி விட்டதென்று நினைத் தேன்; ஆனால் அவள் என்னை அடுத்த வாரம் வரச் சொல்லுகிறாள். அவள் வீடு வெகு தூரம். எனக்கோ ஓய்ந்துபோய் விட்டது. பாவம் குழந்தை, பசியால் மெலிந்து விட்டது. நல்ல காலமாக, வீட்டுக்காரி நல்லவள்; வாடகை யில்லாமல் வீட்டில் இருக்க விடு கிறாள். இல்லாத போனால் என்ன செய்வேனோ தெரி யாது."

மார்ட்டின் பெருமூச் சொன்று விட்டான். "குளிருக் கடக்கமாக வேறு உடை இல்லையாம்மா உனக்கு?" என்று கேட்டான்.

"உடைக்கு எங்கே போவது? என் கையி லிருந்த ஒரே போர்வையை நேற்றுத்தான் ஆறு பென் ஸுக்கு அடகு வைத்தேன்."

அவள் எழுந்து வந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள். மார்ட்டின் எழுந்தான். சுவரோரம் போய், தொங்கிக்கொண்டிருந்த துணிகளில் தேடிப் பார்த்து ஒரு பழைய போர்வையைக் கொண்டு வந் தான்.

"இந்தாம்மா, இதுவும் கிழிந்துபோன பழையது தான். ஆனால் குழந்தைக்குப் போதும்" என்றான் மார்ட்டின்.

அந்த ஸ்திரீ போர்வையையும் கிழவனையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு அதைக் கையில் வாங்கிக் கொண்டு பல பலவென்று கண்ணீர் உதிர்த்தாள். மார்ட்டின் சட்டென்று மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு படுக்கை யடியில் கையை விட்டுத் துளாவி ஒரு சிறு பெட்டியை வெளியே இழுத்தான். அதற்குள் ஏதோ தேடிவிட்டு அவள் எதிரே வந்து உட்கார்ந்தான்.

"கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்! இயேசு தான் என்னை இந்த ஜன்னலடிக்கு அனுப்பி யிருக்க வேண்டும்; இல்லாவிட்டால் குழந்தை விறைத்துப் போயிருக்கும். நான் புறப்பட்ட பொழுது அவ்வளவு பனி இல்லை; இப்பொழுது பாருங்கள், எவ்வளவு குளிர்! கிறிஸ்துதான் உங்களைத் தூண்டி ஜன்னல் வழியே பார்த்து என்மேல் இரக்கம் கொள்ளச் செய்திருக்கிறார், நிச்சயம்!"

மார்ட்டின் புன்னகையுடன் "நிரம்ப வாஸ்தவம்; அவர்தான் காரணம். யதேச்சையாக நான் வெளியே பார்க்கவில்லை!" என்றான்.

பிறகு அவளிடம் தன் கனவைப் பற்றியும் இயேசு நாதர் வருவதாகச் சொன்னதைப் பற்றியும் கூறினான்.

"யார் கண்டார்கள்? எல்லாம் நடக்கலாம்" என்று சொல்லிவிட்டு அவள் எழுந்தாள். போர்வையைத் தனக்கும் குழந்தைக்குமாகப் போர்த்திக் கொண்டு மார்ட்டினை வணங்கி மறுபடியும் அவனுக்கு நன்றி கூறினாள்.

"இயேசுவுக்காக, இந்தா, இதையும் பெற்றுக் கொள்!" என்று சொல்லி மார்ட்டின் அடகை மீட்ப தற்கு அவளிடம் ஆறு பென்ஸ் கொடுத்தான். அவள் சிலுவைச் சின்னம் செய்து கொண்டாள். மார்ட்டி னும் செய்து கொண்டான். அவளை வெளியே கொண்டுபோய் விட்டான்.

அவள் போனதும் மார்ட்டின் கொஞ்சம் ஆகா ரம் செய்துவிட்டு மேஜையைச் சுத்தம் செய்து வேலைக்கு உட்கார்ந்தான். ஆனால் ஜன்னலை மறக்க வில்லை. அதில் நிழல் விழும்போதெல்லாம் யாரென்று எட்டிப் பார்த்தான். தெரிந்தவர்களும் தெரியாதவர் களும் போனார்கள். விசேஷமாக யாரையும் காணோம்.

சற்று நேரம் கழித்து ஆப்பிள் கூடைக்காரி ஒருத்தி ஜன்னலுக்கெதிரில் சற்று நின்றதைக் கண் டான். கூடை பெரிதாய்க் காணப்பட்டது; ஆனால் அதில் பழங்கள் அதிகம் பாக்கி இருந்ததாகத் தெரிய வில்லை. அநேகமாக எல்லாவற்றையும் விற்றுவிட் டாள். முதுகில் ஒரு சாக்கு நிறைய 'சிரா' இருந்தது. எங்கோ கட்டிட வேலை நடந்த இடத்தில் அதைப் பொருக்கி இருந்தாள். அது முதுகில் குத்திற்று போலும். அதைக் கொஞ்சம் ஒரு தோளிலிருந்து மற்றொரு தோளுக்கு மாற்றிக்கொள்வதற்காக அதைக் கீழே இறக்கி விறகைக் கீழே கொட்டினாள். பழக் கூடையை ஒரு மேடை மேல் வைத்திருந்தாள். அவள் விறகைக் கொட்டுவதில் முனைந்திருந்த பொழுது கிழிந்துபோன தொப்பி யணிந்த பையன் ஒருவன்

ஓடி வந்து ஆப்பிள் ஒன்றைக் கூடையிலிருந்து எடுத்துக்கொண்டு ஓட முயன்ருன். கிழவி பார்த்து விட்டாள். சட்டென்று திரும்பி அவன் சட்டைக் கையைப் பிடித்துக்கொண்டாள். அவன் தப்பித்துக் கொள்ள முண்டிப் பார்த்தான். ஆனல் கிழவி விட வில்லை. இரண்டு கையாலும் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொப்பியைக் கீழே தட்டிவிட்டுத் தலைமயிரைப் பிடித்துக்கொண்டாள். பையன் கூச்ச லிட்டான்; கிழவி திட்டினுள். மார்ட்டின் ஊசியை இடத்தில் குத்திக் கூட வைக்காமல் கீழே எறிந்து விட்டு வெளியே ஓடினுன். வாசற்படியில் தடுமாறி மூக்குக் கண்ணுடியைக் கீழே போட்டுவிட்டான். அவசரத்தில் அதைக் கூடக் குனிந்தெடுக்காமல் தெருவிற்கு விரைந்தான். கிழவி பையனின் மயிரைப் பிய்த்த வண்ணம் அவனை வாயில் வந்தபடி திட்டிக்கொண்டிருந்தாள். "படவா, உன்னைப் போலீஸில் வைக்கிறேன் பார்" என்ருள். பையன் மேலும் விடுபட முண்டிக்கொண்டே "நான் எடுக்க வில்லை. என்னை யேன் அடிக்கிருய்? என்னை விடு!" என்று திமிறிக் கொண்டிருந்தான்.

மார்ட்டின் அவர்களைப் பிரித்து விட்டான். பையன் கையைப் பிடித்துக்கொண்டு "அவனை விட்டு விடு, பாட்டி, இயேசுநாதருக்காக விடு!" என்ருன்.

"சரியாக அவனை நான் தீட்டுகிற தீட்டில் ஒரு வருஷத்துக்கு அவன் மறக்க மாட்டான்.

அயோக்கியப் பயலைப் போலீஸாரிடம் இழுத்துக் கொண்டு போகிறேன்."

மார்ட்டின் கிழவியிடம் மன்றாடினான்.

"இனிமேல் செய்யமாட்டான், பாட்டி, விட்டு விடு, கிறிஸ்துவிற்காக விடு!"

கிழவி கைப்பிடியைத் தளர்த்தினாள். உடனே பையன் ஓடப் பார்த்தான். ஆனால் மார்ட்டின் அவனைத் தடுத்தான்.

"பாட்டியிடம் மன்னிப்பு கேட்டுக்கொள். இனி மேல் அந்த மாதிரி செய்யாதே, தெரியுமா? நீ ஆப்பிள் எடுத்ததை நான் பார்த்தேன்!"

பையன் அழுதுகொண்டே மன்னிப்புக் கேட்டான்.

"அதுதான் சரி, இந்தா, ஆப்பிள் ஒன்று" என்று சொல்லி மார்ட்டின் கூடையிலிருந்து ஒரு பழத்தை எடுத்துப் பையனிடம் கொடுத்துக்கொண்டு "பாட்டி, காசு நான் தருகிறேன்!" என்றான்.

"அந்தமாதிரி செய்து அந்தப் போக்கிரிகளை இப்படித்தான் நீங்கள் கெடுக்கிறது. சாட்டையால் விளாசுகிற விளாசில் ஒரு வாரம் அவன் அதை மறக்கக் கூடாது."

"பாட்டி, பாட்டி, அதுதான் நாம் செய்யும் காரியம், ஆனால் கடவுள் அப்படிச் செய்கிறதில்லை. ஒரு ஆப்பிளைத் திருடியதற்கு அவனுக்குச் சாட்டையடி யென்றால், நம் பாவங்களுக்கு எல்லாம் நம்மை என்ன செய்ய வேண்டும்?"

கிழவி மௌனமானுள்.

உடனே மார்ட்டின் கிறிஸ்து சொன்ன திருஷ்டாந்தக் கதையை அவளுக்குச் சொன்னுன். முதலாளி ஒருவன் ஊழியன் கொடுக்க வேண்டிய கடன் பூராவும் ரத்து செய்தான்; அவன் வெளியே போனதும் தனக்குப் பணம் கொடுக்க வேண்டியவன் ஒருவன் மென்னியைப் பிடித்துக் கொண்டான்—என்ற கதை அது. கிழவி கதை பூராவையும் கேட்டாள். பையனும் நின்று கேட்டான்.

"நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்பது கடவுள் கட்டளை. தவறினுல் அவரிடம் நமக்கு மன்னிப்புக் கிடையாது. எல்லோரையும் மன்னி; அதிலும் அறிவில்லாத சிறு பையனை நிச்சயம் மன்னிக்க வேண்டும்."

கிழவி தலையை யசைத்துப் பெரு மூச்செறிந்தாள்.

"அதெல்லாம் சரிதான். அவர்கள் கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போகிருர்களே!"

"பெரியோர்கள் அவர்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டும்."

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன். எனக்கும் ஏழு பிறந்தது—ஒரு பெண் தான் மிச்சம்" என்று கிழவி தான் தன் மகளுடன் வசிக்கும் இடத்தைப் பற்றியும் பேரன் பேத்திகள் எவ்வளவு பேர் என்பதையும் சொல்ல ஆரம்பித்தாள்.

"ஆச்சு, எனக்கு ஓஞ்சு போச்சு. ஆனுல் அந்தக் கண் திறக்காத குட்டிகளுக்காகப் பாடுபடு

கிறேன். அதுகள் என் மேலே உசிராயிருக்கு. நான் எப்போ வீடு திரும்புவேன்னு காத்துக்கொண்டிருந்து, அதுகதான் ஓடிவந்து கட்டிக்கிறதுக, வேறே பெரியவங்ககூட வரதில்லே. குட்டி அன்னி என்னை விட்டு நகருவதில்லே—'பாட்டி, பாட்டி' என்று" என்று சொல்லிக்கொண்டே போகும்போது குழந்தைகளை நினைத்துக் கிழவி உருகினாள்.

"அது வாஸ்தவம்தான். சிறு பிள்ளைத் தனம் தான்—கடவுள் அவனைக் காப்பாற்ற வேண்டும்" என்றாள் சிறுவனைக் குறித்து.

கிழவி மூட்டையை எடுத்து முதுகில் போட்டுக் கொள்ளப் போகிறபோது பையன் சட்டென்று பாய்ந்து வந்து "பாட்டி, நான் தூக்கிக்கொண்டு வருகிறேன் அதை: நான் அந்தப் பக்கம்தான் போகிறேன்" என்றான்.

கிழவி தலையை யசைத்துச் சாக்கை அவன் முதுகில் வைத்தாள். இருவரும் தெருவழியாக ஒன்றாகச் சென்றார்கள். ஆப்பிள் காசைக் கேட்கக்கூட மறந்து விட்டாள் பாட்டி. அவர்கள் போய்க் கொண்டே பேசுவதைப் பார்த்த வண்ணம் மார்ட்டின் நின்றான்.

அவர்கள் கண்ணிலிருந்து மறைந்ததும் மார்ட்டின் உள்ளே போனான். மூக்குக் கண்ணாடி உடையாமல் படியில் கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு போய் வேலைக்கு உட்கார்ந்தான்.

கொஞ்சநேரம் வேலை செய்தான். பிறகு

தோலின் தொளைகளின் மூலம் தைக்கு மிடத்தைப் பார்க்க முடியவில்லை. அப்பொழுது விளக்கேற்று கிறவன் தெரு விளக்குகளை ஏற்றப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டான்.

"ஓகோ, விளக்கு வைக்கிற நேரமாகி விட்டது போலிருக்கிறது" என்று நினைத்துக்கொண்டே விளக்கை யேற்றித் தொங்க விட்டுவிட்டு வேலை செய்ய உட்கார்ந்தான். ஒரு செருப்பை முடித்தான். திருப்பிப் பார்த்தான். சரியாக இருந்தது. உடனே ஆயுதங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, வெட்டிப் போட்ட தோல் துண்டுகளையும், ஊசி நூல்களையும் அவற்றின் இடத்தில் வைத்தான். விளக்கை எடுத்து மேஜைமேல் வைத்துக்கொண்டு வேத புத்தகத்தை எடுத்தான். முதல் நாள் படித்து மொராக்கோத் தோல் அடையாளம் வைத்திருந்த இடத்தில் திறந்து படிக்க எண்ணினன். ஆனல் புத்தகம் தானே மற்றோ ரிடத்தில் திறந்து கொண்டது. அதைத் திறந்ததுமே முதல்நாள் கனவு ஞாபகம் வந்தது. வந்ததுமே பின் னல் யாரோ வருவதுபோலக் காலடிச் சத்தம் கேட் டதுபோலத் தோன்றிற்று. மார்ட்டின் திரும்பிப்பார்த் தான். இருட்டாக இருந்த மூலையில் மனிதர்கள் நிற் பதுபோல இருந்தது. ஆனல் அவர்கள் யாரென்று கண்டு பிடிக்க முடிய வில்லை அவனல், அவன் காதில் ஒரு குரல் மெதுவாகச் சொல்லிற்று; "மார்ட்டின், மார்ட்டின் என்னைத் தெரியவில்லையா?"

"யாரது?" என்று மார்ட்டின் முனகினன்.

"நான்தான்!" என்றது குரல். இருள் மூலையிலிருந்து ஸ்டிபானிஷ், முன் வந்தான், புன்னகை புரிந்து விட்டு மேகம் போல மறைந்துவிட்டான்.

"நான்தான்!" என்றது குரல் மறுபடியும். இருள் மூலையிலிருந்து குழந்தையும் கையுமாக அந்தப் பெண் தோன்றினாள். அவள் புன்னகை செய்தாள், குழந்தை சிரித்தது. அவர்களும் மறைந்தார்கள்.

மார்ட்டின் உள்ளம் மலர்ந்தது. சிலுவைச் சின்னம் செய்து வணங்கிவிட்டு, மூக்குக்கண்ணாடி அணிந்து புத்தகம் திறந்த இடத்தில் படிக்கலானான். பக்கத்தின் தலைப்பில் அவன் படித்தான்;

> "நான் பசியுட னிருந்தேன், நீ உணவளித்தாய்; நான் தாகங்கொண் டிருந்தேன், நீ பானம் கொடுத்தாய்; நான் யாரோ, நீ என்னை உள்ளே கூப்பிட்டாய்!"

பக்கத்தின் அடியில் வாசித்தான்:

> "என்னைச் சேர்ந்த இந்த மக்களுக்கு நீ அதைச் செய்தாய் — அந்தக் கீழ் மக்களுக்கு; ஆகையால் நீ அதையெல்லாம் எனக்கேதான் செய்தாய்." (மத்தேயு—25)

தன் கனவு நினைவாகி விட்டது என்று மார்ட்டின் உடனே அறிந்தான். ஆண்டவன் அன்று உண்மையாகவே அவனிடம் வந்தார்; அவன் அவரை வரவேற்று விட்டான்.

4. தீமை மயக்கும் நன்மை நிலைக்கும்

பண்டைக் காலத்தில் நல்ல தயாளு ஒருவனிருந்தான். அவன் ஐச்வரியம் நிறையப்பெற்றவனாய்ப் பல அடிமைகளுக்கு அதிபனாயிருந்தான்.

"இவ்வுலகில் எங்கள் எஜமானனுக்கு நிகர் வேறெவரும் இலர். அவர் எங்களுக்கு வேண்டிய ஊணுடை யளித்து எங்கள் திறமைக் கேற்ப வேலை யளிக்கிறார். எவர் மீதும் அவருக்கு எரிச்சல் கிடையாது; எவர்க்கும் அவர் தீங்குரையார். அடிமைகளை ஆடுமாடுகளினுங் கேடாய் நடத்தி, விசாரியாது தண்டித்து, இன்சொல்லேதும் வழங்காத பிற எஜமானர் போலன்றி அவர் எங்கள் க்ஷேமத்தைக் கருதி நன்மை புரிந்து நயம்பட வுரைப்பவர். இதனினும் நாங்கள் விரும்புதற் குரியது யாது?" என்று அவ்வடிமைகள் தங்கள் எஜமானனைப் பற்றிப் பெருமையுறுவர்.

தங்கள் எஜமானனை அவர்கள் இவ்வாறு புகழ்வதைக் கேட்ட பிசாசு அவர்களது ஒற்றுமை வாழ்க்கையையும் அன்பையும் குறித்து வெறுப்புற்றது. ஆகவே அது அடிமைகளுள் ஒருவனாகிய ஆலப் என்பவனைத் தன் வசமாக்கிக்கொண்டு, ஏனைய அடிமைகளைக் கெடுக்குமாறு அவனை ஏவியது. ஒரு நாள் அவர்கள் யாவரும் ஓய்வுட னமர்ந்து தங்கள் எஜ

மானனது நற்குணத்தைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தபோது ஆலப் தன் குரலை யுயர்த்தி, "நம் எஜ மானனது நற் குணத்தைப் பற்றி நாம் இவ்வளவு பெருமை கொள்வது மடைமையே. தன் விருப்பப் படி பிறர் நடந்து கொண்டால், பிசாசுகூட அன் பாய்த்தா னிருக்கும். நமது எஜமானனை நாம் சகல விதத்தும் மகிழ்வித்துத் தொண்டாற்றுகிறோம். அவன் சித்தத்தை முன்னதாகவே யுணர்ந்து நினைக்கு முன் அவன் விருப்பை நிறைவேற்றுகிறோம். நம்மிடம் அவன் அன்பு கொள்ளாதிருத்தல் எங்ஙனம் சாத்தி யம்? அவன் சித்தப்படி செல்லாது சற்றே முரணாக நடந்து பாருங்கள்; அப்போது தெரியும். எல்லோரை யும் போன்றேதான் அவனும் நடந்து கொள்வான்; மிகக் கொடிய எஜமானர்களைப் போலவே கடுமை யாய்த் தண்டிப்பான்" என்று கூறினான்.

மற்ற அடிமைகள் ஆலப் கூறியதை மறுத்தனர்; முடிவில் அவனுடன் பந்தயமும் வைத்தனர். ஆலப்பும் அவர்கள் எஜமானனைக் கோபமுறச் செய்வதா யொப் புக்கொண்டான். அதில் அவன் தோற்றால் தனது பண்டிகை யுடையை அவன் கொடுத்துவிட வேண்டு மென்றும், ஜயித்தால் மற்றவர்கள் தங்கள் நல்லுடை களை அவனுக் களிக்கவேண்டு மென்றும் பேசிக் கொண்டனர். மேலும் அவர்கள் எஜமானன் அவனை விலங்கிட்டுச் சிறைப்படுத்தினால் அவனை விடுவித்துக் காப்பதென்றும் மற்றவர்கள் அவனுக்கு உறுதி யளித் தனர். பந்தயம் இங்ஙனம் ஏற்பாடானதும், மறு

நாட் காலையே அவர்கள் எஜமானனைக் கோபமுறச் செய்வதாக ஆலப் ஒப்புக்கொண்டான்.

ஆலப்பின் வேலை ஆடு மேய்ப்பது. அவன் வசம் விலையுயர்ந்த நல்ல ஜாதி ஆடுகள் பல விருந்தன. அவனது எஜமானனுக்கு அவற்றின் மீது மிகப் பிரியம். மறு நாட் காலை அவர்கள் எஜமானன் விலைமிக்க அவ்வாடுகளைத் தன்னைப் பார்க்க வந்தவர் சிலருக்குக் காண்பித்தற்காகப் பட்டிக்குள் அவர்களுடன் நுழைந்தான். ஆலப் அவனைக் கோப வெறி கொள்ளச் செய்யப் போவதற்கு அறிகுறியாகத் தனது நண்பர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அடிமைகள் யாவரும் திரண்டு கதவின் பக்கமாகவும் வேலி வழியாகவும் உள்ளே பார்க்கலாயினர். தன் வேலைக்காரனது திறமையைக் காண்பதற்காகப் பிசாசும் பக்கத்து மரமொன்றின் மீது ஏறிக் கொண்டது. எஜமானன் தனது விருந்தாட்களுக்கு அங்கே யிருந்த ஆடுகளையுங் குட்டிகளையுங் காண்பித்தவாறு அவ்விடத்தைச் சுற்றி வந்து தனது சிறந்த செம்மறியைக் காண்பிக்க நினைத்து, “இவ்வாடுகள் யாவையுஞ் சிறந்தனவே யெனினும் முறுங்கித் திருகிய கொம்புகளுடன் மதிக்கொணாததோர் செம்மறி யிருக்கிறது. அதை யென் கண்மணி யென நான் கருதியுளேன்” என்று சொன்னான்.

புது ஆட்களைக் கண்டு திடுக்கிட்ட ஆடுகள் பட்டிக்குள்ளே தாறுமாறாய் ஓடியபடியால், அவர்கள் அச்செம்மறியை நன்கு பார்க்க முடியவில்லை. அது

அமைதியாய் நின்றவுடன், ஆலப் தற்செயல் போல் ஆடுகளை மிரட்டி விட்டான். அவை கலைந்து கலந்து போனமையால், வந்தவர்கள் சிறந்த செம்மறி யெனக் கூறப்பட்டதைக் காண முடியவில்லை. இதை யெல்லாங் கண்ட எஜமானனும் அலுத்துப் போய், "அப்பா, ஆலப்! அந்தத் கொம்பு இறுகத் திருகிய செம்மறியை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பிடித்துச் சற்றே நிறுத்திக்கொள்" என்று அவனை வேண்டிக் கொண்டான்.

எஜமானன் இவ்வாறு கூறி முடிவதற்குள் ஆலப் ஆட்டு மந்தையினுட் சிங்கம்போற் பாய்ந்து அம்மதிக்கொணு மறியைக் கைப்பற்றி, அதன் மயிரை இறுகப் பிடித்து, இடது பின்காலை ஒரு கையாலே தூக்கித் தன் எஜமானன் கண் முன்னரே அதைக் குலுக்கினான். அந்தக் கால் காய்ந்த சுள்ளி போல் ஒடிந்தது. செம்மறி அலறிக்கொண்டு கீழே விழுந்தது. இடது கால் ஒடிந்து மடிந்து தொங்கிக் கொண்டிருக்க ஆலப் அதன் வலது காலைப் பற்றிச் சுழற்றினான்.

புதிதாய் வந்தவர்களும் அடிமைகளும் கலங்கித் திகைத்தனர். மரத்தின்மீ தமர்ந்திருந்த பிசாசு ஆலப் தன் வேலையை அவ்வளவு திறமையுடன் நிறைவேற்றி யது பற்றிக் களித்தது. எஜமானன் இடியென இருண்டு சினந்து தலையைத் தாழ்த்தினான். எவரும் ஏதும் பேசவில்லை. அனைவரும் என்ன நடக்கப் போகிறதோ என்று எதிர்பார்த்தவாறு மௌனமா

யிருந்தனர். சற்று நேரம் பேசாதிருந்த பின்னர் எஜமானன் ஏதோ வோர் சுமையை உதறித் தள்ளுவது போலத் தன்னைக் குலுக்கிக் கொண்டான். பிறகு அவன் தலையைத் தூக்கிக் கண்களை வானிற் செலுத்தியவாறு சற்றேயிருந்ததும் முகத்திலுற்ற சுருக்கங்கள் அமைந்தன. புன்னகையுடன் ஆலப்பைப் பார்த்து அவர், "ஆலப்! ஆலப்! உன் எஜமானன் என்னைச் சினமுறச் செய்யுமாறு உன்னை யேவினன். என் எஜமானனோ அவனினும் வலியவன். உன்னோடு எனக்கொன்றுங் கோபமில்லை; உன் எஜமானனையே நான் கோபமுறச் செய்வேன். நானுன்னைத் தண்டிப்பேனென்று பயந்து நீ தப்பிக்க விரும்புகிறாய். ஆலப்! நானுன்னைத் தண்டிக்கப் போவதில்லை. உன் விருப்பப் படியே, இதோ, என் விருந்தினர் முன்னிலையிலேயே உன்னை விடுவிக்கிறேன். எங்கே வேண்டுமானாலும் போ. உனது விடுநாளுடையையும் எடுத்துச் செல்" என்று கூறினன்.

தயை மிக்க அவ்வெஜமானன் விருந்தினருடன் வீட்டிற்குத் திரும்பினன். பிசாசு பற்களை நெறுநெறெனக் கடித்துக்கொண்டு மரத்தினின்று கீழே விழுந்து மண்ணிற் புதைந்தது.

5. குழந்தைகளும் பெரியோர்களும்

ஈஸ்டர் பண்டிகை ஆரம்பித்த சமயம். பனிக்கட்டி மேல் ரேக்ளா விடுவது அப்பொழுதுதான் ஓய் திருந்தது. முற்றங்களில் இன்னும் பனி விழுந்து கொண்டிருந்தது. பனிக்கட்டிகள் கரைந்ததில் ஜலம் கிராமத்துத் தெரு நீள சிறு சிறு ஓடைகளாக ஓடிக் கொண்டிருந்தது.

இரண்டு பண்ணை வீடுகளுக்கு நடுவே இருந்த சந்து ஒன்றில் வெவ்வேறு வீட்டிலிருந்து வெளி வந்த இரண்டு சிறு பெண்கள் சந்தித்துக்கொள்ள நேர்ந்தது. அங்கே அழுக்கு ஜலம் பண்ணைக் கொட்டில் வழியாக வந்து குளமாகத் தேங்கியிருந்தது. ஒரு சிறுமி மிகவும் சிறியவள்; மற்றொருவள் கொஞ்சம் பெரியவள். பண்டிகைக்காக அவர்களுடைய தாய்மார்கள் அவர்களுக்குப் புதுப் பாவாடை சட்டை அணிவித்திருந்தார்கள். சிறியவள் நீலப் பாவாடையும் பெரியவள் மஞ்சள் பாவாடையும் கட்டிக்கொண்டு இருந்தார்கள். தலையில் சிகப்பு கைக் குட்டைகள். அப்பொழுதுதான் கோவிலிலிருந்து திரும்பினார்கள். தங்கள் அலங்காரங்களை ஒருவருக் கொருவர் காண்பித்துக்கொண்ட பிறகு விளையாட ஆரம்பித்தார்கள். உடனே அந்தத் தண்ணீரை வாரி இறைக்க வேண்டுமென்று தோன்றிற்று அவர்களுக்கு. செருப்புக்

கால், புதுப் பாவாடை யுடனேயே அந்தக் குட்டை யில் இறங்குவதற்குப் போனுள் சின்னவள்.

"ஐயோ, அதில் அப்படி இறங்காதே, மலாஷா! உங்கம்மா வைவாள். நான் செருப்பையும் ஸாக்ஸை யும் கழட்டி விடுகிறேன், நீயும் கழட்டி விடு" என்ருள் பெரியவள்.

இருவரும் அந்தமாதிரி செய்து விட்டுத் தொங்கிய பாவாடை நுனியை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு குட்டையின் இரு பக்கங்களிலிருந்து ஒரு வரை நோக்கி ஒருவர் குட்டைக்குள் நடக்கலானுர் கள். மலாஷாவின் குதிகால்வரை ஜலம் வந்தவுடனே அவள் "ஆழமாக இருக்கிறதே, அகூல்யா! எனக்குப் பயமாக இருக்கிறதடி!" என்ருள்.

"வாடி, பயமொன்றுமில்லே. இனிமேல் ஆழம் இருக்காது!" என்ருள் மற்றவள்.

இருவரும் அருகில் வந்ததும் அகூல்யா மற்ற வளைப் பார்த்து "இதோ பார், மலாஷா, ஜாக்கிரதை, ஜலத்தை இறைத்து விடாதே!" என்ருள்.

அவள் சொன்னதுதான் தாமதம். மலாஷா காலைத் தூக்கிச் சொதெக்கென்று தண்ணீரில் வைத் தாள். அகூல்யாவின் சட்டை பூராவும் தண்ணீர் சிதறி விட்டது. அவள் கண்களிலும் மூக்கிலும் தண் ணீர்! தன் சட்டையில் அழுக்குத் துளிகளைக் கண்ட தும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. மலா ஷாவை அடிக்க ஓடினுள். மலாஷா பயந்து போனுள். தான் தப்பு செய்து அகப்பட்டுக் கொண்டதைக்

கண்டு, குட்டையிலிருந்து வெளியேறி வீட்டிற்கு ஓட முயன்றாள். அப்பொழுது அகூல்யாவின் தாயார் அந்தப்பக்கமே வர நேர்ந்தது. தன் மகளின் சட்டையும் சட்டைக்கையும் சேறு படிந்திருப்பதைக் கண்டு அவள், "ஏண்டி துஷ்டப் பீடை, என்ன பண்ணிக் கொண்டாய்?" என்று மகளை அதட்டினாள்.

"மலாஷா வேண்டுமென்று செய்துவிட்டாள் அம்மா!" என்றாள் அவள்.

அதைக் கேட்டதும் அகூல்யாவின் தாயார் மலாஷாவைப் பிடித்துக் கழுத்தில் பின்புறமாக அடித்தாள். தெரு பூராவும் கேட்கும்படி மலாஷா உரக்க அழ ஆரம்பித்தாள். அவள் தாயார் வந்து சேர்ந்தாள்.

"என் குழந்தையை எதுக்கடி அடிக்கிறாய்?" என்று அவள் தன் அண்டை வீட்டுக்காரியை வைய ஆரம்பித்தாள். வார்த்தைக்கு மேல் வார்த்தையாக வளர்ந்து சண்டையில் வந்து முடிந்தது. ஆண் பிள்ளைகள் வந்து சேர்ந்தார்கள்; கூட்டம் கூடி விட்டது. ஒரே சத்தம், இரைச்சல். ஒருவர் சொன்னதை மற்றொருவர் காதில் போட்டுக்கொள்ளாமல் கத்தினார்கள். சண்டை வலுத்து ஒருவரையொருவர் தாக்கக் கூட முயன்றுவிட்டார்கள். அப்பொழுது அகூல்யாவின் பாட்டி அங்கே வந்து சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

"என்னவென்று நினைத்து இப்படிச் சண்டையிடுகிறீர்கள்? இந்த மாதிரி உண்டா? அதிலும் இன்று பண்டிகையன்று? சந்தோஷமாக இருக்க

வேண்டிய தினம். இந்த மாதிரி முட்டாள் தனம் உண்டா?"

ஆனால் கிழவி வார்த்தை அவர்கள் காதில் ஏற வில்லை. அவளையே கீழே தள்ளிவிட இருந்தார்கள். அகூல்யாவும் மலாஷாவும் அங்கே இல்லாவிட்டால் கிழவிகூட அந்தச் சண்டையை நிறுத்தியிருக்க முடியாது. பெண்டுகள் ஒருவரையொருவர் ஏசிக்கொண் டிருந்தபோதே அகூல்யா தன் சட்டையிலிருந்த சேற் றைத் துடைத்துவிட்டு குட்டைக்குத் திரும்பிப் போய் விட்டாள். ஒரு கல்லை எடுத்து குட்டைத் தண்ணீர் வெளியில் போக சிறு வாய்க்கால் ஒன்றைத் தோண் டினாள். உடனே மலாஷா அவளுடன் சேர்ந்து கொண்டாள். சின்ன மரக்கட்டை யொன்றை எடுத்துக்கொண்டு தானும் அந்த வாய்க்காலைத் தோண்ட ஆரம்பித்தாள் அவளுடன். ஆண் பிள்ளை கள் கைகலக்க ஆரம்பித்தபொழுது சிறுமிகள் தோண் டின வாய்க்கால் வழியாக குட்டை ஜலம் வெளியே றித் தெருவில் ஓடி அவர்கள் நின்றிருந்த இடத்திற்கே போய்விட்டது. சிறுமிகள் ஜலத்துடனேயே அங்கே போய்ச் சேர்ந்தார்கள்— இருவரும் இரு பக்கத்திலு மாக, அதைத் கவனித்துக்கொண்டே.

"அதைப் பிடி மலாஷா, அதைப் பிடிடீ!" என்று கூச்சலிட்டாள் அகூல்யா; மலாஷா சிரித்த சிரிப்பில் அவளால் பேச முடியவில்லை.

வெகு உற்சாகத்துடன் தண்ணீரில் மிதந்த மரக் கட்டையைப் பார்த்துக்கொண்டே சிறுமிகள் அந்தக்

கூட்டத்திற்குள்ளேயே புகுந்துவிட்டார்கள். கிழவி அவர்களைப் பார்த்துவிட்டு ஆண் பிள்ளைகளைப் பார்த்து "உங்களுக்கு வெட்கமாக இல்லையா? குழந்தைகளே எல்லாம் மறந்து சேர்ந்து விளையாடிக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்காக நீங்கள் சண்டை யிடுகிறீர்கள்! சின்னஞ் சிறு பிரகிருதிகள்! உங்களைக் காட்டிலும் அவர்கள் நிரம்ப புத்திசாலிகள்!" என்றாள்.

சண்டையிட்டுக்கொண் டிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். குழந்தைகளைக் கண்டு வெட்கிப் போனார்கள். தங்களைத் தாமே ஏளனம் செய்து கொண்டே உள்ளே போனார்கள்.

"நீங்கள், மனம் மாறி, சின்னக் குழந்தைகளானால் தவிர உங்களுக்கு சுவர்க்கத்தில் நுழைய வழி கிடையாது!"

6. வருந்தித் திருந்தியவன்

"வள்ளலே! தாங்கள் அரசுரிமை யேற்கும் போது என்னை மறவாதீர்" என்றொருவன் ஏசுநாதரிடம் சொன்னான். "இன்றே நீ என்னுடன் ஈச சாம்ராஜ்யத்தி லிருப்பது உறுதி" யென ஏசுநாதர் அவனுக்கு விடையருளினர். XXIII 42,44.

ஏழுபதாண்டு உலகிற் பிழைத்திருந்த ஒருவன் அக்கால மனைத்தையும் பாவத்திலேயே போக்கிவிட்டான். நோய்வாய்ப்பட்டும் அவன் பச்சாதாப முறவில்லை. உயிர் பிரியும் இறுதிக் கணத்திலேதான் அவன், "இறைவ! சிலுவை மீதிருந்த திருடனுக் கிரங்கியவாறே எனக்கும் நீ இரங்காயோ!" என்றழுதான்.

இச்சொற்களுடன் அவனுயிர் உடலை விட்டகன்றது. அப்பாவியின் ஆத்மா ஈசபக்தி பூண்டு, அவனருளில் நம்பிக்கை கொண்டு, வானுலகின் வாயிலுற்று, தேவ சாம்ராஜ்யத்திலே தன்னையுஞ் சேர்த்துக் கொள்ளவேண்டிக் கதவைத் தட்டினான்.

"கதவைத் தட்டுவது யார்? அவன் ஜீவிய வரலாறென்ன?" என்று உள்ளே யிருந்து ஒரு குரல் கேட்டது. குற்றஞ் சாட்டுவோனது குரல் அம்மனிதனது தீய செயல்க ளனைத்தையும் ஒன்றுவிடாது கூறியது; நற்செய லெதையும் நவிலவில்லை. அதைக்

கேட்டதும் உள்ளேயிருந்து வந்த குரல் "பாவிகள் ஈச சாம்ராஜ்யத்தில் நுழையொணாது, போ!" என்றது.

அதற் கம்மனிதன், "பிரபுவே! தங்கள் குரல் கேட்கிறதே யன்றி முகங் காணப்படவில்லை; தாங்கள் யாரென்றுந் தெரியவில்லை" என்றான். "நான் ஈச சாம்ராஜ்யத்தின் மந்திரி பீடர்!" என்று அக்குரல் விடையளித்தது.

அதைக் கேட்ட பாபாத்மா, "தேவ மந்திரி பீடரே! மனிதனது பலவீனத்தையும் கடவுளின் அருளையுங் கருதி என்மீது இரக்கங் கொள்ளுங்கள். தாங்கள் கிறிஸ்துவின் சீடரல்லவா! அவர் வாய் மலர் அருளிய உபதேசங்களைக் கேட்டும் அவர் தம் வாழ்க்கை யுதாரணத்தை நேரிற் கண்டு மிருக்கிறீர்களே! அவர் வருத்தமும் வியாகூலமும் உற்றபோது விழித்திருந்து பிரார்த்திக்குமாறு தங்களை மும்முறை கேட்டுக்கொண்டும், மும்முறையுந் தாங்கள் கண்ணிருண்டு கனத்ததனாலே தூங்கியே போனதை நினையுங்கள். என் சமாசாரமும் அதுவே. உயிருள்ள மட்டும் விசுவாசம் மாறாதிருப்பதா யுறுதி கூறியிருந்தும், தாங்கள் அவர் கயபாஸ்முன் இட்டுச் செல்லப் பட்டபோது மும்முறையும் அவரைக் கைவிட்டீர்கள் என்பதையும் நினைந்து பாருங்கள். என் வரலாறும் அத்தகையதே. கோழி கூவியதும் தாங்கள் வெளிச் சென்று மனம் புழுங்கி அழுதீர்க ளென்பதையும் நினைவு கூருங்கள். என் நிலைமையும் அதுவே யாதலின்

என்னைத் தாங்கள் உள்ளேவிட மறுப்பது தகுதி யன்று" என்று மன்ருடினான்.

கதவின் மறைவிலிருந்த குரல் ஒன்றும் பேச வில்லை.

அம்மனிதன் அங்கே சற்று நின்று மறுபடியுங் கதவைத் தட்டி ஈச சாம்ராஜ்யத்தி னுள்ளே தன்னை நுழைய விடுமாறு வேண்டலானான்.

"இவன் யார்? இவனது பூலோக வாழ்க்கை வரலா றென்ன?" என்று கதவின் பின்னிருந்து மற்றோர் குரல் கேட்டது.

குற்றஞ் சாட்டுவோனது குரல் முன்போன்றே அவனது தீமைகளையெல்லாம் நிகழ்த்தியது; நற்செய லெதையும் விளம்பவில்லை.

"அப்பாலே போ! இத்தகைய பாவிகள் வானுல கில் எங்களுடன் வசித்த லாகாது" என்று கதவின் பின்னிருந்து வந்த குரல் கூவியது.

பாபாத்மா, "பிரபுவே! தங்கள் குரல் கேட்கிற தேயன்றி வடிவங் காணப்படவில்லை; தாங்கள் யாரென்றுந் தெரியவில்லை" என்றான்.

"நான் அரசனும் தீர்க்கதரிசியுமான தாவீது" என்று அக்குரல் விடையளித்தது.

பாபாத்மா கலங்கவில்லை; கதவருகேயே நின்று, "தாவீத் மன்னவ! என்மீது தயை கூருங்கள். மனி தனது பலவீனத்தையும் இறைவ னருளையும் நினையுங் கள். கடவுள் தங்கள்மீது அன்புகூர்ந்து தங்களை மனிதரிற் சான்றோ னாக்கினார். தாங்கள் அரசு, சீர்,

சிறப்பு, செல்வம், மனைவியர் குழந்தைகள் முதலாம் எல்லா நலன்களும் பெற்றிருந்தீர்கள். ஆயினும் தங்கள் வீட்டு மேன்மாடியி லிருந்து ஓர் ஏழையின் மனைவியைக் கண்டு, பாவசிந்தனை யுற்று, அவளைக் கவர்ந்து (அவள் கணவனுன) உரியாவை அம்மனையுட் கத்தியாற் கொன்றீர்கள். செல்வரான தாங்கள் ஓர் ஏழையின் ஒரே காதன் மனையாளை அபகரித்து அவனைக் கொன்றீர்கள். நானும் அவ்வாறு செய்திருக்கிறேன். "செய்த பாவத்திற் கிரங்கி எனது அதிக்கிரமங்களை ஒப்புக்கொள்கிறேன். என் பாவம் எப்போதும் என்முன்னிற்கின்றது" என்று தாங்கள் சொன்னீர்க ளல்லவா! நானும் அவ்வாறே இரங்குகிறேன். ஆதலின் என்னைத் தாங்கள் உள்ளேவிட மறுத்தல் கூடாது!" என்று சொன்னுன்.

கதவுக் குள்ளிருந்து வந்த குரல் சும்மா விருந்தது. அப்பாபாத்மா சற்று நேரம் நின்ற பிறகு, மீண்டுங் கதவைத்தட்டி ஈச சாம்ராஜ்யத்தி னுள்ளே தன்னை விடுமாறு வேண்டினுன்.

கதவின் மறைவிலிருந்து வேருேர் குரல், "யாரிவன்? பூமியில் இவன் எத்தகைய வாழ்வு நடத்தினுன்?" என்று வினவியது.

குற்றஞ் சாட்டுவோனது குரல் மூன்றும் முறையும் அப் பாவியின் தீமைகளை எடுத்துக் கூறியதே யன்றி நற்செய லெதையுஞ் சொல்லவில்லை.

கதவி னுள்ளிருந் துற்றகுரல், "தொலையே போ! பாவிகள் வானரசிற்குள் வரக்கூடாது" என்றது.

"தங்கள் குரலைக் கேட்கிறேன்; தங்கள் முகமும் பெயரும் எனக்குத் தெரியவில்லை" என்றான் பாபாத்மா.

"நான் கிறிஸ்துவின் பிரிய சிஷ்யனான வானவன் ஜான்" என்று அக்குரல் விடை யிறுத்தது.

பாபாத்மா மகிழ்வுற்று, "இப்போது நான் உள்ளே நுழைய அனுமதி பெறுதல் உறுதி. பீடரும் தாவீதும் மனிதனது பலவீனத்தையும் கடவுளின் அருளையும் அறிவராதலின் என்னை உள்ளே விடவேண்டும்; தாங்களோ பேரன்புடைமையால் என்னை உள்ளே விடுவீர்கள். 'அன்பே கடவுள்' என்றும் 'அன்பில்லாதவன் கடவுளை யறியான்' என்றும் எழுதியது தாங்களன்றோ! ஜான்! வானவரே! முதிர்ந்த வயதிலே தாங்கள், "சகோதரர்களே! ஒருவரோடொருவர் அன்பு பூண்டொழுகுமின்" என்று மாந்தர்க்கு உரைத்தீர்களே! இப்பொழுதென்னைத் தாங்கள் வெறுப்புடன் பார்த்து விரட்டவும் முடியுமோ? ஒன்று தாங்கள் கூறியுள்ளதைத் தாங்களே மறுக்க வேண்டும்; அல்லது என்பால் அன்புகூர்ந்து என்னை ஈச சாம்ராஜ்யத்துட் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

வானரசு வழி திறந்தது. தன் பிழைக்கிரங்கிய பாவியை ஜான் மகிழ்வுடனே தழுவித் தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.

---

7. உழைப்பும் சாவும் நோயும்

தென் அமெரிக்க இந்தியர்களிடையே பின் வரும் வரலாறு கர்ண பரம்பரையாய்ப் பரவி யிருக்கிறது. மனிதனைக் கடவுள் முதன் முதலில் வேலை செய்யும் அவசியமின்றியே படைத்திருந் தாராம். வீடு, உடை, உணவு எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. அவர்கள் யாவரும் நூறு வயது நோயறியாது பிழைத்திருந்தனர்.

சில காலத்திற்குப்பின், மாந்தர் எவ்வாறு வாழ் கின்றனரென்று பார்த்தார் கடவுள். அவர்கள் சந்தோ ஷமாய் வாழாது, சுயநலம் பாராட்டி, ஒருவரோ டொருவர் சண்டையிட்டு, வாழ்க்கையின் இன்பத் தைத் தொலைத்து, அதையோர் நரகமெனும் நிலைமைக் குக் கொணர்ந்து விட்டனர்.

தனித்தனியே சுயநல வாழ்வு வாழ்வதனாலன்றோ இவ்வாறு நேர்ந்து விட்டதெனக் கருதிக் கடவுள் அதை மாற்றும் நோக்கத்துடன், மனிதர் வேலை செய்யாது பிழைத்திருப்பது அசாத்தியமென்னும் நிலைமையை நிறுவினார். குளிரில் நடுங்கா திருப்பதற்காக வீடு கட்டிக்கொள்வதும், பசித் துன்பத்தை யொழிப்பதற் காக நிலத்தைத் திருத்திப் பயிர்களையும் பழங்களையும் உற்பத்தி செய்வதும் அவசியமாயின.

வேலைக்கு வேண்டிய கருவிகளைச் செய்தல், மரங்களை யறுத்துக்கொண்டு போய்ச் சேர்த்தல், வீடு

கட்டுதல், பயிர் செய்தல், அறுவடை, நூற்றல் நெய்தல் முதலாம் எல்லா வேலைகளையும் ஒவ்வொருவனும் தனக்குத்தானே தனியே செய்ய முடியாது. ஆதலின் உழைப்பு இவர்களை ஒன்று சேர்க்கும்; முழு மனத்துடன் ஒன்றுபட்டு உழைக்கவுழைக்கத் தேவையானவற்றை நிறையப் பெற்றுச் செழித்திருக்கலா மென்றுணர்ந்து இவர்கள் ஒத்து வாழ்வர் என நினைத்தார் கடவுள்.

சிறிது காலஞ் சென்றபின், மனிதர் எவ்வாறு வாழ்கின்றனர், சந்தோஷமா யிருக்கின்றனரா என்று பார்ப்பதற்கு வந்தார் கடவுள். மாந்தரின் வாழ்க்கை முன்னிலுஞ் சீர்கெட்டிருந்தது. வேறு வழியின்மையினால் அவர்கள் சேர்ந்து வேலை செய்தனர். ஆனால் அங்கேயும் முற்றிலும் ஒன்று சேராது தனித்தனிக் கூட்டங்களாய்ப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு கூட்டமும் மற்றவைகளை வேலைவாங்க முயன்று, பரஸ்பரம் இடையூறு விளைவித்துக்கொண்டும், நேரத்தையுந் திறமையையும் வீணுக்கிச் சண்டையிட்டுக்கொண்டும் இருந்தது. ஆகவே அவர்கள் அனைவரும் சீர் கெட்டனர்.

இதைக் கண்ணுற்ற கடவுள், தனது சாவு எப்பொழுதென்று தெரியாமல் எக்கணமேனும் இறந்து போகக்கூடிய நிலைமையை மனிதரிடை நிறுவி அதை அவர்களுக்குத் தெரிவித்தலும் செய்தார். எக்கணமேனும் எவர்க்கும் சாவு நேரலாம் என்றிருந்தால், நொடியில் அழியும் இலாபங்களைக் குறித்துத்

தங்கள் சொற்ப வாழ்நாளை அவர்கள் வீணாக்க மாட்டார்கள் என்றெண்ணினார் கடவுள்.

ஆனால் விஷயம் தலைகீழாகிவிட்டது. மாந்தர் வாழ்க்கையின் போக்கைப் பார்க்கக் கடவுள் மீண்டும் வந்தபோது அது எப்போதும் போலவே சீர்குலைந் திருந்தது.

மனிதர் எக்கணமும் சாகலாமென்னும் நியதி யைப்பற்றிப் பலமிக்கோர் தம்மினும் எளியவர்களிற் சிலரைக் கொன்றும், பிறரைப் பயமுறுத்தியும் அடக்கி யாளத் தொடங்கினர். அதனால் பலமிக்கவர்களும் அவர்கள் சந்ததியும் வேலையைத் துறந்து சோம்பலாற் களைத்து வருந்தினர். ஒவ்வொரு கூட்டத்தினரும் மற்றைக் கூட்டத்தினரைக் கண்டு பயமும் வெறுப்பு முற்றனர். மனித வாழ்வு இன்னும் துக்கமய மாயிற்று.

இதையெல்லாம் பார்த்த கடவுள் மனிதரைச் சீர்திருத்துவதற்காக முடிவானதோர் முறையைக் கையாண்டார். அதாவது பல்வகை நோய்களை மனிதரிடை ஏவினார். யாரும் நோய்வாய்ப் படக் கூடிய நிலைமையில், ஆரோக்கியமா யிருப்பவர்கள் நோயாளர்க்கு இரங்கி யுதவிபுரிய வேண்டுமென்றும், அப்போதுதான், தாங்கள் அசௌக்கியப் படும் போது சௌக்கியமா யிருக்கும் பிறர் தங்களைக் கவனிப்பார்களென்றும் மனிதர்கள் உணர்வர் என்று கடவுள் நினைத்தார்.

நோய்களை யுண்டாக்கிச் சென்றபின், கடவுள்

மீண்டும் மனித வாழ்க்கையின் கதியைப் பார்க்க வந்தார். அது முன்னிலும் மிகக் கெட்டிருந்தது. ஒற்றுமையை யுண்டாக்குமென்னும் உத்தேசத்துடன் கடவுள் உண்டாக்கிய நோய் அவர்களை முன்னிலும் அதிகமாய்ப் பிரித்துவிட்டது. பலிஷ்டர்களாய் பிறரை வேலை வாங்கிவந்தவர்கள் தாங்கள் நோயுற்ற போது தங்களுக்கு அவர்களை குற்றேவல் செய்யு மாறு நிர்ப்பந்தித்தனர். ஆனால் அவர்கள் நோயுற்ருலோ, தாங்கள் முறைப்படி அவர்களைக் கவனிப்ப தில்லை. பிறருக்காக வேலை செய்யுமாறும், நோயுற்ற போது அவர்களைக் கவனிக்குமாறும் வற்புறுத்தப் பட்ட எளியவர்கள் அதிக வேலையினுற் களைத்துப் போனதனுல் தங்களுக்குள் நோய்வாய்ப்பட்டோரைக் கவனிக்க நேரமின்றி அவர்களைக் கதியிலிகளாய் விட நேர்ந்தது. நோயாளரைக் காண்பதனுலே தங்கள் சுகபோக வாழ்க்கையின் சுவை குன்ருதிருப்பதின் பொருட்டுப் பணக்காரர் இவ் எளிய மக்கள் நோயால் வருந்திச் சாவதற்கென விடுதிகள் ஏற்படுத்தினர். அங்கே அவ்வேழைகள் தங்களிடம் அநுதாபங் காட்டி மகிழ்விக்கக்கூடிய ஆப்தர்களை விட்டுப் பிரிந்து, தயை சிறிதுமின்றி அருவருப்புடன் பணி செய்யும் கூலியாட்களிடையே கிடக்கவேண்டும். மேலும் பல நோய்கள் தொத்து வியாதிகளென்று கருதப்பட்டமையால் மனிதர்கள் அந்நோயாளரைத் தவிர்த்தலோடு நில்லாது, அவர்களுக்குப் பணி செய்வோரைக்கூடத் தவிர்த்தனர்.

இன்பம் எதனிலிருக்கிறதென்பதை இவ்வுபாயத்தினுற்கூட மாந்தர் உணர்கிலரெனில், படாதபாடெல்லாம் பட்டுத் தெளியட்டும் என்று மனிதர்களைக் கடவுள் விட்டுவிட்டார்.

இவ்வாறு நிர்க்கதியாய் விடப்பட்ட மாந்தர் தாங்கள் இன்பவாழ்வு வாழ வேண்டுமென்றும், வாழலாமென்றும் உணர வெகுகால மாகிவிட்டது. மிகச் சமீப காலத்திலேயே அவர்களிற் சிலர் உழைப்பென்பது சிலருக்குப் பயந்தோடவேண்டிய பூதமாகவும், வேறு சிலருக்குத் தீவாந்தர சிக்ஷையாகவும் இருத்தல் கூடாதென்றும், அது எல்லோரையும் ஒன்று சேர்த்து மகிழ்விக்கும் பொதுப் பொழுது போக்கென்றும் உணரத் தொடங்கியுளர். நம்மில் யார் எந்நேரம் சாவோமென்னும் நிச்சயமில்லா நிலைமையில், ஒவ்வொருவனும் தனக்கு விதிக்கப்பெற்ற ஆண்டு, மாதம், மணி, நிமிஷம் ஒவ்வொன்றையும் ஒற்றுமையிலும் அன்பிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று உணரத் தொடங்கியுளர். நோயின் நோக்கம் நம்மை ஒருவரைவிட்டு ஒருவரைப் பிரிப்பதல்ல ; ஒருவரோடொருவர் அன்புடன் கலத்தற்குரிய சந்தர்ப்பமே அதுவென்று உணரத் தொடங்கியுளர்.

---

8. மூன்று வினக்கள்

"ஒவ்வொரு காரியத்தையும் தொடங்குதற் குரிய சரியான காலம் எது? எவரது சொல்லைக் கேட்பது, எவர்களைத் தவிர்ப்பது? எல்லாவற்றிலும் மிக முக்கியமான வேலை யெது—என்னும் இம்மூன்று விஷயங்களும் எப்போதும் எனக்கு நன்கு தெரியுமாயின், நான் ஆரம்பிக்கும் எக்காரியமும் தோல்வி யுருது" என்றெண்ணினன் ஓர் அரசன். ஆகவே, இவ்வினக்களுக்குக் தக்க விடைகளைத் தனக்குக் கற்பிப்பவனுக்குப் பெரிய பரிசு கொடுப்பதாகத் தனது நாடு முழுவதும் அவன் விளம்பரஞ் செய்வித்தான்.

அறிஞர் பலர் அரசனிடம் வந்தனர். ஆனல் அவர்தம் விடைகள் பல திறப்பட்டனவா யிருந்தன. வருஷ மாத தினக் குறிப்பொன்று முன்னதாகவே வைத்துக்கொண்டு, வழுவாது அதன்படியே நடந்து வருதலே ஒவ்வொரு காரியத்தையும் செய்வதற்குரிய சரியான காலத்தை அறியும் உபாயம் என்றனர் சிலர். ஒவ்வொரு வேலைக்கும் உரிய நேரத்தை முன்னதாகவே நிர்ணயித்தல் அசாத்திய மென்றும், ஆதலால் வீண்காலப் போக்கிற்கு இடங் கொடாது, நடப்பன அனைத்தையும் எப்போதும் நன்கு கவனித்து அவசியமானவைகளை அவ்வப்போது செய்யவேண்டும் என்றனர் பிறர். நாட்டு நடப்பை அரசன் எவ்வளவு கூர்ந்து

கவனித்தாலும் ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய காலத்தைச் சரிவர ஒருவனே தீர்மானித்தல் முடியா தென்றும், ஆதலின் அறிஞர்களின் சபை யொன்றைக் கொண்டு அதை நிர்ணயிக்க வேண்டுமென்றும் மற் றும் சிலர் புகன்றனர்.

ஆனல், சபை கூடும் வரை தள்ளிவைக்க முடி யாத சில விஷயங்க ளிருக்கின்றன; அவற்றைச் செய்வதா வேண்டாமா என்று உடனே முடிவு செய் தாக வேண்டும், இவ்வாறு முடிவுசெய்ய, இனிவரப் போவது முன்னதாகவே தெரிந்திருத்தல் வேண்டும். மாந்திரிகர்களுக்கே அது தெரியுமாதலின், ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டிய தக்க சமயத்தை அவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றனர் வேறு சிலர்.

அவ்வாறே இரண்டாங் கேள்விக்கும் பல்வேறு விடைகள் வந்தன. மந்திராலோசனை சபையாரே அரச னுக்கு மிகவும் அவசியமானவர்களென்று சிலரும், புரோகிதர்களே யெனப் பிறரும், வைத்தியர்களே யென மற்றவர்களும், போர் வீரர்களே மிகவும் அவ சியமானவர்களென இன்னுஞ் சிலரும் இயம்பி னர்.

மிக முக்கியமான வேலை எது வென்னும் மூன் ருங் கேள்விக்குச் சிலர் இவ்வுலகிற் கலைஞானமே மிக முக்கியமான தென்றும், வேறு சிலர் போர்த்திற னென்றும், மற்றவர்கள் வந்தனை வழிபாடுக ளென் றும் பகர்ந்தனர்.

விடைகள் பலதிறப்பட்டனவா யிருத்தல் கண்டு அரசன் அவற்றுள் எதனையும் ஒப்பவில்லை; யார்க்கும் பரிசளிக்கவுமில்லை. ஆயினும் தனது வினாக்களுக்குத் தக்க விடைகளை அறிய விரும்பியவனாய்ச் சிறந்த ஞானியெனப் புகழ் பரவிய முனிவர் ஒருவரிடம் ஆலோசிப்பதெனத் தீர்மானித்தான்.

அம்முனிவர் ஓர் காட்டில் வசித்திருந்தார்; அதைவிட்டு வேறெங்கும் அவர் செல்வதில்லை; சாதாரண மக்களைத் தவிர வேறெவருடனும் பழகு வதுமில்லை. ஆதலின் அவ்வரசன் எளியவுடை பூண்டு புறப்பட்டான்; முனிவரது ஆசிரமத்தை அணுகு முன்னரே குதிரையை விட்டிறங்கி, மெய்க்காப்பாளர் களையும் அங்கேயே நிறுத்திவிட்டுத் தனியே அவரிடஞ் சென்றான்.

அரசன் அங்கே சென்றபோது, முனிவர் தமது குடிலின் முற்புறத்து நிலத்தைக் கொத்திக் கொண் டிருந்தார். அரசனைப் பார்த்து முகமன் கூறியதும், மீண்டும் அவர் தமது வேலையைத் தொடர்ந்தார். முனிவர் இளைத்து மெலிந்திருந்தமையால் மண்வெட்டி யின் ஒவ்வொரு கொத்திலும் பெருமூச்சு வாங்கினார்.

அரசன் அவரை நோக்கி, "ஞானதீரரே! மூன்று வினாக்களுக்கு விடைகளைத் தங்களிடம் தெரிந்துகொள்வதற்காக வந்திருக்கிறேன். (1) இன்ன காலத்தில் இன்ன செய்வதென நான் எவ்வாறு அறி வது? (2) எனக்கு இன்றியமையாதவர் யாவர்? அதுபற்றி, மற்றவரினும் யாரை நான் அதிகமாகக்

கவனிக்க வேண்டும்? (3) முதன் முதலாக நான் கவனிக்கவேண்டிய மிக முக்கியமான காரியம் எது?—என்னும் இவைகளே அக்கேள்விகள்" என்று மொழிந்தான்.

அரசன் கூறியதை முனிவர் செவியுற்றும் விடையேதும் அளிக்கவில்லை; உள்ளங் கையை எச்சிலால் நனைத்துக்கொண்டு, மீண்டும் நிலத்தைக் கொத்தத் தொடங்கினர்.

"தாங்கள் களைத்து விட்டீர்கள்; நான் சற்றுக் கொத்துகிறேன்" என்றான் அரசன்.

முனிவர் நன்றியறிதலுடன் மண்வெட்டியை அரசனிடங் கொடுத்து, அருகே உட்கார்ந்தார். இரண்டு பாத்திகள் வெட்டியானதும், அரசன் சற்றே நின்று, தனது வினாக்களை மீண்டும் கேட்டான். அதற்கும் முனிவர் விடையருளாமலே எழுந்து கையை நீட்டி மண்வெட்டியை வாங்கி, "நீ சற்றுக் களைப்பாறு; நான் சிறிது வேலை செய்கிறேன்" என்றார்.

ஆனல் அரசன் மண்வெட்டியை அவரிடங் கொடாது, தானே தொடர்ந்து கொத்தினான். இவ்வாறு இரண்டு மணி நேரஞ் சென்றது. மரங்களுக்கும் பின்னே சூரியன் மறையத் தொடங்கவே, அரசன் மண்வெட்டியைப் பூமியிலூன்றி முனிவரை நோக்கி, "பெரியாரே! என் கேள்விகளுக்கு விடை நாடித் தங்களிடம் வந்தேன்; எதனையுங் கூறத் திருவுள மின்றேல் விடைபெற்றுக்கொள்கிறேன்" என்றான்.

"அதோ! யாரோ இவ்விடம் ஓடிவருகிருற் போல் இருக்கிறதே! யாரென்று பார்ப்போம்" என்ருர் முனிவர்.

அரசன் திரும்பிப் பார்த்ததும், காட்டிலிருந்து வெளியே தாடியாள் ஒருவன் ஓடிவருவதைக் கண்டான். அவன் தன் வயிற்றைக் கைகளால் அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்க, அதன் கீழே இரத்தம் ஒழுகிக்கொண் டிருந்தது. அவன் அரசனை அணுகியதும் முக்கி முனகிக்கொண்டு மூர்ச்சை யற்றுக் கீழே விழுந்தான். அரசனும் முனிவரும் அவனது ஆடையைத் தளர்த்தி, அவன் வயிற்றில் பெரிய காயமிருந்ததைக் கண்டனர். அரசன் அக்காயத்தை முடிந்த மட்டும் நன்ருய்க் கழுவித் தன் கைக்குட்டையையும் முனிவரது துண்டையுங்கொண்டு அதன் மீது கட்டுப் போட்டான்; அப்பொழுதும் இரத்த வொழுக்கு நில்லாததனுல், இரத்தம் தோய்ந்த கட்டை மீண்டும் மீண்டும் அகற்றிக் கழுவிக் கட்டினுன். முடிவில் இரத்தப் பெருக்கு நின்றதும், அம்மனிதன் உணர்வுற்றுத் "தாகமா யிருக்கிற" தென்ருன். அரசன் அவனுக்குத் தண்ணீர் கொடுத்தான். இதற்குள் சூரியன் அஸ்தமித்துப் பொழுது குளிர்ந்தது. அரசனும் முனிவரும் அவனைக் குடிலினுள்ளே தூக்கிச் சென்று படுக்கவைத்தனர். அவன் கண்ணை மூடி அமைதியாய்ப் படுத்தான். அரசனே நடையாலும் அன்றை வேலையினுலும் மிகக் களைத்து வாயிலண்டையிலேயே ஒதுங்கிப் படுத்து உறங்கிவிட்டான். இரவு

முழுதும் நல்ல தூக்கம். நொடியில் பொழுது புலர்ந்து விட்டது. அரசனும் எழுந்தான். அவனுக்குத் தான் இருப்பதெங்கே யென்றும், படுக்கையிற் படுத்தவாறு சுடர்நோக்குடன் தன்னை உற்று நோக்கிக்கொண்டிருந்த புதிய தாடியாள் யாரென்றும் உணர வெகு நேரமாகிவிட்டது.

அரசன் விழித்தெழுந்து தன்னைப் பார்ப்பதைக் கண்டதும், தாடியாள், "என்னை மன்னிக்க வேண்டும்" என்று எளிய குரலில் பிரார்த்தித்தான்.

"நீ யாரப்பா? உன்னை நான் மன்னிப்பதாவது! நீ என்ன செய்தாய்?" என்று கேட்டான் அரசன்.

"தங்களுக்கு என்னைத் தெரியாதெனினும், தங்களை நான் அறிவேன். என் சகோதரனை மாய்வித்து, அவனுடைமையைக் கைப்பற்றிய தங்கள்மீது பழிக்குப் பழி வாங்கச் சபதமிட்டுக்கொண்ட தங்கள் பகைவன் யான். முனிவரைக் காணத் தாங்கள் தனித்துச் சென்றிருப்பதை யறிந்து, திரும்பும் வழியிலே தங்களைக் கொல்லத் துணிந்திருந்தேன். பொழுது விழுந்தும் தாங்கள் திரும்பவில்லை. தங்களைக் கண்டு பிடித்தற்காக மறைவிலிருந்து நான் வெளியேறியதும், அங்கே யிருந்த தங்கள் மெய்க்காப்பாளர் என்னை அடையாளங் கண்டு சரேலெனக் குத்திக் காயப் படுத்தி விட்டனர். அவர்களிடமிருந்து தப்பி யோடி வந்த என் காயங்களைத் தாங்கள் ஆற்றியிராவிடில் இரத்தங் கொட்டிச் செத்திருப்

பேன். தங்களை நான் கொல்லக் கருதி யிருந்தேன்; தாங்களோ என்னுயிரைக் காத்தீர்கள். இனி நான் பிழைத்திருந்தால், தங்கள் விருப்பின்படி தங்களுக்கு அடிமை பூண்டு ஊழியஞ் செய்வேன்; என் மக்களும் அவ்வாறே யொழுகச் செய்வேன்" என்று தாடியாள் விடையளித்து, அரசனிடம் மன்னிப் பிறைஞ்சினான்.

அரசனும் தன் பகைவனுடன் அவ்வளவு எளிதிற் சமாதான முற்றதோடு, அவனை நண்பனாக வும் பெற்றதுபற்றிப் பெரு மகிழ்ச்சிகொண்டு அவனை மன்னித்தான். மேலும் தன் வேலையாட்களை யும் வைத்தியனையும் அவனைக் கவனித்துக்கொள்வ தற்கு அனுப்புவதாகவும், அவனுடைய சொத்தை மீண்டும் அவனுக்கே யளிப்பதாகவும் கூறினான்.

அரசன் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்து, திரும்பிப் போகுமுன் தன் கேள்வி களுக்கு விடையை மீண்டும் ஒரு முறை கேட்க விரும்பி, முனிவரெங்கே யென்று சுற்றிலும் பார்த் தான். முனிவர் முந்திய நாள் கொத்திய பாத்திகள் நடுவே மண்டியிட்டு விதை நட்டுக்கொண் டிருந்தார்.

அரசன் அவரையணுகி, "பெரியாரே, என் கேள்விகளுக்கு விடை தருமாறு தங்களைக் கடைசி யாக வேண்டிக்கொள்கிறேன்" என்றான்.

தன் முன்னின்ற அரசனை முனிவர் மண்டியிட்ட வாறே உயர நோக்கி, "ஏற்கனவே விடையளித் தாயிற்றே" என்றார்.

"தாங்கள் சொல்வது புரியவில்லையே! விடை எங்கே சொன்னீர்கள்?" என்றான் அரசன்.

"என்ன இதுகூடத் தெரியவில்லையா! நேற்று நீ எனது தளர்ச்சியைக் கண்டிரங்கி இப்பாத்திகளை வெட்டாது நேரே உன் வழிச் சென்றிருந்தால் அம் மனிதன் உன்னைத் தாக்கியிருப்பான். நீயும் இங்கே என்னுடன் தங்காது சென்றதுபற்றி வருந்தி யிருப்பாய். ஆகவே நீ பாத்தி வெட்டிக்கொண்டிருந்த சமயமே மிகவும் முக்கியமானது; அப்போது நானே மிக முக்கியமான மனிதன்; எனக்கு நன்மை புரிந்ததே உனது மிக முக்கியமான கடமை. அதன் பின் அம்மனிதன் நம்மிடம் ஓடிவந்தபோது, அவனை நீ கவனித்த நேரமே மிக முக்கியமான நேரம்; ஏனெனில் அவனுடைய காயங்களுக்கு நீ கட்டுப் போட்டிராவிடில், உன்னுடன் சமாதான முறாம லேயே அவன் செத்திருப்பான். ஆதலின் அப்போது அவனே மிக முக்கியமான மனிதன்; அவனுக்கு நீ செய்த உதவியே உன் மிகமுக்கியமான வேலை. ஆகவே இதை நன்கு ஞாபகம் வைத்துக்கொள்.

"மிக முக்கியமான காலம் ஒன்றேயாகும்—அதாவது, இப்பொழுது. நமது திறமையைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியது இப்பொழுதே யாதலின் அதுவே மிக முக்கியமானது. வருவதை நாம் அறியோம். வேறெவருடனும் பழகும் சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்குமோ என்பதை யாரும் அறியோமாதலின், யாரோடு நாம் இருக்கிறோமோ அவரே நமக்கு இன்றி

யமையாதவர். மனிதப் பிறவியின் நோக்கமும் பயனும் பரோபகாரமே யாதலின் நேர்ந்தவற்கு நலன் புரிதலே நமது மிக முக்கியமான வேலை" என்று முனிவர் விடை யருளினர்.

முற்றிற்று

சக்தி மலர்கள்

1. இனி நாம் செய்யவேண்டியது யாது ?
[லியோ டால்ஸ்டாய்] ரா. விசுவநாதன் — அணு 12

2. உலகம் சுற்றும் தமிழன்
ஏ. கே. செட்டியார் — அணு 12

3. நிர்மலகுமாரி
காழி. சிவ. கண்ணுசாமி — அணு 12

4. அசலா [கிருஹதாஹ்]-[சரத் சந்திர சட்டர்ஜி]
ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு — ரூ. 1½

5. சிறை அனுபவங்கள்
கி. சடகோபன் — அணு 12

6. கூண்டுக் கிளி
[ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா] தி. ஜ. ர. — ரூ. 1

காந்தித் தாத்தா கதை
ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன்
ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன் — அணு 8

7. அமெரிக்கா
ஏ. கே. செட்டியார் — ரூ. 1

8. டால்ஸ்டாய் சிறு கதைகள் I, II, III
[லியோ டால்ஸ்டாய்] கு. ப. ரா.
ஒவ்வொரு பாகமும் — ரூ. 1

சக்தி காரியாலயம்,

46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி.டி. சென்னை.

சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துகளைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்.

இந்தச் சிறுகதைகளில் டால்ஸ்டாய், மனிதர்களுக்கு இயற்கையாயுள்ள அச்சம், வீரம், தயை, பொறுமை முதலிய குணங்களின் உண்மையான தன்மையைச் சித்திரித்துள்ளார். ருஷ்யப் பொது ஜனங்களின் ஆன்மார்த்திக விருப்பு வெறுப்புக்களையும் வருணித்துள்ளார்.

சக்தி காரியாலயம்

ஜ்யார்ஜ் டௌன் :: சென்னை